
Prof. V. SIV...
UNIVER...

# இலங்கையில்

# திராவிடக் கட்டிடக்கலை



கலாநிதி கா. இந்திரபாலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

545

வி. சிவசாமி

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில்

# திராவிடக் கட்டிடக்கலை

— ஒரு வரலாற்று அறிமுகம் —

12054:5.C

கார்த்திகேசு இந்திரபாலா B. A., Ph. D.
வரலாற்று விரிவுரையாளர்
இலங்கைப் பல்கலைக்கழகம்
பேராதனை.

கொழும்பு
1970

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது

அன்னை

**கனகாம்பிகை கார்த்திகேசு**

அவர்களின்

நினைவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | நன்றியுரை | iv |
| | முன்னுரை | v |
| I. | பல்லவர் பாணி ... ... ... | 1 |
| II. | சோழர் பாணி ... ... ... | 9 |
| III. | பாண்டியர் பாணி ... ... ... | 32 |
| IV. | விஜயநகரப் பாணி ... ... ... | 41 |
| V. | நாயக்கர் பாணி ... ... ... | 52 |
| | தகவல் தேட்டத்திற்கான நூல்களும் கட்டுரைகளும் ... ... ... | 57 |
| | இந்நூலில் வரும் கட்டிடக் கலைச்சொற்கள் ... | 60 |
| | இடப்பெயர் வரிசை ... ... ... | 61 |
| | அட்டவணை ... ... ... | 62 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

இலங்கையில் வளர்ந்த திராவிடக் கலைகளைப் பற்றித் தொடர் கட்டுரைகளை **வீரகேசரி** வாரமலரிலே எழுதுமாறு ஊக்குவித்த என் நண்பனும் **வீரகேசரி** ஆசிரியருமான திரு. கு. சிவப்பிரகாசம் அவர்களுக்கும், இக்கட்டுரைகளுள் பலவற்றை நூலாக வெளியிடுமாறு ஊக்குவித்து அதற்கான வசதி செய்த என் நண்பன் கலாநிதி க. கைலாசபதி அவர்களுக்கும், நூலை வெளியிட்டு உதவிய நண்பன் திரு. செ. கணேசலிங்கன் அவர்களுக்கும், குமரன் அச்சகத்தாருக்கும், நூலில் வெளிவரும் படங்களைப் பெற்றுத் தந்த தொல்பொருளியல் துணை ஆணையாளர் திரு. W. B. மார்க்கஸ் பர்ணுந்து அவர்களுக்கும், அட்டைப் படத்தை (வானவன் மாதேவி ஈஸ்வரத்தின் புறவுருவப் படத்தை) வரைந்து உதவிய நண்பன் திரு. W. H. விஜயபால அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகும்.

கா. இ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இந்நாட்டு மக்கள் என்ற முறையில் இலங்கைத் தமிழர் இலங்கையின் பண்பாட்டு வரலாற்றிலே எத்தகைய பங்கினைக் கொண்டிருந்தனர் என்பதையும் இலங்கையின் பண்பாட்டு வளர்ச்சிக்கு என்ன தொண்டினை ஆற்றியிருந்தனர் என்பதையும் இலகுவாகவும் சுருக்கமாகவும் எடுத்துக் கூறும் நோக்கத்துடன் ''இலங்கையில் வளர்ந்த திராவிடக் கலைகள்'' என்ற தலைப்பில் பல தொடர் கட்டுரைகளை **வீரகேசரி** வாரவெளியீட்டிலே 19-4-1968க்கும் 8-8-1968க்கும் இடைப்பட்ட காலத்திலே எழுதி வெளியிட்டேன். அவற்றுள், திராவிடக் கட்டிடக் கலையைப் பற்றிய கட்டுரைகளின் தொகுதியே இந்தச் சிறு நூல். இது ஆராய்ச்சியாளருக்காக எழுதப்படவில்லை. பொது மக்களும் மாணவரும் இலகுவிலே விளங்கிக் கொள்ளத்தக்க முறையிலே, விரிவான வர்ணனைகளும் ஆழமான ஆராய்ச்சியும் விலக்கப்பட்டு, இது எழுதப்பட்டுள்ளது. இந்தத் துறையிலே வேறு தனி நூல் இல்லாத காரணத்தினலே இது பலருக்கும் பயன்படும் என நம்புகிறேன். மேலும் இந்த விஷயத்தை ஆராய விரும்புபவர்களுக்காக நூலின் இறுதியிலே ஒரு நூற்பட்டியல் சேர்க்கப்பட்டுள்ளது.

இது இலங்கையில் வளர்ந்த திராவிடக் கட்டிடக் கலையின் வரலாற்றை மட்டும் கூறுகின்ற நூலாகும். கட்டிடக் கலையின் நுட்பங்களைப் பற்றியும் அதன் வளர்ச்சி பற்றிய விரிவான ஆராய்ச்சியைப்பற்றியும் பின்னர் வேறு நூல்வடிவிலே எழுதுவது எனது நோக்கமாகும். இதனல் இந்நூலிலே அதிக படங்களோ விளக்கச் சித்திரங்களோ சேர்க்கப்படவில்லை.

இலங்கையிலே பெரும்பான்மையினராகிய சிங்களவரும் சிறுபான்மையினராகிய தமிழரும் ஒற்றுமையுடன் வாழ்வதற்கும், நாடு முழுவதிலும் ஒரே சீரான முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கும் இரு இனத்தவரும் ஒருவரை ஒருவர் சரியான முறையிலே புரிந்து கொள்வது அவசியமாகும். தமிழ் மக்கள் முற்காலத்திலே இங்கு கொண்டிருந்த பங்கு என்ன என்பதையும் தற்காலத்திலே கொள்ள வேண்டிய பங்கு என்ன என்பதையும் சரியாக விளங்கிக் கொள்ளாவிட்டால் பெரும்பான்மையினருடன் சேர்ந்து முன்னேற முடியாது போகும். தமிழர் தாம் கொண்டிருந்த பங்கைப் பிழையாக விளங்கிக் கொண்டு, ஒரு காலத்தில் இலங்கை முழுவதும் தமிழர் தான் இருந்தனர், இலங்கையில் வளர்ந்த பண்பாடு தமிழ்ப் பண்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறிக்கொண்டு பெரும்பான்மையினருடன் சேர்ந்து முன்னேற்றத்திற்காக உழைக்காதுவிட்டால், பெருப்பான்மையினர் முன்னேறத் தமிழர் பின்தங்கியவர்களாக இருக்கவேண்டிய நிலை ஏற்படும். ஆகவேதான் இலங்கையின் பண்பாட்டு வரலாற்றிலே தமிழர் கொண்டிருந்த பங்கைச் சரியான முறையிலே விளங்கிப் பெரும்பான்மையினருடைய பங்கையும் வாஞ்சைகளையும் உணர்ந்து கொள்வது இன்றைய நிலையிலே அவசியமாகின்றது.

இலங்கையில் வளர்ந்த பண்பாட்டை ஆராய்ந்தால் அது பல இனங்கள் கூடி வளர்த்த பண்பாடு என்பதைக் காணலாம். அதிலே வட இந்தியப் பண்பாட்டு அம்சங்களும் இடம்பெற்றன; தென்னிந்திய அம்சங்களும் இடம்பெற்றன. பிற்பட்ட காலத்திலே வேறு கடல் கடந்த பிரதேசங்களிலிருந்தும் பண்பாட்டு அம்சங்கள் கொண்டுவரப்பட்டு இலங்கையின் பண்பாட்டுடன் கலக்கப்பட்டன. பெரும்பாலும், கி. பி. ஆறும் நூற்றுண்டின் பின்பு, அதாவது தென்னிந்தியாவில் பல்லவ வம்சத்தின் ஆட்சி ஆரம்பித்த காலத்திலிருந்து, தென்னிந்திய திராவிடப் பண்பாட்டின் அம்சங்கள் குறிப்பிடத்தக்க வகையிலே இலங்கையிலே பரவின. படிப்படியாக அவற்றின் செல்வாக்குக் கூடிக்கொண்டே வந்து, கண்டியர் காலத்திலே மேலோங்கியிருந்தது.

இப்படியாகக் கண்டியர் காலத்திலே மேலோங்கி, ஒரு வகையிலே தற்காலத்திலும் நிலைத்த பண்பாட்டு அம்சங்களுள் கட்டிடக் கலை, நாடகக் கலை, இசைக்கலை ஆகிய துறைகளைச் சார்ந்த திராவிட அம்சங்கள் குறிப்பிடத்தக்கவை. தென்னிந்தியாவில் விஜயநகர—நாயக்க மன்னர் காலத்திலேவளர்ச்சி பெற்ற கட்டிடக் கலையானது இலங்கையிலேயும் வளர்க்கப்பட்டு, தற்காலத்திலும் அதன் சாயலையுடைய கட்டிடங்கள் கட்டப்படுவதற்கு வழிவகுத்தது. தற்காலத்திலே, கண்டி, அநுராதபுரம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலே கட்டப்பட்ட புகையிரத நிலையங்கள், அரசாங்க அலுவலகங்கள் ஆகியவை திராவிடப் பாணியிலமைந்த தூண்களையும் பிற அம்சங்களையும் உடையனவாகக் காட்சியளிப்பதைக் காணலாம்.

இந்நூலிலே பயன்படுத்தப்பட்டுள்ள 'திராவிடக் கட்டிடக்கலை' என்ற சொற்றொடரை இங்கு விளக்குவது அவசியம் என எண்ணுகிறேன். 'திராவிடர்' என்ற சொல் பல்வேறு காலப்பகுதிகளிலே பல்வேறு இனங்கள் மத்தியிலே பலவகைப்பட்ட பொருளையுடையதாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. முற்காலத்திலே சில சந்தர்ப்பங்களில் தென்னுட்டையும் தென்னுட்டவரையும் வேறு சந்தர்ப்பங்களிலே தமிழரை மட்டும் குறிக்கும் பதமாகத் 'திராவிடம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தப்பட்டது. நவீன காலத்திலே இது ஒரு மொழிக்குடும்பத்தையும் இக்குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளைப் பேசுவோரையும் குறிப்பதற்கே பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது. இக்குடும்பத்தில் அடங்கும் மொழிகள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியவையும் அவற்றுடன் தொடர்புடைய மொழிகளுமாம். கட்டிடக் கலைத் துறையிலே 'திராவிடம்' என்ற பதம் முற்காலத்திலும் நவீன காலத்திலும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. எனினும் இருகாலப் பகுதிகளிலும் அது இரு வேறு பொருளையுடையதாகக் காணப்படுகின்றது என்று கூறமுடியும். முற்காலத்தில் இந்தியத் துணைக் கண்டத்தில் வளர்ந்த கட்டிடக் கலைக்கு நூலாக அமைந்த ஸில்பஸாஸ்த்ரங்களிலே திராவிடக் கட்டிட முறை மூன்று வகைப்பட்ட கட்டிட முறைகளுள் ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால், இந்நூல்களிலே திராவிடக் கட்டிடமுறை என்பது பொதுவாகத் தென்னிந்தியாவில் வளர்ந்த கட்டிட முறையையே குறிக்கும். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே பிரெஞ்சு ஆராய்ச்சியாளராகிய ஷோவோ துப்றெய் (Jouveau Dubreuil) என்பவர் தமிழ்நாட்டில் வளர்ந்த பழைய கட்டிடக் கலையை ஆராய்ந்து நூல்கள் எழுதியபோது 'திராவிடக் கட்டிடக்கலை' (Dravidian Architecture) என்ற பெயரைத் தமிழ் நாட்டில் பல்லவர் காலத்திலிருந்து வளர்ந்து விஜயநகரக் காலத்தில் கன்னடப் பிரதேசங்களிலும் பரவிய தமிழ்க் கட்டிடக் கலையைக் குறிப்பதற்குப் பயன்படுத்தினர். இவருக்குப் பின் எழுதிய பல ஆராய்ச்சியாளர் இப்பொருளிலே தான் திராவிடக் கட்டிடக்கலை என்பதைப் பயன் படுத்தியுள்ளனர். கிறேவ்லி (Gravely) போன்ற ஒரு சிலர் தமிழ்க் கட்டிடக்கலை (Tamilian Architecture) என்ற பெயரைத் திராவிடக் கட்டிடக்கலை என்பதற்குப் பதிலாகப் பயன்படுத்தியுள்ளனர். இந் நூலிலே திராவிடக் கட்டிடக்கலை என்பது ஷோவோ துப்றெய் பயன் படுத்திய பொருளிலே தான் கையாளப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டிலே கி. பி. ஆறும் நூற்றாண்டின் பின்பு வளர்ந்த கட்டிடக் கலையைத் திராவிடக் கட்டிடக்கலை என்று வர்ணிப்பது அவ்வளவு பொருத்தமுடையதன்று என்பதை ஒத்துக்கொள்ள விரும்புகிறேன். இங்கு ஒரு குறுகிய பொருளையுடையதாகவே இச்சொற்றொடர் இடம்பெறுகின்றது. திராவிடர் என நாம் தற்போது குறிப்பிடும் இனத்தவர் மத்தியில் வளர்ந்த கலையையோ ஆறும் நூற்றாண்டுக்கு முன்பு அவர்கள் வளர்த்த கட்டிடக் கலையையோ இது குறிக்கவில்லை. இதனால், நாம் இங்கு ஆராயும் கட்டிடக் கலையைப் பிற்பட்ட திராவிடக் கட்டிடக்கலை என்பது பெருமளவிற்குப் பொருத்தமுடையதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுக் காலத்திலே தமிழ் நாட்டில் (வேறு பல இடங்களிலும் கூட) வளர்க்கப்பட்ட கட்டிடக் கலைக்கு உதாரணங்களாக நமக்குத் தற்பொழுது கிடைப்பவை நிரந்தரமாகக் கட்டப்பட்ட கோயில்களும் மன்னர்களுடைய இல்லங்களுமேயாம். இதனால், பொதுமக்கள் இல்லங்கள், பிற நிறுவனங்கள் ஆகியவற்றை அமைப்பதற்கு எத்தகைய கட்டிடமுறை பயன்படுத்தப்பட்டது என்பதை ஆராய முடியாமலிருக்கின்றது. இலக்கியக் குறிப்புகளையும் பிற நாட்டார் குறிப்புகளையும் வைத்து ஆராயுமிடத்து, பொதுமக்கள் அழியக் கூடிய பொருள்களாலான சிறு குடிசைகளிலே (இன்றும் பல இடங்களிலே வாழ்வது போல) வாழ்ந்தனர் என்றே கூறவேண்டியுள்ளது. இதனால், இங்கு ஆராயப்படும் கட்டிடக்கலையானது உயர் வர்க்கத்தைச் சேர்ந்தோர் வளர்த்த ஒரு கலை எனலாம். ஆனால், நுணுகி ஆராய்ந்து பார்ப்போமானால், உயர்வர்க்கத்தவர் தங்கள் ஆதரவைக் கொடுத்துத் தமக்கும் கடவுளர்க்கும் இச்சிறந்த கட்டிடப் பாணியிலே இல்லங்களை அமைப்பித்திருந்தாலும், இக்கலையைப் பேணி உண்மையிலே அபிவிருத்தி செய்து வளர்த்தவர்கள் பொது மக்கள் வர்க்கத்தைச் சேர்ந்த கலைவல்லுநராகிய கற்சிற்பிகளே. இவ்வகையில், இக்கட்டிடக்கலையை ஆராய்வது பொதுமக்களுடைய கைத்திறனை எடுத்துக்காட்டும் ஒரு கலையை ஆராய்வதாக அமையும். மன்னரும் மறைய உயர்வர்க்கத்தினரும் வேறு பண்பாடுகளைத் தழுவிய காலங்களிலும் இக்கலையை அழியாது இன்றுவரை பேணி வந்தவர்கள் இப்பொழுது மக்கள் கூட்டத்தைச் சேர்ந்த சிற்பியர் குடும்பங்களே.

இக்காரணத்தினாலே, இக்கட்டிடக்கலையை ஒரு வரலாற்றாசிரியனுடைய நோக்குடனுமில்லாது, தொல்பொருளியலாளனுடைய நோக்குடனுமில்லாது, தற்காலக் கட்டிடக் கலைஞனுடைய நோக்குடன் ஆராய்ந்தால் எத்தகைய விஞ்ஞானக் கருத்துக்களும் தத்துவங்களும் தமிழ் நாட்டுச் சிற்பியரால் முற்காலத்திலே உருவாக்கப்பட்டு வளர்க்கப்பட்டிருந்தன என்பதைக் காணமுடியும். பிற்பட்ட திராவிட நாகரிகத்தின் சாதனைகளை விளங்கிக் கொள்வதற்கு இது பெரிதும் உதவும். அப்படியான ஆராய்ச்சியை இக்காலத்துக் கட்டிடக் கலைஞர் மேற்கொள்வர் என நம்புகிறேன்.

20 ஜூலை 1970 கா. இ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# I. பல்லவர் பாணி

## பல்லவருக்கு முன்

வரலாற்றுக் காலத்திலே திராவிட நாகரிகம் என நாம் அறியும் நாகரிகம் தோன்றி வளர்ந்த இடம் தென்னிந்தியாவாகும். தென்னிந்தியாவிலே தமிழ், தெலுங்கு, கன்னட, மலையாள மக்கள் வாழும் பிரதேசங்களிலே இந் நாகரிகம் வளர்ந்து கடல்கடந்த இடங்களுக்கும் பரவியது. இந்தியப் பண்பாடு வெளிநாடுகளிலே பரவிக் கொண்ட வரலாற்றைப் பொதுவாக நோக்குமிடத்து அப் பண்பாடு பெரும்பாலும் வர்த்தகத் தொடர்புகளின் விளைவாகவே வெளியுலகில் பரவியதென்பதைக் கண்டுகொள்ள முடியும். மத்திய ஆசியா, இலங்கை, தென்கிழக்கு ஆசியா ஆகிய இடங்களிலே இந்தியப் பண்பாடு பரவிய வரலாற்றை ஆராயும்போது இந்த உண்மையை அறிந்து கொள்ளலாம். வட இந்தியப் பண்பாடும் தென்னிந்தியத் திராவிடப் பண்பாடும் இத்தகைய பொருளாதாரக் காரணங்களினுலேதான் இலங்கையிற் பெரிதும் பரவின.

கிறிஸ்து வருடத்திற்கு முற்பட்ட காலத்தில் இருந்தே தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையில் நெருங்கிய பண்பாட்டுத் தொடர்புகள் இருந்து வந்தன. ஆரம்ப காலத்திலே தென்னிந்தியாவில் வாழ்ந்த நீக்கிரோ வர்க்கத்தினரும் ஆதி ஆஸ்திரேலிய வர்க்கத்தினரும் இலங்கையிற் தங்கள் மொழிகளையும் பண்பாடுகளையும் பரப்பி இருந்தார்கள். அவர்களுக்குப் பின்பு தென்னிந்தியாவிலே குடியேறிய மத்தித்தரை வர்க்கத்தைச் சேர்ந்த திராவிடரும் காலப்போக்கிலே இலங்கையுடன் தொடர்புகள்கொண்டு தம் மொழியையும் பண்பாட்டையும் இங்கும் பரப்பினர். இப்படியாகப் பிற்பட்ட காலத்து இலங்கைப் பண்பாடு உருவாகுவதற்குத் தென்னிந்தியத் திராவிட மக்களும் உதவியிருக்கின்றுர்கள்.

ஆரிய திராவிட மக்களும் பிற இந்திய இனங்களும் ஆரம்பத்தில் இலங்கைக்கு வருவதற்கு வழிவகுத்த பொருளாதாரக் காரணங்களுள் மிக முக்கியமான காரணம் வர்த்தகமாகும். வர்த்தகத்தைத் தொடர்ந்தே பின்னர் பண்பாடு பரவியது. கி. மு. மூன்றும் நூற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருண்டிற்கு முன்பாகவே திராவிட இராச்சியங்களுக்கும் இலங்கைக்குமிடையில் வர்த்தகத் தொடர்புகள் ஆரம்பித்திருக்க வேண்டும். காவேரி பட்டினத்திற்கும் இலங்கையின் வடபகுதிக்குமிடையில் இருந்த தொடர்பு பற்றி வட இந்திய ஜாதகக் கதையொன்று (அகித்திஜாதக) குறிப்பிடுகிறது. எனினும் இத்தொடர்புகள் பற்றி நமக்குத் தற்பொழுது திட்டவட்டமான சான்றுகள் கிடைக்கவில்லை என்றே கூறவேண்டும்.

ஆனால் கிறிஸ்துவுக்கு முற்பட்ட மூன்றாம் இரண்டாம் நூற்றாண்டுகளிலே அத்தகைய தொடர்புகள் நிச்சயமாக இருந்தன என்று கொள்வதற்கு நம்பகமான சான்றுகள் கிடைத்திருக்கின்றன. இந்த முற்பட்ட நூற்றாண்டுகளைச் சேர்ந்த சில பிராமிக்குகைக் கல்வெட்டுக்களிலே இலங்கையில் இருந்த சில திராவிட அல்லது தமிழ் வர்த்தகர்கள் குறிப்பிடப்பட்டுள்ளார்கள். இக் கல்வெட்டுக்கள் அநுராதபுரத்திலும் வவுனியாவிற்கு அருகாமையிலும் காணப்படுகின்றன. அநுராதபுரத்துக் கல்வெட்டின் சான்றினைக்கொண்டு கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் தமிழ்நாட்டு வர்த்தகக் குழுக்கள் இலங்கைக்கு வந்து வர்த்தகம் நடத்தினர் என்று கொள்ள இடமுண்டு. கிறிஸ்துவுக்கு முற்பட்ட இரண்டாம் நூற்றாண்டிலே இலங்கைக்கு வந்த இரு தமிழ்க் குதிரை வணிகர் அநுராதபுரத்து அரசுரிமையை அபகரித்த செய்தி மஹாவங்ஸத்திலும் தீபவங்ஸத்திலும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறாக இலங்கை வரலாற்றின் ஆரம்ப கட்டத்திலே தென்னிந்தியத் திராவிடர் இந்நாட்டுடன் கொண்டிருந்த தொடர்புகளைப் பற்றி நமக்குக் கிடைத்துள்ள மூலாதாரங்களை நோக்கினால் அவர்கள் இங்கு பெரும்பாலும் வர்த்தகத்தின் பொருட்டு வந்திருந்தமையை அறியலாம்.

இப்படியாக வந்த திராவிடர்களுட் பலர் இலங்கையின் துறைப்பட்டினங்களிலும் முக்கியமான நகரங்களிலும் குடியேறி அவ்விடங்களிலே தங்கள் பண்பாட்டை மெதுவாகப் பரப்புவதற்குத் தொடங்கியிருக்கவேண்டும். அவர்கள் கட்டிய கட்டிடங்களும் செதுக்கிய சிற்பங்களும் முதலில் இப்படியான இடங்களிலேதான் காணப்பட்டிருக்கவேண்டும். இத்தகைய ஊகம் சரியானது என்று நிரூபிக்கும் வகையில் இலங்கையில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழைய திராவிடக் கட்டிடங்கள் சிற்ப வேலைப்பாடுகள் ஆகியவற்றின் அழிபாடுகள் பெரும்பாலும் பிரதான நகர்களிலும் துறைப்பட்டினங்களிலுமே கிடைத்துள்ளன. அத்துடன் இவை பெருமளவிற்குத் திராவிட வர்த்தகர்களாலே அமைப்பிக்கப்பட்டவை என்பதற்கும் சான்றுகள் கிடைத்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலே அழியாப் பொருள்களைக் கொண்டு நிரந்தரமான பெருங் கட்டிடங்களை அமைக்கும் கலை தமிழ் இராச்சியங்களிலே அதிகம் வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. ஆந்திரப்பிரதேசத்தில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட 2ஆம் 1ஆம் நூற்றாண்டுகளில் ஸாதவாஹனர் என்ற வம்சத்தவர்களுடைய ஆட்சி நடைபெற்றபோது குகைக் கோயில்களையும் பெரும் தூபிகளையும் அமைக்கும் முறை அறியப்பட்டிருந்தது. இம்முறை கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட நூற்றாண்டுகளிலேயே அங்கு சிறப்பாக வளர்க்கப்பட்டது. அத்தகைய சிறந்த கட்டிடக்கலை கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் தமிழ் நாட்டிலும் வளர்ச்சி பெற்றிருந்தது என்று கூறுவதற்கில்லை. கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டிலே இயற்கைக் குகைகள் பௌத்த, சமணத் துறவிகளுடைய உறைவிடங்களாக மாற்றப்பட்டு இருந்தன. அப்பொழுது செங்கல்லினாலும் மரத்தினாலும் அக்குகைகளுக்குச் சுவர்கள், தூண்கள் ஆகியவை அமைக்கப்பட்டன. பல குகைகளுக்குள்ளே கருங்கற்களிலே செதுக்கப்பட்ட படுக்கைகளும் இருந்தன. இப்படியான குகை உறைவிடங்கள் சம காலத்திலே இலங்கையிலும் காணப்பட்டன. இத்தகைய இயற்கைக் குகைகளைவிடப் பாறைகளைச் செதுக்கியோ, அறுக்கப்பட்ட கருங்கற்களை அடுக்கியோ பூரணமாகக் கட்டிடங்கள் கட்டப்பட்டதற்கு இதுவரை சான்றுகளெதுவும் கிடைக்கவில்லை.

இப்படியான குகைகளை அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கட்டிடப்பாணி தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் காணப்பட்டது. அது தமிழ்நாட்டிற்கோ இலங்கைக்கோ சிறப்பாக உரிய பாணி என்று கூறமுடியாது. அது இரண்டிற்கும் பொதுவானதென்று கூறிக் கொள்ளலாம். வட நாட்டில் இருந்துவந்த பௌத்த, சமண மதத்தவர்கள் அத்தகைய பாணியை இரு பிரதேசங்களிலும் பரப்பியிருக்கவேண்டும்.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலே தமிழர்களால் அமைக்கப்பட்ட தனிநிற்கும் கட்டிடங்களின் பாகங்களெதுவும் தமிழ் நாட்டிலே கிடைக்கப்பெறாவிட்டாலும் அவர்கள் அமைத்த கட்டிடம் ஒன்றின் பாகம் இலங்கையில் இருக்கின்றது என்று கூறமுடியும். கிறிஸ்துவுக்கு முற்பட்ட இரண்டாவது அல்லது முதலாவது நூற்றாண்டில் அநுராதபுரத்தில் வர்த்தகம் நடத்திய தமிழ் வணிகக்குழு ஒன்று அந்த நகரத்திலே ஒரு முக்கியமான கட்டிடத்தை அமைத்து இருந்தது. இக்கட்டிடம் அல்லது பிராஸாதம் வணிகக் குழுவின் அங்கத்தவர்கள் சந்தித்துத் தங்கள் விவகாரங்களைக் கவனிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட கட்டிடம் என்று கொள்ளச் சான்றுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு செதுக்கப்பட்ட பரந்த பாறையொன்று இக்கட்டிடத்தின் அடித்தளமாக அமைந்ததினுல் கட்டிடத்தின் ஏனைய பாகங்கள் அழிந்திருந்தும் இந்த அடித்தளம் இன்றுவரை பேணப்பட்டிருக்கின்றது. குழுவின் சில அங்கத்தவர்கள் அல்லது அதிகாரிகள் கூட்டங்களின்போது உட்கார்ந்து கொள்வதற்காக அடித்தளப் பாறையிலேயே சில படிக்கட்டுக்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு படிக்கட்டிலும் அதில் அமரவேண்டிய அங்கத்தவர் பெயர் பொறிக்கப்பட்டு இருக்கின்றது. இந்தப் படிக்கட்டுக்களையும் கம்பங்கள் நாட்டப் படுவதற்காகத் தோண்டப்பட்டுள்ள குழிகளையும்விடக் கட்டிடத்தின் பாணியைப் பற்றியோ அல்லது பிற சிறப்பியல்புகளைப் பற்றியோ தகவல் தரும் அம்சங்கள் அவ்விடத்தில் இல்லை. இக் காரணத்திஞலேயே தமிழர்கள் அமைத்திருந்த இக்கட்டிடம் எத்தகைய கலை மரபைச் சேர்ந்தது என்று கூறமுடியாதிருக்கின்றது. இதனுல் கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்ருண்டுகளில் இலங்கையிலே கட்டிடக்கலைத்துறையில் தமிழர்கள் ஏதாவது தொண்டாற்றியிருக்கிருர்களா என்ற கேள்விக்குப் பதிலளித்தல் கஷ்டமாகும்.

கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட முதலாம் நூற்ருண்டிற்கும் ஆரும் நூற்ருண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழ் நாட்டிலே கட்டப்பட்டிருந்த சில கட்டிடங்களைப் பற்றிய குறிப்புகளும் வர்ணனைகளும் இலக்கிய ஆதாரங்களிலே கிடைக்கின்றன. கி. பி. 2 ஆம் நூற்ருண்டளவில் எழுதப்பட்ட பட்டினப்பாலையில் காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்த சில கட்டிடங்களைப் பற்றிய வர்ணனை இடம் பெற்றுள்ளது. இதற்குப் பிற்பட்ட காலத்தில் எழுதப்பட்ட சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களிலும் கட்டிடங்களைப்பற்றிய வர்ணனைகள் காணப்படுகின்றன. இவற்றின் உதவிகொண்டு தமிழ் நாட்டுக் கட்டிடங்களைப் பற்றிச் சில தகவல்களைப் பெற முடிந்தாலும் அக்கட்டிடங்களின் பாணியைப்பற்றி அதிகம் அறியமுடியாதிருக்கின்றது. இவை செங்கல், மரம், ஓடு ஆகியவற்றைப் பயன்படுத்திக் கட்டப்பட்டனவென்றும் அத்தகைய கட்டிடங்கள்பல நகரங்களிலே காணப்பட்டனவென்றும் பொதுப்படக் கூறலாம். இத்தகைய கட்டிடங்களின் அழிபாடுகள் தமிழ்நாட்டிலே இதுவரை அகழ்ந்து வெளிப்படுத்தப்படவில்லை. அரிக்கமேடு, காவிரிப்பூம் பட்டினம் ஆகிய இடங்களிலே அண்மைக் காலத்தில் அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்ட கட்டிடங்கள் கிரேக்க, ரோம வர்த்தகர்களாலே அமைக்கப்பட்டிருந்த பண்டசாலைகளாகவே காணப்படுகின்றன. காவிரிப்பூம் பட்டினத்தில் அகழ்வாராய்ச்சி இன்னும் முற்றுப்பெருத காரணத்திஞல் ஒருவேளை அங்கு தமிழராலே கட்டப்பட்ட கட்டிடங்களின் பாகங்கள் விரைவில் வெளிப்படுத்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படலாம். நிலைமை இப்படியாகக் காணப்பட்டாலும் நிலைக்கக் கூடிய கற்கட்டிடங்களைத் தமிழ் நாட்டார் கி. பி. 6ஆம் நூற்றாண்டுக்கு முன் அமைத்துக் கொள்ளவில்லை என்றே தோன்றுகின்றது.

**பல்லவர் காலம்**

கி. பி. 6ஆம் நூற்றாண்டிலேதான் தமிழ்நாட்டில் கட்டிடக்கலைத் துறையிலே புரட்சிகரமான சில அபிவிருத்திகள் ஏற்பட்டன. செங்கல், சுண்ணாம்பு, மரம் ஆகிய அழியக்கூடிய பொருட்களைப் பயன் படுத்திக் கோயில்களும் பிற பிரதான கட்டிடங்களும் அமைக்கப் பட்டுவந்த அந்நாட்டிலே ஆறும் நூற்றாண்டிலிருந்து கருங்கல்லாலான கட்டிடங்களைச் சிற்பிகள் அமைக்கத் தொடங்கினர். பல்லவ, பாண்டிய மன்னர்களுடைய பேராதரவுடன் இப்புதிய கலைமரபு தமிழ்நாட்டிலே வளர்க்கப்பட்டுப் பிற்பட்ட திராவிடக் கட்டிடக் கலை உருவாக்கப்பட்டது.

இப்புதிய கலைமரபு பல்லவ மகேந்திரவர்மன் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது என்று பலகாலமாக நம்பப்பட்டு வருகின்றது. இந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தும் சான்று மகேந்திரவர்மனுடைய கல்வெட்டொன்றில் கிடைக்கின்றது. பிரமா, ஈஸ்வரன், விஷ்ணு ஆகிய மூன்று தெய்வங்களுக்கும் தான் எடுப்பித்த கோயில் செங்கல், மரம், உலோகம், சாந்து ஆகியவற்றைப் பயன்படுத்தாது கட்டப்பட்டது என்று தனது மண்டகப்பட்டுக் கல்வெட்டிலே மகேந்திரவர்மன் மிகவும் பெருமையுடன் பிரகடனப்படுத்தியுள்ளான். அப்படிக் கூறுவதற்குக் காரணம் அக்கோயில் கட்டப்படுவதற்கு முன் பொதுவாகக் கோயில்கள் செங்கல், மரம், சாந்து, உலோகம் ஆகியவற்றினாலே கட்டப்பட்டமையே என்று ஊகிக்க இடமுண்டு. இந்த ஊகத்தின் அடிப்படையிலேயே கற்கோயில்களை அமைக்கும் மரபு மகேந்திரவர்மன் காலத்திலே ஆரம்பிக்கப் பட்டது என்று கூறவும் முடிகின்றது. இக்கருத்துப் 'பிழையாக இருக்கலாம் என்று கொள்ள அண்மையிலே சில புதிய சான்றுகள் கிடைத்துள்ளன.

மகேந்திரவர்மனுடைய தந்தையாகிய சிம்மவிஷ்ணுவின் காலத்திலே அமைக்கப்பட்ட குகைக்கோயில் ஒன்று சில ஆண்டுகளுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இக்குகைக் கோயிலைப்பற்றிய விரிவான தகவல்கள் இன்னும் வெளிவரவில்லை. எனினும், இக்கோயிலைக்காட்டிலும் முற்பட்ட குகைக் கோயில் ஒன்று பாண்டிநாட்டிலே அமைக்கப்பட்டிருக்கலாம் என்பதற்கு மிக அண்மையிலே ஓர் ஆதாரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோயில் பிள்ளையார்பட்டி என்னும் இடத்திலுள்ளது. இக் கோயிலிலே எருக்காட்டூர்க் கிழானுகிய பெருபரணன் என்பவனுடைய கல்வெட்டொன்றுண்டு. இதனை அண்மையிலே வாசித்து வெளியிட்ட திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள், கல்வெட்டின் காலம் கி. பி. 500 என்றும் அந்த ஆண்டுக்குப் பிற்பட்டதாகாது என்றும் தொல்லெழுத்தியல் அடிப்படையிலே கணித்துள்ளார். இக் கணிப்பு ஏற்கக்கூடியதாயின் மகேந்திரவர்மனுடைய காலத்திற்குக் குறைந்தது ஒரு நூற்றுண்டிற்கு முன்பே பாண்டிநாட்டிலே கற் கோவில்களை அமைக்கும் கலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது என்று கூறலாம் என்பது திரு. மகாதேவன் அவ்ர்களுடைய கருத்தாகும். இது சரியாக இருக்கலாம்.

ஆறும் நூற்றுண்டிலிருந்து இப்புதிய கலையின் வ்ளர்ச்சியைப் படிப்படியாக அவதானித்துக்கொண்டு செல்லக்கூடிய வகையிலே தமிழ்நாட்டில் இக்கட்டிடங்கள் நழுக்கு இன்றுவரை கிடைத்திருக்கின்றன. அதனுல் மகேந்திரவர்மன் காலத்தை இக்கட்டிடக்கலை வரலாற்றில் ஆரம்பக் கட்டமாகக்கொண்டு மிக அண்மைக் காலம் வரை பல்வேறு காலப் பகுதிகளைப் பிரித்துக்கொள்ள முடிகின்றது. அப்படியான காலப் பகுதிகளுள் முதலாவது பல்லவபாணிக் கட்டிடங்களினுடைய காலப்பகுதி எனப்படும். இக்காலப் பகுதியை மேலும் நான்கு சிறு பிரிவுகளாகப் பிரித்து முதலாவதை மகேந்திரவர்மன் பாணிக்காலப்பிரிவு என்றும் இரண்டாவதை மாமல்ல அல்லது நரசிங்க பாணிக்காலப்பிரிவு என்றும் மூன்ருவதை இராஜசிம்ம பாணிக்காலப்பிரிவு என்றும் இறுதியானதை நந்திவர்மன் பாணிக் காலப்பிரிவு என்றும் கட்டிடக்கலை வரலாற்ருசிரியர் அழைப்பர். இந்த நான்கு காலப்பிரிவுகளும் 6ஆம் நூற்ருண்டிற்கும் 10ஆம் நூற்ருண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் அடங்குகின்றன. பல்லவ நாட்டில் மட்டுமன்றிப் பாண்டி நாட்டிலும் கட்டப்பட்ட கட்டிடங்கள் இவ்வரலாற்றில் இடம்பெறுகின்றன.

இதே காலப்பகுதி தமிழ்நாட்டின் வ்ர்த்தகத்திலே பெருவளர்ச்சி ஏற்பட்ட காலப் பகுதியாகும். பிறநாட்டு வ்ாணிபம் முன்னைவிடத் துரிதமாக அபிவிருத்தியடைந்தது. தெற்கு இலங்கையுடனும் தென் கிழக்கு ஆசியாவிலே பல நாடுகளுடனும் தமிழ் நாட்டார் முன்னைவிடக் கூடிய தொடர்புகளை ஏற்படுத்தி வாணிபம் நடாத்தினர். தென்னிந்தியாவிலே செல்வாக்குப்பெற்றிருந்த மணிக்கிராமம், நான்கு நாடு போன்ற வணிகக்கணங்கள் இலங்கையிலும் தாய்லாந்து போன்ற இடங்களிலும் வர்த்தக முயற்சிகளிலும் பிற முயற்சிகளிலும் ஈடுபட்டிருந்தன. தாய்லாந்திலும் இலங்கையிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

இந்த வணிகக் கணங்களால் பொறிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டுக்களும் கட்டப்பட்ட கட்டிடங்களின் அழிபாடுகளும் தற்காலத்திலே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இப்படியாக ஏற்பட்டிருந்த தொடர்புகளின் விளைவாக இலங்கையிலும் தென்கிழக்காசியாவிலும் தமிழ் வர்த்தகர்களுடைய சிறு குடியேற்றங்களும் தாபிக்கப்பட்டன. இக்குடியேற்றங்கள் மூலமாகத் தமிழ்நாட்டுப் பண்பாடும் அவ்விடங்களிலே பரவத் தொடங்கியது. இக்குடியேற்றங்களிலே சிறப்பாகத் தமிழ் நாட்டுத் தெய்வங்களுக்குக் கோயில்கள் எழுப்பப்பட்டன. இக்கோயில்கள் பெரும்பாலும் தமிழ்நாட்டுக் கட்டிடப்பாணியிலேயே அமைக்கப்பட்டன. இவ்வாருகவே தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்ட புதிய கட்டிடக்கலை மரபு பிற தென்ஆசிய, தென்கிழக்காசிய நாடுகளிலே பரவத் தொடங்கியது.

இலங்கையிலே 7ஆம் நூற்ருண்டின் பின்னராக இக்கலைமரபைச் சேர்ந்த சில கட்டிடங்கள் எழுப்பப்பட்டன. 7ஆம் நூற்ருண்டிற்கு முன்பாக இந்நாட்டில் முழுமையாகக் கருங்கற்களைப் பயன்படுத்திக் கட்டிடம் எதுவும் அமைக்கப்பட்டதற்குச் சான்றில்லை. தமிழ்நாட்டில் ஏற்பட்ட அபிவிருத்தியின் விளையாக 7ஆம் நூற்ருண்டின் பின்னர் பெரும்பாலும் கற்களையே பயன்படுத்திக் கட்டிடங்கள் அமைக்கும் மரபு ஆரம்பித்தது. முதன்முறையாக இம்மரபைச்சேர்ந்த கட்டிடமொன்று தென்மாகாணத்திலே தெவிநுவர என்னுமிடத்தில் 8ஆம் நூற்ருண்டளவிலே கட்டப்பட்டு அதன் அழிபாடுகள் தற்காலம் வரை நிலைத்திருப்பதைக் காணலாம். உண்மையில் இக்கட்டிடத்தின் பெரும்பாகம் அழியாது பேணப்பட்டுள்ளது என்று கூறலாம். இக்கட்டிடம்தான் பிரசித்திபெற்ற உற்பலவண்ணன் (உபுல்வண்) கோயில். தென்னிந்தியச் செல்வாக்குப் பரவியதன் விளைவாக இக்கோயில் கட்டப்பட்டதென்பதைக் கலாநிதி S. பரணவிதான ஏற்றுக்கொண்டாலும் இதன் அமைப்பு முழுமையாகத் திராவிடக் கட்டிடக்கலைமரபைச் சேர்ந்தது என்பதை ஏற்றுக்கொள்ளத் தயங்குகின்ருர். ஆனுல் இக்கட்டிடம் திராவிடக் கலைமரபைச் சேர்ந்தது என்பதில் அதிக ஐயமில்லை என்று கூறலாம். பல்லவர் காலத்துக் கட்டிடங்களுக்கும் இதற்குமிடையில் சில முக்கிய வேறுபாடுகள் இருந்தாலும் அடிப்படை ஒற்றுமைகள் சில இருக்கத்தான் செய்கின்றன.

இக்கட்டிடத்தைப் பல்லவர் பாணியில் அமைந்த கட்டிடம் அல்லவென்றும் அது 13ஆம் நூற்ருண்டைச் சேர்ந்த பாண்டியப் பாணியிலே அமைந்த கட்டிடம் என்றும் வேருெருவர் கருத்துத் தெரிவித்துள்ளார். கட்டிடத்திலே காணப்படுகின்ற கூடு எனப்படுகின்ற அணியும் அதன் கபோதங்களும் கதவு நிலையிலே காணப்படுகின்ற நாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தம் எனப்படும் அணியும் பாண்டியர் கட்டிடங்களிலே காணப்படும் அணிகளை ஒத்தவை என்பது D. பறெற் என்பவருடைய கருத்து.

இக்கட்டிடத்தில் இப்படியான பிற்பட்ட காலப்பண்புகள் காணப்பட்டாலும் அதனுடைய அமைப்பு முற்பட்ட காலத்தைச் சேர்ந்ததாகத் தோன்றுகின்றது. இதனால் பல்லவர் காலத்திலே முதன்முறையாகத் தனிக் கற்களால் அமைக்கப்பட்ட இக் கட்டிடத்திற்குப் பிற்பட்ட காலத்திலே திருத்த வேலைகள் செய்த சிற்பிகள் பாண்டியப் பண்புகளைச் சேர்த்திருக்கமுடியும். இக்கட்டிடம் முழுமையாக 13ஆம் நூற்றாண்டிலே கட்டப்பெற்றது என்று கொள்வதற்குச் சான்று போதாதென்றே கூறவேண்டும்.

ஐயத்திற்கிடமின்றித் திராவிடக் கட்டிடக் கலையின் பல்லவப் பாணியிலே இலங்கையிற் கட்டப்பட்ட மிகப்பழைய கட்டிடம் நாலந்தவிலுள்ள கெடிகே எனப்படும் கோயிலாகும். இது ஏறக்குறைய 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இதன் மண்டபமும் கற்பக்கிருகமும் பிறபாகங்களும் சமகாலத்துப் பல்லவர் கட்டிடங்களின் பாகங்களை நெருங்கிய முறையிலே ஒத்திருக்கின்றன. இக் கோயில் இந்து வழிபாட்டு அம்சங்களும் பௌத்த வழிபாட்டு அம்சங்களும் கலந்து காணப்பட்ட மகாயான தாந்திரிகக் கோயிலாகும். இதனை அமைப்பதற்குத் தமிழ் நாட்டுச் சிற்பிகள் உதவியிருக்க வேண்டுமென்று தோன்றுகின்றது. பல்லவ கட்டிடப்பாணி இலங்கையில் நன்கு பரவியிருந்த தென்பதற்குச் சான்றில்லையாகையால் சிங்களச் சிற்பிகள் அந்தப் பாணியை நன்கு அறிந்திருந்து இக்கோயிலை அமைத்திருக்கலாம் என்று கொள்ள முடியாதுள்ளது.

9ஆம் 10ஆம் நூற்றாண்டுகளிலே அநுராதபுரத்தில் தமிழ் மக்கள் வாழ்ந்த பகுதிகளிலே சைவக் கோயில்கள் சில கட்டப்பட்டிருந்தன. அவற்றுள் சிலவற்றின் அழிபாடுகள் இன்றும் காணப்படுகின்றன. இவை பெரும்பாலும் அதிக சிக்கலற்ற எளிய முறையிலே அமைக்கப்பட்ட கட்டிடங்களின் அழிபாடுகள். இக்கோயில்கள் ஒவ்வொன்றிலும் அந்தராளம், கற்பக்கிருகம், அர்த்தமண்டபம் ஆகிய முக்கியமான மூன்று பாகங்கள் மட்டுமே செங்கற்களால் கட்டப்பெற்றவையாக இடம் பெற்றன. அவற்றின் அமைப்பு முறை திட்டவட்டமாகப் பல்லவர் காலத்துத் திராவிடக்கலை மரபைச் சேர்ந்தது. இவற்றை விடக் கருங்கற்களால் அமைக்கப்பட்ட சைவக் கோயில்களுடைய அழிபாடுகள் இக்காலப் பகுதியைச் சேர்ந்தவையாக ஓர் இடத்திலும் கிடைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்பட்ட அநுராதபுரக் காலத்திலே, அதாவது 7ஆம் நூற்றூண்டிற்கும் 10ஆம் நூற்றூண்டிற்கும் இடைப்பட்ட காலத்திலே, தமிழர் வாழ்ந்த இடங்களில், சிறப்பாகத் துறைப்பட்டினங்களிலே, கட்டப்பட்ட சைவக்கோயில்கள் பல்லவர் காலத்துத் திராவிடக் கட்டிட முறையினில் அமைக்கப்பட்டு இருக்கவேண்டுமென ஊகிக்க முடியும். இக்காலப் பகுதியிலே திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற இடங்களில் சைவக் கோயில்கள் இருந்தன என்பதற்கு வேறு சான்றுகள் கிடைத்துள்ளன. ஆனுல் அவற்றின் அழிபாடுகள் தற்காலத்திலே கிடைக்கப்பெருமையினுல் எத்தகைய கட்டிடப் பாணியிலே அவை அமைக்கப்பட்டிருந்தன என்று கூற முடியாதுள்ளது. பொதுவாகத் தமிழ் நாட்டிற்கு வெளியேயும் சைவக் கோயில்களை அமைத்துக் கொண்ட தமிழர்கள் அக் கோயில்களைத் தமிழ் நாட்டுக் கட்டிடப் பாணியில் அமைத்தனர் என்றே அறிய முடிகின்றது. அநுராதபுரத்தில் கிடைத்துள்ள சைவக் கோயில்களின் அழிபாடுகளும் திராவிட முறையிலே அமைந்திருப்பதனுல் சமகாலத்தில் அமைக்கப் பட்டிருந்த திருக்கேதீஸ்வரர் கோயிலும் திருக்கோணேஸ்வரர் கோயிலும் அவ்வாறே கட்டப்பட்டு இருக்கவேண்டுமென்று கொள்வது பிழையாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# II. சோழர் பாணி

பத்தாம் நூற்றுண்டின் இறுதியிலே சோழ அரசு தமிழ் நாட்டின் முதன்மையான அரசாக எழுச்சி பெற்றது. பல்லவ அரசைக் காட்டிலும் கூடிய கடலாதிக்கமுடைய வல்லரசாக இது விளங்கியதால் இதன் ஆதிக்கம் பல கடல் கடந்த பிரதேசங்களிலேயும் பரவியது. இதே காலத்திலே தென்னிந்தியர் நடத்திய வர்த்தகமும் அதிகரித்தது. தென்னிந்தியாவுக்கும் பிற தென்னுசிய, தென்கிழக்காசிய நாடுகளுக்குமிடையில் நடைபெற்ற வர்த்தகம் முன்னெருபோதும் பெற்றிராத முக்கியத்துவத்தைச் சோழர் காலத்திலே பெற்றது என்று கூறலாம். கடல் கடந்த வர்த்தகத்தினுலும் சோழ மன்னர்களுடைய ஏகாதிபத்தியக் கொள்கையினுலும் தமிழ் நாட்டிலே செல்வப்பெருக்கு ஏற்பட்டது. போர்களின் போது சூறையாடப்பட்ட செல்வம் பொதுமக்களுக்கு நன்மையளிக்கும் முயற்சிகளிலே செலவிடப்படாவிட்டாலும், நாட்டின் பல பாகங்களிலே கோயில்களை எழுப்புவதற்கும் கலைகளை வளர்ப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது, இதனுல் கட்டிடக் கலையும் பிற கலைகளும் நன்கு வளர்க்கப்பட்டன.

பல்லவர் வளர்த்த திராவிடக் கட்டிடக் கலையைச் சோழர் தொடர்ந்து பேணி வளர்த்தனர். தமிழ் நாடு முழுவதும் மட்டுமன்றித் தமிழ் நாட்டுக்கு வெளியே கர்நாடக, தெலுங்கு, கேரளப் பிரதேசங்களிலும் சோழர் காலத்திலே எண்ணற்ற கோயில்கள் எழுப்பப்பட்டன. பெரும்பாலான கோயில்கள் சோழர் காலத்தின் நடுப்பகுதியிலேதான் அமைக்கப்பட்டவை.

பல்லவர் பாணிக் கட்டிடங்களின் வரலாற்றைப் பல காலப் பகுதிகளாகப் பிரித்து ஆராய்ந்தது போலச் சோழர் பாணிக் கட்டிடக் கலையையும் ஆராயலாம். பொதுவாகச் சோழர் பாணிக் கட்டிடங்களின் வரலாற்றை மூன்று கட்டங்களாகப் பிரித்து ஆராய்வர். பிற்காலச் சோழவம்சத்தின் முதலாவது சுதந்திர மன்னனுகிய விஜயாலயன் தொடக்கம் முதலாவது பெரும் பேரரசனுகிய ராஜராஜனின் ஆட்சியின் ஆரம்பம் வரையுள்ள காலப்பகுதி (ஏறத்தாழ கி. பி. 850—985) முதலாவது கட்டமாகும். இரண்டாவது கட்டம் ராஜராஜனின் ஆட்சியின் ஆரம்பத்திலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIV...
UNIVERSITY OF JAF...

தொடங்கி வீரராஜேந்திரனுடைய ஆட்சியோடு முடிவடைகின்றது (ஏறத்தாழ கி.பி.985—1070). இறுதிக் கட்டம் முதலாம் குலோத் துங்க சோழனுடைய ஆட்சியோடு ஆரம்பித்துப் பேரரசின் வீழ்ச்சி யோடு முடிவடைகிறது (ஏறத்தாழ கி.பி. 1070 தொடக்கம் பதின் மூன்றும் நூற்ருண்டின் நடுப்பகுதி வரை).

முதலாவது கட்டத்திலே கட்டப்பட்ட சோழர் கட்டிடங்கள் சிறியவை. இவற்றிலே பழைய பல்லவர் பாணியின் பல அம்சங் கள் காணப்படுகின்றன. எனினும், சோழர் பாணிக்கே சிறப் பான சில புதிய பண்புகள் இக்கட்டிடங்களிலே இடம் பெற்றுள் ளன. இக்கட்டிடங்களிலே கோபுரங்களை விட விமானங்களே பெரியவையாகக் காட்சியளிக்கின்றன. பெருங்கோபுரங்களை அமைக் கும் மரபு ராஜராஜன் காலத்திலேதான் ஆரம்பித்தது. முதலாவது கட்டத்திலே அமைக்கப்பட்ட கோயில்களுள் ஸ்ரீநிவாசநல்லூர், கொடும்பாளூர், கும்பகோணம், திருநரையூர் போன்ற இடங்களி லுள்ள கோயில்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

ராஜராஜன் காலத்திலே சோழர் பாணி திடீரென ஒரு பெரு வளர்ச்சியை அடைந்தது. பேரரசின் படர்ச்சியினுல் வந்து குவிந்த செல்வம் பெருங் கோயில்களை அமைக்கும் ஒரு மரபு ஆரம்பமாகுவ தற்கு உதவியது. அப்படியாக அமைக்கப்பட்ட கோயில்களுள் தஞ் சையிலே ராஜராஜனுல் அமைக்கப்பட்ட பிருஹதீஸ்வரர் (தஞ் சைப் பெருவுடையார்) கோயிலும் கங்கைகொண்ட சோழபுரத்திலே முதலாவது ராஜேந்திரனுல் அமைக்கப்பட்ட பெருங் கோயிலும் சிறந்த உதாரணங்களாம்.

தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் மிகக் கவர்ச்சிகரமான பாகங்கள் விமானமும் கோபுரங்களும் என்று கூறுவது பிழையாகாது. இக்கோயிலின் இருபெருங் கோபுரங்களாகிய ராஜராஜன் திருவா சலும் கேரளாந்தகன் திருவாசலும் முற்பட்ட காலத்துக் கோபு ரங்கள் எல்லாவற்றையும் விடப் பெரியவை. எனினும் இக் கோபு ரங்களைவிடப் பெரியதாக இதே கோயிலின் விமானம் காட்சியளிக் கின்றது. இவ்விமானம் 190 அடி வரை உயர்ந்து வியக்கத்தக்க முறையிலே அமைந்துள்ளது.

இறுதிக்கட்டத்திலே கட்டப்பட்ட கோயில்கள் இவ்வளவு பெரியவையாக அமையாவிட்டாலும் சோழர் பாணியில் ஏற்பட்ட ஒருவகை முதிர்ச்சியைப் பிரதிபலிக்கின்றன எனலாம். இக்கட்டிடங் களின் சில அம்சங்கள் மாற்றமடைந்து காணப்படுகின்றன. இவற் றுள் மகரதோரணம், கும்பபஞ்சரம், தூண்பலகை, மண்டபத்தூண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றிலே காணப்படும் மாற்றங்கள் குறிப்பிடத்தக்கவை. அத்துடன், இக்கோயில்களிலேயுள்ள கோபுரங்கள் அவற்றின் விமானங்களைவிட மிகப் பெரியவையாய் இருப்பதுவும் குறிப்பிடத்தக்க ஓர் அபிவிருத்தியாகும். திருவெண்காடு, திருச்செங்காத்தான்குடி போன்ற இடங்களிலுள்ள சோழர் பாணிக் கோயில்களிலே ஐந்தடுக்குக் கோபுரங்கள் காணப்படுகின்றன. இந்த இறுதிக் கட்டத்துச் சோழர் பாணிக் கோயில்களுள் பிற குறிப்பிடத்தக்க கோயில்கள் தாராசுரம், திரிபுவனம், ஜம்புகேஸ்வரம் ஆகிய இடங்களிலே உள்ளன.

## ஈழத்தில் சோழர் கட்டிடக்கலை

சோழர்களுடைய ஏகாதிபத்தியமும் வர்த்தகமும் தமிழ் நாட்டின் பண்பாட்டை வெளியே பரப்புவதற்கு உதவின. இதனால் இலங்கையில் சோழர் ஏகாதிபத்தியம் பரவியபோது அவர்கள் வளர்த்த பண்பாடும் கூடவே பரவியது. பத்தாம் நூற்றாண்டின் இறுதிக் காலில் ராஜராஜன் வட இலங்கையைக் கைப்பற்றிப் பொலன்னறுவையை இராசதானியாக்கினன். இந்நகருக்கு ஜனநாதமங்கலம் என்ற புதிய பெயரும் இடப்பட்டது. ராஜேந்திர சோழன் 1017இல் முழு இலங்கையையும் அடக்கிப் பேரரசின் ஆட்சியை இங்கு உறுதிப்படுத்தினன். சோழர்களுடைய ஆட்சி இலங்கையில் 1070 வரை நீடித்தது.

சோழராட்சிக் காலத்தில் பொலன்னறுவை அதிக முக்கியத்துவம் வாய்ந்த நகரமாகக் காணப்பட்டது. அங்கு சோழ நிர்வாகிகளும் தென்னிந்திய வர்த்தகர்களும் படையினரும் தங்கியிருந்தனர். தென்னிந்தியர் குறிப்பிடத்தக்க அளவிலே வாழ்ந்த பிற இடங்கள் பதவியா, திருகோணமலை, மாதோட்டம் ஆகியவை. இத் தென்னிந்தியச் சமூகத்தினர் பெரும்பாலும் சைவர்களாக இருந்ததினால் அவர்கள் வாழ்ந்த இடங்களிலே சைவ வழிபாட்டுத்தலங்கள் தேவைப்பட்டன. இதனால் அங்கெல்லாம் சைவக்கோயில்கள் கட்டப்பட்டன. அத்துடன் பழைய கோயில்கள் திருத்திக் கட்டப்பட்டன. தமிழ்ப் பௌத்தர்கள் வாழ்ந்த இடங்களிலும் புதுப் பௌத்த பள்ளிகள் கட்டப்பட்டன.

இச்சமய நிறுவனங்கள் அனைத்தும் சோழர்களுடைய கட்டிடப் பாணியிலே கட்டப்பட்டன. ஆனால் இக்கட்டிடங்கள் ராஜராஜன் ஆட்சியின் ஆரம்பத்திலும் அதற்கு முன்னரும் தென்னிந்தியாவில் கட்டப்பட்ட கோயில்களைப் போலச் சிறியனவாக அமைந்தன. இக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்களைக் கட்டுவித்த நிர்வாகிகளும் வர்த்தகர்களும் இந் நாட்டில் நிரந்தர அக்கறை கொண்டிராத காரணத்தினாலும் இங்கு அதிக பணத்தைச்செலவிடாது தம்வருமானத்தின் பெரும் பகுதியைத் தென்னிந்தியாவிற்கு எடுத்துச்செல்லும் நோக்கத்தைக் கொண்டிரு ந்ததினாலும் அவர்கள் இங்கு பெரும் கோயில்களை அமைக்க விரும் பியிருக்கமாட்டார்கள். மேலும் அப்படியான பெருங் கோயில்களை அமைத்துக் கொள்வதற்கு உதவியளிக்கக் கூடிய வகையிலே இங்கு பெருந்தொகையான தமிழர்கள் குடியேறியிருந்திருக்க மாட்டார் கள்.

## பொலன்னறுவைக் கோயில்கள்

இதுவரை நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியின் விளைவாகப் பொலன்னறுவையிலே பத்துச் சிவன் கோயில்களும் ஐந்து விஷ்ணு கோயில்களும் ஒரு காளி கோயிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் எவை சோழர் காலத்தில், அதாவது சோழர் இங்கு ஆட்சி புரிந்தபோது, கட்டப்பட்டவை என்று கண்டுகொள்வது ஓரளவிற்கு பிரச்சினையாய் உள்ளது. இந்நிலைக்குப்பல காரணங்கள் உள. கோயில்களின் காலத்தை நிர்ணயிப்பதற்குப் பொதுவாக மூன்று காரணிகள் உதவுகின்றன. ஒன்று, கோயிலின் அமைப்பு முறையும் கட்டிடப்பாணியும்; இரண்டாவது, கோயிலிலே காணப்படும் படி மங்கள் போன்றவற்றின் பாணி; இறுதியாக, கோயிலிலே செதுக்கப் பட்டுக் காணப்படும் கல்வெட்டுக்களின் சான்று. பழைய கோயில் ஒன்று பூரணமாக அல்லது பெருமளவிற்குப் பேணப்பட்டிருந்தால் அதன் கட்டிடப்பாணியைக் கண்டு, அதன் அடிப்படையிலே அதன் காலத்தையும் நிர்ணயிக்க முடியும். பொலன்னறுவையிலுள்ள இந் துக் கோயில்களுள் ஒருசில பூரணமாகப் பேணப்பட்டிருக்கின்றன. வேறுசிலவற்றின் பாகங்கள் குறிப்பிடத்தக்க அளவிலே எஞ்சியிருக் கின்றன. ஏனையவை பெருமளவிற்கு அழிந்து அவற்றின் அடித்தளமும் ஒருசில அறுகற்களுமே எஞ்சியுள்ளன. இந்த நிலையில் அங்குள்ள கோயில்களுள் சிலவற்றின் காலத்தைக் கட்டிடப்பாணி யின் உதவி கொண்டு நிர்ணயிக்கமுடியும். ஆனால் ஏனையவற்றின் காலத்தை வேறு அடிப்படையிலேதான் நிர்ணயிக்க வேண்டும். சில கோயில்களின் அழிபாடுகளிடையே படிமங்களோ கல்வெட்டுக் களோ கிடைக்கப்பெறுவதால், அவற்றின் காலத்தையும் பெருமள விற்கு நிர்ணயிக்க முடிகின்றது. ஆனால் படிமங்கள், கல்வெட்டுக்கள் போன்றவை கோயில் கட்டப்பட்ட காலத்திற்குப் பின்னர் அங்கு சேர்க்கப்பட்டிருக்கமுடியுமாகையால் எப்பொழுதும் அவற்றின் உதவிகொண்டு திட்டவட்டமான முறையிலே கோயிலின் காலத்தை நிர்ணயிக்கமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய பிரச்சினைகளின் விளைவாகப் பொலன்னறுவையில் உள்ள சோழர்காலக் கோயில்கள் அனைத்தும் அடையாளம் கண்டு கொள்ளப்படவில்லை. மூன்று கோயில்கள் நிச்சயமாகச் சோழர் காலத்துக் கோயில்கள். அவற்றிற்கு இலங்கைத் தொல்பொருளிய லாளர் இரண்டாவது சிவ தேவாலயம், ஐந்தாவது சிவ தேவாலயம், ஆறுவது சிவ தேவாலயம் என்ற பெயர்களைக் கொடுத்துள்ளனர். இவற்றுள் இரண்டாவது சிவ தேவாலவம் பூரணமாகப் பேணப்பட்டி ருக்கும் கோயிலாகும். அது மட்டுமல்ல, பொலன்னறுவையில் உள்ள இந்துக் கோயில்களுள் சிறந்ததாகவும், இலங்கையிலுள்ள சோழர் காலக் கட்டிடங்களுள் உன்னதமானதாகவும் விளங்குகின்றது.

இரண்டாவது சிவ தேவாலயத்தின் உண்மைப் பெயர் வானவன் மாதேவி ஈஸ்வரம். இப் பெயர் அங்குள்ள கல்வெட்டுக்களிலே கொடுக்கப்பட்டுள்ளது. வானவன் மாதேவி என்பது சோழ மன்னர் களுடைய அரசியர் சிலருக்கு இடப்பட்ட பெயராகும். சுந்தர சோழனின் மனைவியும் முதலாம் ராஜராஜனின் தாயாருமான மலையமான் குடும்பந்தைச் சேர்ந்த இளவரசி ஒருத்தியின் பெயரா கவும், பின்னர் ராஜராஜனின் பட்டத்தரசியாகிய முதலாம் ராஜேந் திர சோழனின் தாயார் பெயராகவும், அதற்குப் பின்னர் முத லாம் ராஜேந்திர சோழனின் அரசியொருத்தியின் பெயராகவும் வானவன் மாதேவி என்ற பெயர் கல்வெட்டுக்களிலே குறிப்பிடப் பட்டுள்ளது. இவர்களுள் எந்த அரசியின் பெயரால் பொலன்ன றுவைக் கோயில் கட்டப்பட்டதென்பதைக் கண்டுகொள்ளுதல் அவ் வளவு கஷ்டமன்று. இக் கோயிலிலே காணப்படும் மிகப் பழைய கல் வெட்டு முதலாம் ராஜேந்திர சோழனின் ஆட்சியின் ஆரம்பத்தைச் சேர்ந்ததாகையால் அக்கல்வெட்டின் காலமளவிலேயே இக் கோயில் கட்டப்பட்டுள்ளது என்று எண்ண முடியும். ராஜேந்திர சோழன், அல்லது அவனுடைய பிரதான நிர்வாகிகள் அம்மன்னனுடைய தாயாருடைய பெயரால் இக் கோயிலைக் கட்டியிருக்கலாம். இதுவே பொதுவாக வரலாற்று ஆசிரியர்கள் கொண்டுள்ள கருத்து.

முன்பு குறிப்பிட்டது போல, இலங்கையிலே சோழர் கட்டிடப் பாணியில் அமைக்கப்பட்ட கட்டிடங்களுள் மிகச் சிறந்தது வான வன் மாதேவி ஈஸ்வரமாகும். அது ஈழத்தில் வளர்ந்த திராவிடக் கட்டிடக்கலையின் வரலாற்றில் மட்டுமல்ல, பொதுப்படப் பொலன் னறுவையில் வளர்ந்த கட்டிடக் கலையின் வரலாற்றிலும் நிகரற்ற தாக இருக்கின்றது. இதற்குக் காரணம் ஒன்றுண்டு. பொலன்ன றுவையிலே சிங்கள மன்னரும் பிறரும் எத்தனையோ சிறந்த கட்டி டங்களை அமைத்துக் கட்டிடக் கலையை வளர்த்திருந்தாலும், அந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA



நகரத்தில் இன்று பூரணமாகக் கல்லினால் கட்டப்பட்டுக் காணப் படும் ஒரே ஒரு கட்டிடம் வானவன் மாதேவி ஈஸ்வரமே. கருங்கல் லும் சுண்ணக்கல்லும் கலந்து கட்டப்பட்ட இக்கட்டிடம் தென் னிந்தியாவிலுள்ள சோழர் காலக் கட்டிடங்களின் சிறப்பியல்புகள் பலவற்றை உடையதாக விளங்குகின்றதென்பதைத் தென்னிந்திய வரலாற்றாசிரியர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

பொலன்னறுவையிலே சோழர் கட்டிடப்பாணியில் அமைக் கப்பட்ட பிற கோயில்களுள் ஐந்தாவது சிவதேவாலயம் குறிப்பிடத் தக்கது. இக் கோயிலைப் பொலன்னறுவையிலிருந்த பல தமிழர்கள் ஒன்று கூடிக் கட்டியிருக்க வேண்டுமென்று தோன்றுகின்றது. இக் கோயிலின் தூண்களில் கோயிலைக் கட்ட உதவிய சிலருடைய பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஐந்தாவது சிவ தேவாலயம் வானவன் மாதேவி ஈஸ்வரத்திற்கு அடுத்தபடியாக உள்ள சிறந்த சோழர் காலக் கட்டிடமெனலாம்.

சோழர் இலங்கையை ஆண்ட காலத்தில் பொலன்னறுவை, அவர்களுடைய ஆட்சிபீடமாக முக்கியத்துவம் பெற்றிருந்ததனால் அங்கு பல சிறந்த கோயில்கள் கட்டப்பட்டிருந்தன. பொலன்ன றுவைக்கு வெளியே பிரதான வர்த்தக நகரங்களிலும் துறைப்பட்டி னங்களிலும் சோழராட்சியின் போது தமிழர் குடியேறியிருந்தத னால் அவ்விடங்களிலும் கோயில்கள் பல எழுப்பப்பட்டன.

## பதவியாவில் சோழர் கோயில்கள்

பதவியா வடமத்திய மாகாணத்திலுள்ள ஓர் இடமாகும். அங்குள்ள பதவிக்குளம் பிரசித்தி பெற்ற பழைய குளங்களுள் ஒன்று. அதன் பழைய பெயர் தனவாபி. அங்கிருந்த பழைய நகரம் பதொன்னரு என்ற பெயரைப் பெற்றிருந்தது. சோழர் படையெடுப்பின் போது தென்னிந்தியப் படைகளின் தாக்குதல் களுக்கு இலக்காகிய நகரங்களுள் ஒன்றாகப் பதவியா காணப்பட் டது. சோழர் ஆட்சியின் போதும் அதற்குப் பின்னரும் இவ்விடம் ஒரு முக்கிய வர்த்தகத் தலமாக விளங்கிற்றென்று கொள்ள ஆதார முண்டு. பிரசித்தி பெற்ற தென்னிந்திய வணிகக் கணங்களாகிய அஞ்ஞூற்றுவர், நானாதேசியர், நகரத்தார் போன்ற கணங்கள் இங்கு குடியேறியிருந்தன. இக் கணங்களுடைய கல்வெட்டுக்கள் பல பதவி யாவிலே காணப்படுகின்றன.

பதவியாவைச் சோழர் கைப்பற்றிய பின்னர் அங்கு குடியே றிய தென்னிந்திய வர்த்தகர்களும் பிறரும் பல இந்துக் கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைக் கட்டினர். அவையனைத்தும் இன்று இடிந்து வீழ்ந்து காணப்படுகின்றன. பதவியாவின் அழிபாடுகளைத் தொல்பொருளியலாளர் இன்னும் செவ்வனே ஆராயாத காரணத்தினுல் அங்கு எத்தனை இந்துக் கோயில்கள் இருந்தனவென்று கூறமுடியாதுள்ளது. 1893இலும் பின்னர் 1960இலும் இலங்கை அரசாங்கத்தின் தொல்பொருள் ஆணையாளர்கள் நடத்திய அகழ்வாராய்ச்சியினுல் நான்கு இந்துக் கோயில்களின் இடிந்த பாகங்கள் வெளிப்படுத்தப்பட்டன. இந்தக் கோயில்கள் பௌத்த அழிபாடுகளின் மத்தியில் அல்லது பௌத்த கட்டிடங்களின் அடித்தளங்களுக்கு மேலே கட்டப்பட்டவையாகக் காட்சியளித்தன. இதனுல் முன்பு பௌத்த நிறுவனங்கள் இருந்த இடத்திலே படையெடுப்புகளின் பின்னர் இந்துக்கள் தங்கள் கோயில்களைக் கட்டினரென்று ஊகிக்க முடியும்..

பதவியாவில் மொரகொட என்ற இடத்திலேதான் இந்த இந்துக் கோயில்களின் அழிபாடுகள் காணப்படுகின்றன. மொரகொடவின் ஒரு பாகத்தில் இருந்த இந்துக் கோயிலின் எஞ்சிய பகுதிகளாக உள்ளவற்றுள் நடமாடுபவர்களுடைய புடைப்புச் சிற்பங்களைக் கொண்ட ஒரு தூண், ஒரு கணேச விக்கிரகம், சில மண்விளக்குகள் ஆகியவை குறிப்பிடத் தக்கவை. மொரகொடவின் மேற்குப்பக்கத்திலிருந்த சிவன் கோயிலின் (மூன்ருவது சிவ தேவாலயம்) அழிபாடுகளிடையே பல கற்றூண்களும் ஒரு தூண் கல்வெட்டும் யோனிக் கல்லொன்றின் துண்டுகளும் காணப்படுகின்றன. மொரகொடவின் கிழக்குப்பாகத்திலே இன்ஞெரு சிவன் கோவில் இருந்தது. அக் கோயிலின் அழிபாடுகளிடையே இரு தமிழ்க் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அக் கோயிலைக்கட்டுவதற்குப் பௌத்த கட்டிடமொன்றின் கற்கள் பயன்படுத்தப்பட்டன என்பது 1960இல் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது தெரிய வந்தது.

இன்ஞெரு கோயில் நீர்ப்பாசன வாய்க்காலுக்கு அருகாமையிலே அமைந்திருந்தது. அதன் அழிபாடுகளிடையே தாமரைச் சிற்பமொன்று, செதுக்கப்பட்ட தூண், நந்தி உருவத்தின் உடைந்த பாகங்கள் ஆகியவை காணப்படுகின்றன. இக் கோயில்கள் அனைத்தும் சோழராட்சியின் போது திராவிடக் கட்டிடப் பாணியிலே அமைக்கப்பட்டவை என்று கொள்ள இடமுண்டு. இங்கு காணப்படும் தமிழ்க் கல்வெட்டுக்களுள் மிகப் பழையது முதலாவது ராஜராஜன் காலத்தது. இக் கல்வெட்டும் பிற தமிழ்க் கல்வெட்டுக்களும் தரும் சான்றின்படி இக் கோயில்களை ஆதரித்தவர்கள் பெருமளவில் வணிகக் கணங்களேயென்று தெரிகின்றது. இங்கிருந்த கோயில்களுள் ஒன்று ராஜராஜேஸ்வரம் என்ற பெயரைப் பெற்றிருந்ததென்றும் கல்வெட்டுக்களால் அறியக்கிடக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

## மாதோட்டத்துக் கோயில்கள்

சோழர் ஆட்சியின் போது மாதோட்டம் ஒரு முக்கியமான துறைப்பட்டினமாக விளங்கியது. அங்கு குறிப்பிடத்தக்க அளவு தென்னிந்திய வர்த்தகர்கள் குடியேறியிருந்தனர். மாதோட்டத் திற்குச் சோழர்கள் ராஜராஜபுரம் என்ற பெயரை இட்டிருந்த னர். அதுமட்டுமின்றி அந்நகரத்தின் ஒரு பெருந்தெருவுக்கும் ராஜராஜப் பெருந்தெருவென்ற பெயரிடப்பட்டது. அத்துடன் நில்லாது அந்நகரத்திலே கட்டப்பட்ட கோயிலொன்றும் ராஜ ராஜன் பெயரால் ராஜராஜேஸ்வரம் என்று அழைக்கப்பட்டது. ராஜராஜன் பெயரையும் பிற சோழவம்சத்தவர்கள் பெயரையும் இங்கு நிலைநாட்டுவதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளின் விளைவே இவை. இலங்கைக்குச் சோழர்கள் இட்ட பெயராகிய மும்முடி சோழ மண்டலம் எண்பதுகூட ராஜராஜனுடைய விருதுகளுள் ஒன்றை வைத்தே இடப்பட்டது. இப்படியான பெயர்கள் சோழப் பேரரசின் எல்லாப் பாகங்களிலும் இடப்பட்டன. மாதோட்டத் திற்கு ராஜராஜபுரம் எனப் பெயரிட்டதுபோலக் கன்னடக் கங்கர் களுடைய தலைநகராகிய தழைக் காட்டிற்கும் சோழர் ராஜராஜ புரம் என்ற பெயரையிட்டனர். அதேபோலக் காஞ்சியிலிருந்த ஒரு பெரும் தெருவுக்கு ராஜராஜப் பெரும்தெரு என்று பெயரிடப் பட்டது.

தஞ்சையில் ராஜராஜன் கட்டுவித்த கோயிலுக்கு ராஜராஜேஸ் வரம் என்று பெயரிட்டது போல மாதோட்டத்திலே சோழர் காலத்தில் கட்டப்பட்ட கோயில் ஒன்றுக்கு ராஜராஜேஸ்வரம் என்ற பெயரிடப்பட்டது. இக்கோயிலை ராஜராஜனின் நிர்வாகத் தில் உயர் பதவி வகித்த ஒருவன் கட்டுவித்தான். இவன் சோழ மண்டலத்தில் க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டின் ஒரு பகுதியாகிய வேளார் நாட்டில் சிறுகூற்ற நல்லூர் என்னும் ஊருக்குக் கிழானாக விளங்கிய தாழி குமரன் என்பவனாவான்.

தாழிகுமரன் கட்டுவித்த ராஜராஜேஸ்வரம் முற்றாக அழிந்து விட்டது. மாதோட்டத்தில் இலங்கைத் தொல் பொருள் ஆராய்ச் சித் துறையினர் இன்னும் சரியான அகழ்வாராய்ச்சி நடத்தாத காரணத்தினால் தரைமட்டத்தின் கீழ் ஒளிந்திருக்கக் கூடிய அழி பாடுகளைக் கூட அறியமுடியாமல் இருக்கின்றது.

இக் கோயிலைப் பற்றிய தகவல்கள் அனைத்தும் மாதோட்டத் தில் 60 ஆண்டுகளுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ்க் கல் வெட்டு ஒன்றிலே கொடுக்கப்பட்டுள்ளன. ராஜராஜேஸ்வரக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலிலே வைகாசி விசாகத்தின் போது ஏழு நாள் விழா எடுப்பதற்கும் பிற கிரியைகள் நடத்துவதற்கும் மேற்கொள்ளப் பட்ட சில நடவடிக்கைகள் இக்கல்வெட்டிலே விரிவாகக் கூறப் பட்டுள்ளன. இவற்றை நோக்குமிடத்து ராஜராஜேஸ்வரக் கோயில் மாதோட்டத்திலே ஒரு முக்கியத்துவம் வாய்ந்த சைவ நிறுவன மாக விளங்கியிருக்க வேண்டுமென்று ஊகிக்க முடியும்.

மாதோட்டத்திலே சோழராட்சிக் காலத்திலிருந்த இன்னொரு சைவக் கோயில் திருவிராமீஸ்வரமாகும். இக்கோயிலும் பூரண மாக அழிந்துவிட்டது. ஆனால் அங்கிருந்த தமிழ்க் கல்வெட் டொன்று நமக்குக் கிடைத்துள்ளது. ராஜேந்திர சோழன் காலத் தைச் சேர்ந்த இக் கல்வெட்டிலே கோயிலைக் கட்டுவித்தவரைப் பற்றியோ அல்லது கோயிலைப் பற்றிய வேறு தகவல்களோ கொடுக்கப்படவில்லை. ராஜேந்திர சோழனின் பெருந்தனத்துப் பணிமக்களுள் ஒருவன் கோயிலுக்கு இடுவித்த தானங்கள் இக்கல் வெட்டிலே குறிப்பிடப்பட்டுள்ளன.

கி. பி. ஏழாம் நூற்றாண்டிலேயே மாதோட்டத்தில் ஒரு பிரசித்தி பெற்ற கோயிலாகத் திருக்கேதீஸ்வரம் விளங்கிற்றென்று முன்னர் குறிப்பிட்டிருந்தோம். இக் கோயில் சோழராட்சிக் காலத்திலும் பிர சித்திபெற்றிருந்திருக்குமென்பதில் ஐயமில்லை. ஆனால் அக்கோயிலின் அழிபாடுகளிடையே சோழர் காலத்துக் கலவெட்டுக்களெதுவும் கிடைக்கவில்லை. சோழர் கட்டிடப் பாணியில் அமைந்த சில தூண்களும், பிற கட்டிடப் பாகங்களும் திருக்கேதீஸ்வரத்திலே காணப்பட்டாலும் இவற்றைக் கொண்டு சோழராட்சிக் காலத் தில் திருக்கேதீஸ்வரம் அடைந்திருந்த நிலையைப் பற்றியோ அதன் கட்டிட அமைப்பைப் பற்றியோ எதுவும் கூறமுடியாது. சோழ நிர்வாகிகள் இக் கோயிலைத் திருத்திச் சிறந்த முறையிலே கட்டு வித்திருக்க முடியும்.

மாதோட்டத்திலிருந்த சோழர் காலத்துக் கோயில் ஒன்றின் கல்லொன்று சாசனமொன்றுடன் ஊர்காவற்றுறைக் கடற் கோட்டையிலே அண்மையிலே கண்டுபிடிக்கப்பட்டது. இக் கல் ஒல்லாந்தராலே மாதோட்டத்திலிருந்து கொண்டு செல்லப்பட் டது என்று கொள்ளமுடியும். இது ஒரு வேளை திருக்கேதீஸ்வரத் தின் அழிபாடுகளுள் ஒன்றாக இருக்கலாம்.

## உத்தம சோழ ஈஸ்வரம்

வடமத்திய மாகாணத்தில் கல்பே கோறளையில் அத்தாகட என்ற ஊரிலே சோழராட்சிக் காலத்தில் உத்தம சோழ ஈஸ்வரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கோயில் கட்டப்பட்டிருந்தது. இக் கோயிலும் பிற்பட்ட காலத்திலே பூரணமாக அழிந்து போன படியினால் அதன் அமைப்பு முறை பற்றி எதுவும் அறியமுடியாதுள்ளது. ஆனால் அங்கு கிடைக்கப்பெற்ற தமிழ்க் கல்வெட்டொன்று அக் கோயிலிலே அரங்கன் இராமேசன் என்பான் செய்வித்த சில நிபந்தங்களைத் தெரிவிக்கின்றது. இக் கல்வெட்டின் உதவி கொண்டே அங்கு உத்தம சோழ ஈஸ்வரம் என்ற கோயில் இருந்தது பற்றி அறிகின்றோம்.

## பண்டிதச் சோழ ஈஸ்வரம்

அண்மையிலே கண்டுபிடிக்கப்பட்ட இன்னொரு தமிழ்க் கல்வெட்டின் மூலம் பொலன்னறுவைக்கு அருகாமையிலுள்ள மண்டலகிரி (மதிரிகிரிய) என்னும் இடத்தில் இரண்டாவது ராஜேந்திர சோழனுடைய காலத்தில் பண்டித சோழ ஈஸ்வரம் என்ற சைவக்கோயில் கட்டப்பட்டிருந்தது பற்றி அறிகின்றோம். பண்டித சோழன் என்ற விருது முதலாம் ராஜேந்திரனுடைய விருதாகும். இக் கோயில் அழிபாடுகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

## பெரிய குளத்தில் பௌத்த பள்ளி

சோழராட்சியின் போது இலங்கையிலே தமிழ்ப் பேசும் இந்துக்கள் மட்டுமல்லாது தமிழ்ப் பௌத்தர்களும் வாழ்ந்தனர். இதனால் அவர்கள் வாழ்ந்த இடங்களிலே சோழர் கட்டிடப் பாணியில் பௌத்த பள்ளிகள் நிறுவப்பட்டன. அப்படியாக நிறுவப் பட்ட பள்ளிகளுள் ஒன்று இடிந்து வீழ்ந்த நிலையில் இன்றும் காணக் கூடியதாக இருக்கின்றது. இப்பள்ளியின் இடியுண்ட பாகங்கள் திருகோணமலை மாவட்டத்திலே கட்டுக்குளம்பற்றில் பெரியகுளம் என்னும் இடத்தில் காணப்படுகின்றன. சோழர் காலத்தில் இப்பள்ளி ராஜராஜன் பெயரால் ராஜராஜப் பெரும் பள்ளியென அழைக்கப்பட்டது.

வெல்கம் வெஹெர எனச் சிங்களத்தில் வழங்கும் இப்பள்ளி சோழராட்சிக் காலத்திலே புதிதாகக் கட்டப்பட்ட ஒரு பள்ளியன்று. சோழர் ஆளுவதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அப்பள்ளி தோன்றியிருந்தது. பெரிய குளம் என்ற பெயர் சோழர் ஆட்சிக்காலத்திற்குப் பிற்பட்ட பெயராகும். அவ்விடத்தில் சிங்கள மக்கள் வாழ்ந்த காலத்திலே அது வெல்கம் என்ற பெயரைப் பெற்றிருந்தது. அதனால் அங்கு கட்டப்பட்ட பள்ளிக்கு வெல்கம் வெஹெர என்ற பெயரிடப்பட்டது. கி.பி. மூன்றும் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆண்ட இரண்டாவது பாதிகதிஸ்ஸ மன்னனுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வெட்டிலிருந்து இதனை அறிய முடியும். சோழர் காலத்திலும் பெரியகுளம் வெல்காமம் என்றே அழைக்கப்பட்டது. இதனை அங்கு கிடைத்துள்ள பல தமிழ்க் கல்வெட்டுக்களிலிருந்து அறியலாம்.

சோழராட்சிக் காலத்தில் திருகோணமலைப் பகுதியிலே குறிப்பிடத்தக்க அளவு தமிழ்ப் பௌத்தர்கள் குடியேறியிருந்ததனால் வெல்கம் வெஹெர தமிழர்களுடைய பரிபாலனத்திற்கு உட்பட்டது. அப்பொழுது அது பூரணமாகத் திருத்தியமைக்கப்பட்டு அதற்கு ராஜராஜப் பெரும்பள்ளி என்றும் பெயரிடப்பட்டது.

ராஜராஜப் பெரும்பள்ளியின் அழிபாடுகள் ஈழத்துப் பௌத்த மத வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தவை. அத்துடன் இந்நாட்டுத் தமிழர் வரலாற்றிலும் முக்கியத்துவம் வாய்ந்தவை. ஏனெனில் இலங்கையிலே தமிழர் கட்டிய பௌத்தப் பள்ளிகள் பல முன்பு இருந்திருந்தாலும் அவற்றுள் ராஜராஜப் பெரும்பள்ளியின் அழிபாடுகள் மட்டுமே நமக்குக் கிடைத்துள்ளன. ஏனையவை முற்றாக அழிந்துவிட்டன.

**1953** இல் இலங்கைத் தொல்பொருளாராய்ச்சித் துறையினர் பெரிய குளத்தில் அகழ்வாராய்ச்சி நடத்தினர். அப்பொழுது ஒரு பிரதான புத்தராலயமும் பல சிறு ஆலயங்களும் ஒரு விக்கிரக மண்டபமும் (பிலிமகே) ஒரு சிறு தூபியும் வெளிப்பட்டன.

இக்கட்டிடங்கள் இலங்கையிலுள்ள பிற பௌத்த கட்டிடங்களைப் போன்றவை அல்ல. அவை பொலன்னறுவையில் உள்ள சிவ தேவாலயத்தை ஒத்தவை. அவற்றின் பாணி சோழர் கட்டிடப் பாணியாகும். இது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். ஏனெனில் பொதுவாக இலங்கையிலே வாழ்ந்த தென்னிந்தியர் தாம் கட்டிய இந்துக் கோயில்களையே திராவிடக் கட்டிடப் பாணியில் அமைத்தனர். சோழராட்சியின் போது தங்கள் பௌத்த பள்ளிகளைக் கூடத் திராவிடக் கட்டிடப் பாணியிலேயே அமைத்து அக்கட்டிடக் கலையை அவர்கள் இங்கு வளர்த்தனர் என்பதற்கு ராஜராஜப் பெரும்பள்ளி சான்று பகர்கின்றது.

இதுவரை கூறியவற்றால் சோழராட்சியின் போது முன்னைவிடக் கூடிய அளவிலே திராவிடக் கட்டிடப் பாணியில் அமைந்த கட்டிடங்கள் இலங்கையில் இடம்பெற்றன என்று காண முடிகின்றது. இவ்வாறு இங்கு வளர்க்கப்பட்ட கட்டிடக்கலை சோழராட்சியின் பின்னரும் இங்கு நிலைத்துத் தன் செல்வாக்கைப் பரப்பியிருந்தது. இதனால் பொலன்னறுவைக் காலத்திலே சிங்கள மன்னர் கட்டுவித்த கட்டிடங்கள் பலவற்றில் இக்கட்டிடப் பாணியின் சாயலைக் காணக் கூடியதாய் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

## சோழராட்சிக்குப் பின்

இலங்கையில் சோழர் ஆட்சி கி. பி. 1070இல் முடிவடைந்தது. சிங்கள இளவரசனான முதலாம் விஜயபாகு தென்னிந்தியப் படைகளை வெற்றிகொண்டு இலங்கைக்கு அரசியற் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தான். ஆனால் பண்பாட்டுத் துறையிலே இலங்கை பூரண சுதந்திரத்தைப் பெறவில்லை. சோழராட்சிக் காலத்திலே பரவத் தொடங்கிய தென்னிந்தியச் செல்வாக்குச் சிங்கள மன்னர் காலத்திலும் தொடர்ந்து பரவியது. இந்தச் செல்வாக்கினைப் பொலன்னறுவைக் காலத்திலே கலைத்துறையிலும் சமயத் துறையிலும் கூடிய அளவிற் காணலாம்.

பழைய சிங்களக் கட்டிடக்கலை சோழராட்சிக் காலத்திலே ஆட்சியாளர் ஆதரவை இழந்து குறிப்பிடத்தக்க அளவிற்குக் குன்றியிருந்தது என்பதே ஆராய்ச்சியாளர் கருத்தாகும். இக்காலப் பகுதியில் திராவிடக் கட்டிடக் கலைக்குக் கிடைத்த ஆதரவின் விளைவாகத் தென்னிந்தியச் சிற்பிகள் பலர் இங்கு வந்து இக்காலத்துக் கட்டிடங்களை அமைக்க உதவியிருக்க வேண்டும். சிங்களச் சிற்பிகளும் இவர்களுக்கு உதவியிருக்கலாம்.

இவ்விஷயம் சம்பந்தமாக ஈழத்துத் தொல்பொருளியலாளர்களிடையே ஓரளவு கருத்து வேற்றுமை காணப்படுகின்றது. சிங்கள மக்கள் கட்டிடக்கலை, படிமக்கலை, ஓவியம் ஆகியவற்றிலே வல்லுனர் என்றும், தங்கள் கடவுள்களுக்குக் கோவில்களைக் கட்டுவதற்காகவும் சோழர் தாங்கள் அடிப்படுத்திய சிங்களச் சிற்பிகளை வேலைக்கமர்த்தினர் என்றும் கலாநிதி சாள்ஸ் கொடகும்புர கூறுகிருர். ஆனால் கலாநிதி செனரத் பரணவிதான வேறொரு கருத்தைத் தெரிவித்துள்ளார். "சிங்களச் சிற்பிகளுக்கும் ஓவியக் கலைஞர்களுக்கும் தங்கள் கலைகளை வளர்ப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஏனெனில் அவர்களை ஆதரித்த மன்னர்களும், பிரபுக்களும், பௌத்த சங்கமும் சோழராட்சியின்போது (அவர்களுக்கு ஆதரவளிக்க) இருக்கவில்லை" என்று கலாநிதி பரணவிதான கூறுகிருர். சிங்களச் சிற்பிகளுக்கு முன்போல ஆதரவு கிடைத்திருக்காவிட்டாலும் அவர்கள் சோழர்களுடைய கட்டிடங்களை அமைத்துக்கொள்ள உதவியிருக்க முடியும். இருந்தாலும் சோழர் கட்டிடங்கள் திராவிடப் பாணியிலே அமைக்கப்பட்டமையினுல் அவற்றைக் கட்ட உதவிய சிங்களச் சிற்பிகள் தங்களுடைய பழைய கட்டிடப் பாணியைப்பேணி வளர்ப்பதற்குச் சந்தர்ப்பம் பெற்றிருக்க மாட்டார்கள். அது மட்டுமல்ல, சோழராட்சியின்போது செல்வாக்குப் பெற்றிருந்த திராவிடப் பாணியை அறிந்து கொள்ள அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்ததினுல் அவர்கள் அறிந்திருந்த பழைய சிங்களக் கலையில் மாற்றங்கள் ஏற்படுவதற்கு வசதி அளிக்கப்பட்டது. அவர்கள் நிச்சயமாகத் தென்னிந்தியச் செல்வாக்கிற்கு உட்பட்டிருப்பர்.

## சிங்கள மன்னர் நிர்மாணித்த கட்டிடங்கள்

இதன் விளைவாகச் சோழராட்சியின் பின்னரும் தென்னிந்தியக் கட்டிடக் கலையின் செல்வாக்கு இலங்கையிலே நீடித்தது. அத்துடன் சோழராட்சியின் போது இலங்கைக்கு வந்திருந்த தென்னிந்தியச் சிற்பிகள் தொடர்ந்து இங்கு வசித்து வந்ததினுல் அவர்களுதவியுடன் கட்டப்பட்ட கட்டிடங்களிலே திராவிடக் கலையின் சாயல் காணப்பட்டது.

இந்த நூற்ருண்டின் ஆரம்பத்திலே பொலன்னறுவையில் அகழ்வாராய்ச்சி நடத்திய மேல்நாட்டுத் தொல் பொருளியலாளர் அந்நகரத்தின் கட்டிடங்கள் பெருமளவிற்கு திராவிடப் பண்புகளை உடையவை என்று கூறினர். ஆனுல் கலாநிதி பரணவிதான அக்கருத்தினைப் பிழை என்பர். அவருடைய கருத்தின்படி பொலன்னறுவையிலே சிங்கள மன்னர்களால் கட்டப்பட்ட கட்டிடங்களின் பாணி அநுராதபுரத்தில் முன்னர் வளர்ந்த சிங்களக் கட்டிடப் பாணியிலிருந்து அபிவிருத்தி அடைந்த பாணியாகும். தூபாராம, லங்காதிலக, திவங்க போன்ற கட்டிடங்களைப் பொலன்னறுவையிலுள்ள சிவ தேவாலயங்களுடன் ஒப்பிட்டு ஆராய்ந்தால் இந்த உண்மை புலப்படும் என்று அவர் மேலும் கூறியுள்ளார். சிங்கள மன்னர் காலத்திலே பொலன்னறுவையிற் கட்டப்பட்ட பௌத்த கட்டிடங்கள் பூரணமாகத் திராவிடக் கட்டிடப் பாணியிலே அமைந்திருக்கின்றன என்று சொல்ல முடியாது. ஆனுல் அதே நேரத்திலே இக்கட்டிடங்கள் திராவிடச் சாயல் அற்ற முறையிலே பூரணமாகப் பழைய சிங்களப் பாணியிலே அமைந்துள்ளன என்றும் கூறுவதற்கில்லை. இக்கட்டிடங்களின் சில அம்சங்களைப் பொறுத்த மட்டிலே திராவிடப் பாணியின் பண்புகள் இடம் பெற்றிருக்கின்றன என்று கூறலாம். ஆனுல் பெரும்பாலான கட்டிடங்கள் பழைய கட்டிடப் பாணியின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன.

இக்கட்டிடங்களிலே திராவிடப் பண்புகள் இடம்பெற்றமைக்கு முன்பு கூறியது போல இரு காரணங்கள் உள. ஒன்று சிங்களச் சிற்பிகள் திராவிடக் கலைஞர்களுடைய செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தமை. மற்றது பராக்கிரமபாகு போன்ற மன்னர்கள் பல தென்னிந்தியச் சிற்பிகளை வேலைக்கமர்த்தியிருந்தமை. முதலாவது பராக்கிரமபாகு பாண்டி நாட்டிலே நடத்திய யுத்தத்தின்போது, அவனு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷடய படைகளினுலே தோற்கடிக்கப்பட்டு அகப்பட்ட பல தென்னிந்தியப் படையினர் பராக்கிரமபாகுவின் ஆணையின் பேரிலே இலங்கைக்கு கொண்டு வரப்பட்டு ரதன வாலுக சேத்திய போன்ற கட்டிடங்களைத்திருத்தியமைக்க அமர்த்தப்பட்டனர் என்று சூளவங்ஸ நூல் கூறும். அதே நூலின் கூற்றின்படி பொலன்னறுவையிலே பராக்கிரமபாகு கட்டுவித்த மஹாதூபம் தமிழ்க் கைதிகளாலே கட்டப்பட்டு, அதன் காரணமாகத் தமிளதூப என்ற பெயரைப் பெற்றது.

இவ்வாறு கைதிகளாக வந்த தமிழர்களைவிட இங்கு முன்பு வந்து குடியேறிய தமிழ்ச் சிற்பிகளும் புதிதாக வரவழைக்கப்பட்ட தென்னிந்தியச் சிற்பிகளும் பல கட்டிடங்களை அமைப்பதற்கு உதவியிருந்தனர். தென் இந்தியாவிலிருந்து சிற்பிகள் வரவழைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதைக் கலாநிதி பரணவிதானவும் ஒப்புக்கொள்ளுவர். தென்னிந்தியச் சிற்பிகள் நிச்சயமாக உதவியிருந்தனர் என்று கூறத்தக்க முறையிலே பொலன்னறுவை, பதவியா போன்ற இடங்களிலே சில கட்டிடங்களின் கற்களிற் சிற்பிகளாற் பொறிக்கப்பட்ட தமிழ் எழுத்துக்கள் காணப்படுகின்றன.

## இந்துக் கோயில்கள்

திராவிடப் பண்புகளுடன் விளங்கும் பௌத்த கட்டிடங்கள் திராவிடச் செல்வாக்கினைப் பிரதிபலிக்கின்றனவே ஒழியத் தனிப்பட்ட முறையிலே இங்கு வளர்ந்த திராவிடக் கட்டிடக் கலைக்கு எடுத்துக் காட்டுகள் ஆகமாட்டா. அப்படியான எடுத்துக் காட்டுகளாக விளங்கியவை இக்காலத்திலே கட்டப்பட்ட இந்துக் கோயில்களே. சோழராட்சிக்குப்பின் பொலன்னறுவையிலே பல கோயில்கள் கட்டப்பட்டன. முன்னர் குறிப்பிட்டது போல இரண்டாம் சிவ தேவாலயத்தையும், ஐந்தாம் சிவ தேவாலயத்தையும் தவிர, ஏனைய சிவாலயங்கள் 12 ஆம், 13 ஆம் நூற்றுண்டுகளைச் சேர்ந்தவை என்று கொள்ள முடியும். இவற்றுள் முதலாவது சிவ தேவாலயம் 13ஆம் நூற்றுண்டிலே பாண்டியர் கட்டிடப் பாணியில் அமைக்கப்பட்டது. ஏனையவற்றுள் பெரும்பாலானவை பதின்மூன்றும் நூற்றுண்டில் மாகராஜன் ஆட்சியின் போது கட்டப்பட்டவை என்று தோன்றுகிறது. இப்பிற்பட்ட சிவாலயங்களுள் மூன்றுவது சிவ தேவாலயத்தைத் தவிர ஏனையவை செங்கல்லினுல் அமைக்கப்பட்டவை. மூன்றுவது சிவ தேவாலயம் பெருமளவிற்குக் கல்லினுல் அமைக்கப்பட்டதாகும். இவை அனைத்தும் 1902 க்கும் 1909க்கும் இடைப்பட்ட காலத்திலே அகழ்வாராய்ச்சியினுல் வெளிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தப்பட்டவை. இவை பெருமளவிற்கு இடிந்து அழிந்த நிலையிலே காணப்படுவதினுல் அவற்றின் கட்டிடப் பாணி பற்றி விரிவாகக் கூறமுடியாது. இரண்டாவது சிவ தேவாலயம் மட்டுமே குறிப்பிடத்தக்க அளவிற்குப் பேணப்பட்டுள்ளது. இதன் கட்டிடப்பாணி பாண்டியக் கட்டிடப் பாணியாகையால் இக்கோயிலைப் பற்றிப் பின்னர் விபரங்கள் கொடுக்கப்படும்.

பொலன்னறுவையில் பல விஷ்ணு தேவாலயங்களும் இக்காலப் பகுதியிலே கட்டப்பட்டன. இவற்றுள் இரண்டாவது விஷ்ணு தேவாலயத்தைத் தவிர ஏனையவை செங்கல்லினுல் கட்டப்பட்டவை. கதவு நிலைகளும் தூண்களும் மட்டுமே கல்லினுல் ஆக்கப்பட்டுள்ளன.

இக்கோயில்கள் எல்லாம் திராவிடக் கட்டிடங்களின் அமைப்பிலே உள்ளன. ஆனல் ஒன்ருவது தென்னிந்தியாவிலே கட்டப்பட்ட பெருங் கோயில்களை ஒத்ததாக அமையவில்லை. சோழராட்சிக் காலத்திலே கட்டப்பட்டவை போல இக்காலத்திலும் சிறு கோயில்களே கட்டப்பட்டன. ஆனல் முன்னைவிடக் கூடிய எண்ணிக்கையிலே கட்டப்பட்டன.

## பௌத்த கோயில்களாக மாறியவை

ஒரு காலத்திலே ஒரு குறிப்பிட்ட சமயத்தவர்கள் வாழ்ந்த இடத்தில், பின்னெரு காலத்தில் வேறு சமயத்தவர்கள் வாழ்ந்தால் முந்திய சமயத்தவர்களுடைய நிறுவனங்கள் பல பிற்பட்ட சமயத்தவர்களுடைய நிறுவனங்களாக மாறுவது வழக்கம். இதனை எல்லா நாடுகளிலும் காணக் கூடியதாய் உள்ளது. இலங்கையிலே ஒரு காலத்தில் பௌத்தர்கள் வாழ்ந்து, இப்பொழுது இந்துக்கள் வாழும் இடங்கள் பலவற்றில் பௌத்த நிறுவனங்கள் இந்து நிறுவனங்களாகி நிற்கின்றன. அதே போல ஒரு காலத்தில் இந்துக்கள் கட்டிய கோயில்கள் பலவும் பிற்பட்ட காலத்திலே பௌத்த நிறுவனங்களாக மாற்றப்பட்டுள்ளன.

இத்தகைய மாற்றத்திற்குச் சில உதாரணங்களைப் பொலன்னறுவையிலே காணலாம். மூன்ரும் சிவ தேவாலயத்திற்குத் தென்-கிழக்கே அரை மைல் தூரத்திற்கு அப்பால் திராவிடச் சாயலுடைய கட்டிடம் ஒன்று 1911இல் அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்டது. அது ஒரு பௌத்த விக்கிரகசாலை (பிலிமகே) யாகக் காட்சியளித்தது; ஆனல் அக்கட்டிடத்தின் அமைப்புமுறை திராவிடப்பாணியிலமைந்த விஷ்ணு கோயிலொன்றின் அமைப்பு முறையாகக் காணப்பட்டது. அதன் சுவர்களிலே காணப்பட்ட கபோதம் போன்றவற்றை நோக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞல், அக்கட்டிடம் ஆரம்பத்திலே விஷ்ணு கோயிலாக இருந்து பின்னர் பௌத்த கோயிலாக மாற்றப்பட்டது என்று கண்டுகொள்ளலாம். அவ்வாறு மாற்றப்பட்டபின் பௌத்த கோயில்களிலே காணப்படும் சந்திர வட்டக் கல்லொன்று இக்கட்டிடத்தின் வாயிலிலே சேர்க்கப்பட்டுள்ளது. இதனை ஒரு விஷ்ணு கோயிலாக அடையாளம் கண்டு கொண்டவர் இங்கு அகழ்வாராய்ச்சி நடத்திய திரு. பெல் என்பவராவர்.

இவ்வாறு பொலன்னறுவையில் இடிந்தும் மறைந்தும் காணப்படும் இந்துக் கோயில்களும் திராவிடப் பண்புகளுடன் விளங்கும் பௌத்த கட்டிடங்களும் எமக்கு அறிவிக்கும் ஓர் உண்மை என்னவெனில் 12ஆம், 13ஆம் நூற்றுண்டுகளிலே பல தென்னிந்தியச் சிற்பிகளும் தென்னிந்தியச் செல்வாக்கிற்குட்பட்ட சிங்களச் சிற்பிகளும் திராவிடக் கட்டிடக்கலையை இங்கு வளர்ப்பதற்கு உதவியிருந்தனர் என்பதாகும். பொலன்னறுவை தொடர்ந்து இந்தக் காலப் பகுதியிலே தலைநகராக இருந்தமையினுல் அங்கே கூடிய தொகையில் திராவிடக் கட்டிடங்கள் அமைக்கப்பட்டன. ஆனுல் இதே காலப்பகுதியில் பொலன்னறுவைக்கு வெளியேயும் பல கோவில்கள் கட்டப்பட்டன.

பொலன்னறுவைக் காலத்துத் திராவிடக் கட்டிடங்களாக இடிந்து வீழ்ந்த நிலையிலாவது நமக்குத் தற்போது கிடைத்துள்ள கட்டிடங்கள் பெரும்பாலும் பொலன்னறுவையிலேயே காணப்படுகின்றன. பொலன்னறுவைக்கு வெளியே அதேகாலப் பகுதியில் பெருங் கோயில்கள் கட்டப்பட்டு இருந்தாலும் அவை பெருமளவிற்கு அடையாளம் கண்டுகொள்ள முடியாதவாறு அழிந்து போயின. வட இலங்கையில் பல்வேறு பாகங்களிலே சிதறுண்டு காணப்படும் விக்கிரகங்களைக் கொண்டும் சாசனங்களைக் கொண்டுமே ஒரு காலத்திலே அங்கெல்லாம் இந்துக் கோயில்கள் இருந்தன என அறியமுடியும். சில இடங்களிலே பழைய கோயில்களின் ஒரு சில பாகங்கள் தூண்களோ அல்லது கதவு நிலைகளோ அல்லது அடித்தளங்களோ காணப்படுகின்றமையால் ஓரளவிற்குச் சில கோயில்களின் கட்டிட அமைப்பினைப் பற்றி அறிந்து கொள்ளலாம். ஏனைய கோயில்களின் அமைப்பினைப் பற்றி எதுவுமே கூறமுடியாது.

## கந்தளாய்க் கோயில்கள்

சோழப்படைகளை இலங்கையில் இருந்து அகற்றிப் பொலன்னறுவையிலே சிங்கள வம்சத்தின் ஆட்சியை ஆரம்பித்து வைத்த முதலாவது விஜயபாகு சோழருடைய பகைவனே ஒழியத் தமிழரையோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து மதத்தையோ எதிர்த்தவனல்லன். முன்பு சோழருக்கு உதவிய வேளைக்காரத் திராவிடப் படைகள் (இப்படைகளிலே தெலுங்கர், மலையாளர், தமிழர் ஆகிய மூன்று மொழிப் பிரிவினர் இடம் பெற்றிருந்தனர்) விஜயபாகுவுக்கும் சேவைபுரிந்து அவனுடைய ஆதரவைப் பெற்றனர். தலைநகரிலிருந்த அதிமுக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாகிய தளதாய்ப் பெரும்பள்ளி (தந்ததாதுக் கோயில்) இவ்வேளைக்காரருடைய பாதுகாப்பில் விஜயபாகுவால் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதேபோல இராச்சியத்திலே குடியேறியிருந்த பல தென்னிந்தியச் சைவ வைஷ்ணவக் குடிகள், சிறப்பாகப் பிராமணர், விஜயபாகுவின் ஆதரவைப் பெற்றிருந்தனர். இக்குடிகள் குறிப்பிடத்தக்க அளவிலே குடியேறியிருந்த பகுதிகளில் ஒன்று தற்காலத்துத் திருகோணமலை மாவட்டம். இம்மாவட்டத்திலே கந்தளாய், திருகோணமலை போன்ற இடங்களில் விஜயபாகுவின் காலத்திலும் அதற்குப்பின்னரும் பல இந்துக்கோயில்கள் கட்டப்பட்டன.

முதலாவது விஜயபாகுவினுடைய காலத்திலே கந்தளாயில் பல பிராமணக் குடிகள் வசித்தனர். இதனுல் அவ்விடம் ஒரு சதுர்வேதிமங்களமாக (பிராமணக் குடியேற்றமாக) விளங்கியது, அதற்கு விஜயராஜச் சதுர்வேதிமங்களம் என்ற பெயர் இடப்பட்டது. இப்பெயர் விஜயபாகு பிராமணருக்கு அளித்த ஆதரவைக் காட்டுகிறது. கங்கதலா என்ற பழைய சிங்களப் பெயர் கந்தலா என மாறித் தமிழிலே கந்தளாய் என வழங்கி விஜயபாகு காலத்திலே விஜயராஜச் சதுர் வேதி மங்களம் என்ற புதுப் பெயரைப் பெற்றது. இந்த ஊரில் விஜயபாகுவின் பெயரைத் தாங்கிய சைவக்கோயில் ஒன்றும் இக்காலத்திலே கட்டப்பட்டது.

விஜயபாகுவின் பெயரைத் தாங்கிய இக் கோயில் விஜயராஜ ஈஸ்வரமாகும். கல்வெட்டுக்களிலே இதனைத் தென் கைலாசம் ஸ்ரீ விஜயராஜ ஈஸ்வரம் என்று குறிப்பிட்டுள்ளனர். திருக்கோணஸ்வரக் கோயில் பிற்பட்ட காலத்திலே தக்ஷிண கைலாசம் எனவும் அழைக்கப்பட்டதுபோலக் கந்தளாய்க் கோயில் தென்கைலாசம் என்ற பெயரையும் பெற்றிருந்தது.

விஜயராஜ ஈஸ்வரம் இருந்த இடத்திலே இப்போது அதன் இடியுண்ட பாகங்கள் தான் இருக்கின்றன. 1933இல் அங்கு நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது ஒரு சைவக் கோயிலும் விஜயபாகுவின் 42ஆவது ஆட்சியாண்டைச் சேர்ந்த ஒரு தமிழ்க் கல்வெட்டும் 3 1/2 அடி உயரமுள்ள விஷ்ணுப்படிமமொன்றின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்ங்களும் கிடைத்தன. அகழ்வாராய்ச்சி பூரணமாக நடத்தப் படாதபடியால் இன்னும் எத்தகைய தொல் பொருள்கள் மறைந் துள்ளன என்று சொல்ல முடியாது.

இரண்டாவது கஜபாகுவின் காலத்திலும் கந்தளாய் ஒரு பிர சித்திபெற்ற சைவத்தலமாக விளங்கியதால் அக்காலத்திலும் விஜயராஜ ஈஸ்வரம் சிறப்புற்றிருந்திருக்க வேண்டும். பதின்மூன் றும் நூற்றுண்டின் பின்னரே அது அழிந்திருக்க வேண்டும்.

## விக்கிரம சலா மேக ஈஸ்வரம்

பொலன்னறுவைச் சிங்கள மன்னர் காலத்திலே சைவர்கள் குடியேறியிருந்த இன்னேர் இடம் குருநாகல் மாவட்டமாகும், இக்காலத்திலே அங்கு கட்டப்பட்டிருந்த சைவக் கோயில்களுள் ஒன்றுமாகல்ல என்ற இடத்திலிருந்த விக்கிரம சலாமேக ஈஸ்வரம். மாகல்ல என்ற இடம் பன்னிரண்டாம் நூற்றுண்டில் மாகல் என் றும் விக்கிரம சலாமேக புரம் என்றும் அழைக்கப்பட்டது. அக் காலத்திலே ஆட்சிபுரிந்த முதலாம் விக்கிரமபாகு என்பான் அபய சலா மேக என்ற விருதுப் பெயரைப் பெற்றிருந்தான். அப்பெயரை அடிப்படையாக வைத்தே மாகல் என்ற ஊரும் அங்கு கட்டப் பட்ட கோயிலும் விக்கிரம சலாமேக என்ற பெயரைப் பெற்றிருந் தன. இக்கோயில் பிற்காலத்திலே இடிக்கப்பட்டு அதன் கற்களை யும் தூண்களையும் கொண்டு புது முத்தாவ என்ற இடத்திலே ஒரு பௌத்த கோயில் கட்டப்பட்டது. அவ்விடத்திலே பழைய கோயிலில் இடம் பெற்றிருந்த ஒரு தமிழ் கல்வெட்டு கிடைக்கப் பெற்றதால் பழைய கோயிலைப்பற்றிய சில விபரங்களை அறிய முடிந் துள்ளது.

பன்னிரண்டாம் நூற்றுண்டில் விக்கிரம சலா மேக ஈஸ்வரம் ஒரு பிரசித்தி பெற்ற கோயிலாக விளங்கியிருக்க வேண்டும். அக் கோயிலுக்குத் தானமளித்தோருள் குறிப்பிடத்தக்கவராகக் காணப் படுபவர் சோழப் பேரரசனுகிய முதலாம் குலோத்துங்க சோழனின் மகளும் பாண்டிய இளவரசனுகிய வீரப்பெருமாளின் மனைவியுமா கிய சுத்தமல்லியாழ்வார் என்பவராவர். அவர் இக் கோயிலுக்கு 1118இல் ஒரு திருநந்தாவிளக்கு எரிப்பதற்காகப் பத்துக் காசும் மூன்று சாண் நீளத்திலே ஒரு தராநிலை விளக்கும் தானமாக அளித் திருந்தார்.

பொலன்னறுவைக் காலத்திலே வடமத்திய மாகாணத்தின் பல பாகங்களிலே கட்டப்பட்டிருந்த சைவக் கோயில்கள் பெரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலும் அழிந்துபோயின. அவை இருந்த இடங்களிலே இப்பொழுது ஒருசில விக்கிரகங்கள் மட்டுமே கிடைக்கப்பெற்றுள்ளன. உதாரணமாக, ஹிங்குராக்கம என்ற இடத்திலே அக்கினி, யமன், இந்திரன் ஆகியோரின் விக்கிரகங்கள் கிடைத்துள்ளன. ஆனால் இவற்றைப் பாதுகாத்த கோயில் பூரணமாக அழிந்துவிட்டது. இதே போல மஹாகணதராவ என்ற இடத்திலே ஒரு பாழடைந்த தேவாலயத்திற்கருகில் சாமுண்டி தெய்வத்தின் புடைப்புச் சிற்பமும் ஸப்த மாதர்களுடைய சிற்றுருவங்கள் பலவும் கிடைத்துள்ளன. மேலும் அநுராதபுர மாவட்டத்திலே வேரகல என்னும் இடத்தில் அர்த்த நாரீஸ்வரருடைய சிறந்த விக்கிரகம் ஒன்றும் கிடைத்துள்ளது. இத்தகைய விக்கிரகங்களை ஒருகாலத்திலே பாதுகாத்த கோயில்கள் அழிந்துள்ள காரணத்தினாலும் அவை இருந்த இடங்களிலே தொல்பொருளாராய்ச்சி நன்கு நடத்தப்படாததினாலும் அக் கோயில்களின் கட்டிட அமைப்புப் பற்றி அறிய முடியாதுள்ளது.

பன்னிரண்டாம் பதின்மூன்றாம் நூற்றாண்டுகளிலே வன்னிப் பிரதேசங்களில் தென்னிந்தியர் பெருந்தொகையாய்க் குடியேறத் தொடங்கினர். பொலன்னறுவையின் வீழ்ச்சியை அடுத்து இவ்விடங்களிலே வன்னியரால் ஆளப்பட்ட சிற்றரசுகளும் தோன்றின. இக்காரணங்களினாலே வன்னிப்பிரதேசங்களில் பல இந்துக் கோயில்கள் கட்டப்படத் தொடங்கின.

பொலன்னறுவைக் காலத்தில் இங்கு கட்டப்பட்ட கோயில்கள் பல இன்னும் வழிபாட்டுத் தலங்களாக இருந்து வருகின்றன. அவை எல்லாம் செவ்வனே ஆராயப்படவில்லை. இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜோன் ஸ்டில், ஜே. பி. லூயிஸ் போன்றோர் பொதுப்பட வன்னிப் பகுதியிலிருந்த தொல்பொருட்களை அவதானித்து அறிக்கைகள் சமர்ப்பித்தனர். அவர்களுக்குப் பின்னர் எவரும் சரியாக அகழ்வாராய்ச்சியையோ ஊன்றிய ஆய்வையோ அங்கு நடத்தவில்லை. இக்காரணங்களினால் அங்கிருந்த கோயில்களைப் பற்றியோ அங்கு இடியுண்ட நிலையிலுள்ள கட்டிடங்களைப் பற்றியோ அதிகம் கூறமுடியாது.

## குருந்தனூர் மலை

கிழக்கு வன்னியில் திராவிடக் கட்டிடங்களின் அழிபாடுகள் காணப்படும் இடங்களுள் ஒன்று குருந்தன்மலை அல்லது குருந்தனூர் மலை. இங்கு ஒரு காலத்திலே பௌத்தர்கள் குடியேறியிருந்ததனால் பல பௌத்த கட்டிடங்களின் அழிபாடுகளும் இங்கு காணப்படுகின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY



றன. இங்கு காணப்படும் பழைய சிங்களக் கல்வெட்டொன்றில் இவ்விடத்தின் பழைய பெயர் குருங்கம எனக் கொடுக்கப்பட்டுள்ளது. இதனுல் குருங்கம என்பது குருந்தனூர் என்று தமிழராலே திரிக்கப்பட்டிருக்க வேண்டுமென அறிய முடிகின்றது, 1905 இல் ஜே. ஸ்டில் என்பவர் தொல்பொருளாய்வுத் துறையின் சார்பில் இங்கு ஆராய்ச்சி நடத்தியிருந்தார். எனினும் கட்டிடங்கள் பூரணமாக இன்னும் அகழ்ந்து வெளிப்படுத்தப்படவில்லை.

தென்னமரவாடிக்கு இரு மைல்களுக்கப்பால் கொக்கிளாய்க் குடாவின் மேற்குப் பாகத்திலே இருக்கும் ஒரு சிறு குன்று கந்தசாமி மலே எனப் பெயர் பெறும். இங்கு 1905 இல் நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் போது ஒரு சிறு கோயில் வெளிப்படுத்தப்பட்டது. வன்னியிலே காணப்படும் கோயில்களுள் கட்டிட அமைப்பைப் பொறுத்தமட்டிலே இதனே ஒரு சிறந்த கோயிலாகக் கருதலாம். திராவிடக் கட்டிடப் பாணியில் அமைந்துள்ள இக்கோயில் பொலன்னறுவையில் உள்ள சிவ தேவாலயங்களே ஒத்த முறையிலே சிறந்த கற்சிற்ப வேலேப்பாடுகள் உடையதாய் விளங்குகின்றது.

இவ்வாருகச் சோழராட்சிக் காலத்தின் பின் வட இலங்கையிலும், வடமேற்கிலங்கையிலும் இந்துக்கள் வாழ்ந்த இடங்களிலே பல கோயில்கள் கட்டப்பட்டன. இவற்றுள் ஒன்ருவது திராவிடக் கட்டிடப் பாணியல்லாத பிற பாணியிலே கட்டப்பட்டதற்கு எதுவித ஆதாரமும் இல்லே. இக்கோயில்கள் எல்லாம் நமக்குத் தற்போது ஆராய்ச்சி செய்யக் கிடைக்காவிட்டாலும், எஞ்சியுள்ள அழிபாடுகளேக் கொண்டும் சாசனக் குறிப்புகளேக் கொண்டும் ஒன்று மட்டும் பொதுப்படக் கூறிக் கொள்ளலாம். அதாவது பொலன்னறுவை வீழ்ச்சியடைவதற்கு முன்பாகப் பதிஞேராம் பன்னிரண்டாம் பதின்மூன்ரும் நூற்ருண்டுகளிலே சிங்கள மன்னரும் பிறரும் இந்நாட்டில் திராவிடக் கட்டிடக் கலேயை வளர்த்திருந்தனர் என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# III. பாண்டியர் பாணி

திராவிடக் கட்டிடக் கலையின் வரலாற்றில் இரண்டாவது பெருங் கட்டமாக அமையும் சோழர் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியளவில் முடிவுற்றது. பல்லவர் வளர்த்த கட்டிடக்கலை சோழர் காலத்தில் மிகத் துரிதமாக முன்னேற்றமடைந்திருந்தது. சோழப் பேரரசு வலிகுன்றத் தமிழ்நாட்டில் ஆதிக்கம் பெற்ற பாண்டிய வல்லரசு தொடர்ந்து சோழர் வளர்த்த கலைகளை வளர்த்தது. இதனாலே திராவிடக் கட்டிடக்கலையின் வரலாற்றிலே மூன்றாவது பெருங் கட்டமாகப் பாண்டியப் பேரரசின் காலம் இடம் பெறுகின்றது. இக்காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை நீடித்தது என்று கூறலாம்.

தென்னிந்தியாவில் வல்லரசுகள் தோன்றிய காலங்களிலே அந்நிலப்பகுதிக்கும் ஈழத்திற்குமிடையில் நெருங்கிய தொடர்புகள் ஏற்படுவது வழக்கமாக இருந்தது. சோழ வல்லரசு ஆதிக்கம் பெறத் தொடங்கிய காலத்திலே பாண்டிய வம்சத்திற்கும் ஈழத்துச் சிங்கள வம்சத்திற்கும் இடையிலே நெருங்கிய நட்புறவு ஏற்பட்டிருந்தது. இதனால் ஈழத்து மன்னர்கள் சோழருக்கு எதிராகப் பாண்டியருக்குப் படையுதவி கூட அனுப்பியிருந்தனர். சோழ வல்லரசு வலிகுன்றத் தொடங்கியபோது ஈழத்துப் பராக்கிரம பாகு தென்னாட்டுக்குப் படையனுப்பிப் பாண்டிய வாரிசுரிமைப் போராட்டத்திலே தலையிட்டுச் சோழருடன் போரிடவும் நேரிட்டது. இதன்பின்னர் சோழ வல்லரசு வீழ்ச்சியுற்றுப் பாண்டிய வல்லரசு எழுச்சி பெற்றதும் இதுவரை ஈழத்திற்கும் பாண்டிய நாட்டிற்குமிடையில் இருந்த நட்புறவு பகையாக மாறியது. இருதரப்பாரும் பதின்மூன்றும் நூற்றாண்டில் அடிக்கடி மோதிக் கொண்டனர். பதின்மூன்றும் நூற்றாண்டின் முதலாம் காலில் பொலன்னறுவையில் நிலவிய அரசியற் குழப்பத்தைப் பயன்படுத்திப் பாண்டிய இளவரசன் பராக்கிரம பாண்டியன் என்பான் பொலன்னறுவையைக் கைப்பற்றிச் சிறிது காலம் ஆதிக்கம் செலுத்தினான். அதற்கு முன்னரே சிங்கள அரசசபையில் இருந்த பாண்டியக் கட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரளவு ஆதிக்கத்தைப் பெற்றுக் குழப்பம் விளைவித்துக் கொண்டிருந்தது. பொலன்னறுவை வீழ்ச்சியுற்ற பின் பாண்டியப் பேரரசர்கள் ஈழத்து இராச்சியங்களைத் தாக்கிப் பெரும் வெற்றி பெற்றிருந்தனர். ஜடாவர்மன் சுந்தர பாண்டியன், ஜடாவர்மன் வீரபாண்டியன், மாறவர்மன் குலசேகர பாண்டியன் போன்ற பாண்டியப் பேரரசர்கள் இலங்கையின் தென் பாகத்திலிருந்த சிங்கள இராச்சியத்தையும் வடபாகத்திலிருந்த தமிழ் இராச்சியத்தையும் தங்கள் செல்வாக்கிற்கு உட்படுத்தியிருந்தனர். இதனால் அரசியல் ஆதிக்கம் மட்டுமல்லாது பாண்டியருடைய பண்பாட்டு ஆதிக்கமும் இலங்கையில் ஏற்பட்டது. இதனைத் திட்டமாகக் கட்டிடத் துறையிலே காணலாம்.

## பாண்டியர் கட்டிடக்கலை

சோழர் காலத்தில் வளர்ந்த கட்டிடக்கலை பாண்டியருடைய ஆதரவுடன் மேலும் பல புதிய வழிகளிலே வளர்ந்து சென்றது. சோழப் பெருமன்னர்களைப்போலப் பாண்டியப் பேரரசர்கள் மிகப் பெரிய கோயில்களைக் கட்டியெழுப்ப முயற்சிக்கவில்லை. எனினும் கோயிலின் அமைப்பு முறையிலே மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுப் புதிய அம்சங்கள் பாண்டியர்காலத்திலே இடம் பெற்றன, பாண்டியர் காலம்வரை கோயிலின் மத்திய பாகம் கூடிய அளவிற்குச் சிற்பிகளின் கவனத்தைப் பெற்று ஏனைய பாகங்களின் அளவோடு ஒத்துப்போகாதவாறு அளவு பெருத்த பாகமாக வளர்ந்திருந்தது. இதனாலே தான் கர்ப்பக்கிருகமும் அதன் மேல் படிப்படியாக வானளாவி எழுந்த விமானமும் சோழர் கட்டிடங்களின் முக்கிய அம்சமாக அமைந்திருந்தன. இந்த அமைப்பு முறை ஓரளவிற்கு மாற்றப்பட்டு விமானத்தைப்போன்று பெருத்த பாகங்களாகப் பிற பாகங்கள் பாண்டியர் காலத்திலே அமைக்கப்பட்டன.

இவ்வாறு புது வளர்ச்சி பெற்ற பாகங்களுள் மிக முக்கியமானது வாயிற் கோபுரமாகும். கோயில் அமைப்பிலே ஒரு தனி அம்சமாகக் கோபுரம் வளர்ச்சியுறத் தொடங்கிய காலம் பல்லவர் காலத்தின் இறுதிக் காலப்பகுதியாகும். பின்னர் சோழராட்சியின் போது சிற்பிகள் கோபுரத்திலே கூடிய அளவு கவனஞ் செலுத்தியிருந்தாலும் விமானத்தோடு ஒப்பிடத்தக்க முறையிலே ஒரு பெரும் பாகமாகக் கோபுரம் அமைக்கப்படவில்லை. பாண்டியர் காலத்துச் சிற்பிகளே விமானத்தைப் புறக்கணித்துக் கோபுரத்திலே கூடிய அளவிற்குக் கவனஞ் செலுத்தத் தொடங்கியவர்கள். இவர்களுடைய வழியைப் பின்பற்றியே அடுத்துவரும் காலப் பகுதிகளில் திராவிடச் சிற்பிகள் பெருங் கோபுர வாயில்களைத் தென்னாட்டுக் கோயில்களுக்கு அளித்தனர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டியர் காலத்துச் சிற்பிகள் கட்டிய கோபுரங்கள் பிற்பட்ட காலத்தவை போன்று அளவுக்கு மீறிய சிற்ப வேலைப்பாடுகளை உடையனவாக அமையவில்லை. முழுக்கோயிலின் அமைப்பிற்கு ஏற்றவாறு பல தூண்களைக் கொண்ட கோபுரங்களாக இவை கட்டப்பட்டன. பாண்டியர் காலத்துக் கோயில்களுக்கும் சோழர் காலத்துக் கோயில்களுக்கு மிடையிலுள்ள முக்கிய வேறுபாடு கோபுரம் சம்பந்தமான வேறுபாடாகும். கோபுரத்தின் அமைப்பைவிட வேறு அம்சங்களைப் பொறுத்த மட்டிலும் பாண்டியச் சிற்பிகளுடைய கோயில்கள் வேறுபட்டன. இவற்றுள் குறிப்பிடத்தக்கது தூண்களின் அமைப்பாகும். அதிக வேலைப்பாடில்லாத பெருந்தூண்களாகப் பல்லவர் காலத்தின் ஆரம்பத்திலே காணப்பட்ட தூண்கள் படிப்படியாகப் பல சிற்ப வேலைப்பாடுகள் உடைய தூண்களாக மாறிச் சென்றன. பாண்டியர்காலத்திலே தூணின் மேற்பாகம், சிறப்பாகப் பலகை, கபோதம் ஆகியவை, சிறந்த வேலைப்பாடுடைய அம்சங்களாகக் காணப்படுகின்றன. இந்த அம்சம் பிற்பட்ட காலத்துச் சிங்களக் கட்டிடக் கலையில் இடம் பெறும் அம்சமாகையால் பெருமளவு முக்கியத்துவம்முடையதாகும்.

## இலங்கையில் பாண்டியர் செல்வாக்கு

இலங்கை பதின்மூன்றும் நூற்றுண்டிலே பாண்டியர் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தாலும், இங்கு பாண்டியருடைய நேரடி ஆட்சி அதிக காலத்திற்குத் தொடர்ச்சியாக நிலவவில்லை. மேலும் பதின்மூன்றும் நூற்றுண்டு முழுவதும் இலங்கையிலே அரசியற் குழப்பம் நிலவிய காரணத்திஞல் பண்பாட்டு வளர்ச்சிக்கு வேண்டிய சூழ்நிலை காணப்படவில்லை. இருந்தும் பொலன்னறுவையிலும் வேறு சில இடங்களிலும் ஒரு சில கோயில்கள் பதின்மூன்றும் பதிஞன்காம் நூற்றுண்டுகளில் பாண்டியர் பாணியிலே கட்டப்பட்டன.

## முதலாவது சிவ தேவாலயம்

பொலன்னறுவையிலுள்ள முதலாவது சிவ தேவாலயம் பாண்டியர் பாணியிலே அமைந்துள்ள திராவிடக் கட்டிடமாகும். பல காலமாக இக்கோயிலைப் பலர் புத்த தந்த தாதுக்கோயில் என நம்பி வந்தனர். 1907இல் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியின் போது இது ஒரு சைவக் கோயில் என்பது தெரிய வந்தது. சோழர் கோயிலாகிய வானவன் மாதேவி ஈஸ்வரத்தைப் போலக் கல்லிஞலே அமைக்கப்பட்டுள்ள இக்கோயில் சிறிய கோயிலாக இருந்தாலும் ஒருவகையிலே வானவன் மாதேவி ஈஸ்வரத்தை விடச் சிறந்தது என்று கூறலாம். கோயிலின் வெளி மதிலும் பிற பாகங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

 Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

களும் எப்படியாக இருந்தன என்று தெரியவில்லை. இப்பொழுது எஞ்சியுள்ள பாகங்கள் மண்டபம், அந்தராளம், கர்ப்பக்கிருகம், விமானம் ஆகியவையே. பெருமளவிற்குக் கல்லினால் அமைக்கப்பட்டு இருப்பது இதன் சிறப்பியல்புகளில் ஒன்றாகும். மண்டபத்தின் அமைப்பை நோக்கினால் அதில் வெளிப்படும் கலை நுட்பம் வானவன் மாதேவி ஈஸ்வரத்தில் இல்லாத ஒரு நுட்பமாக விளங்குகிறது. மண்டபத்தின் அடித்தளத்தே இடம் பெறும் தாமரை இதழ் அலங்காரம் வானவன் மாதேவி ஈஸ்வரத்தில் இல்லை. மேலும் முதலாவது சிவ தேவாலயத்தின் தூண்களில் காணப்படும் கலசம், குமுதம் ஆகிய அணிகள் வானவன் மாதேவி ஈஸ்வரத்தில் இல்லை. இப்புதிய அம்சங்களிலெல்லாம் பாண்டியர் பாணியினைக் காணக் கூடியதாய் இருக்கின்றது. ஆனால் தென்னாட்டில் அமைக்கப்பட்ட கோயில்களிலே காணப்பட்ட உயர்ந்த கோபுரங்கள் மட்டும் சிவ தேவாலயத்திற்கு இல்லாது போயின. அவற்றுக்குப் பதிலாக ஒரு விதானத்தைக் கொண்ட வாயில்களே காட்சியளிக்கின்றன. சோழர் பாணியிலே முக்கியத்துவம் பெற்ற பெரு விமானங்களைச் சோழ ராட்சிக் காலத்துச் சிற்பிகள் இங்கு அமைக்காது விட்டதுபோலப் பாண்டியர் பாணியிலே முக்கியத்துவம் பெற்ற பெருங் கோபுரங்களைப் பதின்மூன்றாம் நூற்றாண்டுச் சிற்பிகள் இங்கு அமைக்காது விட்டனர். இப்படியாக அளவிலே சிறிய கோயிலாக விளங்கினாலும் முதலாவது சிவ தேவாலயம் இங்கு வளர்ந்த பாண்டியக் கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இச் சிவ தேவாலயத்தையும் வானவன் மாதேவி ஈஸ்வரத்தையும் போன்ற வேறு திராவிடக் கட்டிடங்கள் பொலன்னறுவையில் இல்லை.

இரண்டாவது பாண்டியப் பேரரசின் காலத்திலே வட இலங்கையிலிருந்த திராவிடருடைய இராச்சியமும் தெற்கே இருந்த சிங்கள இராச்சியமும் பாண்டியருடைய செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தன என்று முன்னர் குறிப்பிட்டோம். தெற்கில் ஆட்சி புரிந்த சிங்கள மன்னர்கள் பாண்டியருக்குத் திறை செலுத்தினர். அதுமட்டுமின்றித் தாமே பாண்டிய வம்சத்தவர் என்று கூறிப் பெருமைப்பட்டனர். வடக்கில் சிறிது காலம் ஆட்சி புரிந்த சாவக மன்னர் பாண்டியருடைய ஆணையை ஏற்றிருந்தனர். அவர்களுக்குப்பின் ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் பாண்டியருடைய சேவையிலிருந்த சிற்றரசு வம்சத்தவர்களாகக் காணப்பட்டனர். இத்தகைய சூழ்நிலையிலே பாண்டியப் பேரரசில் வளர்ந்த கட்டிடக் கலையின் செல்வாக்கு இலங்கையிலும் பரவுவதற்கு வசதிகள் இருந்தன.

இதனால் கிழக்கிலங்கையிலே திருகோணமலை, திருக்கோவில் போன்ற இடங்களிலும் சிங்கள இராச்சியத்திலே யாப்பஹுவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற இடங்களிலும் இக் காலப் பகுதியிலே கட்டப்பட்ட கட்டிடங்கள் பாண்டியச் சாயலை உடையனவயாகக் காணப்பட்டன. பாண்டியர் பாணியில் அமைக்கப்பட்டிருந்த கட்டிடங்கள் பெரும் பாலும் அழிந்து போய்விட்ட காரணத்தினாலே தற்காலத்தில் அவற்றைப்பற்றி அதிகம் அறியமுடியாமலிருக்கின்றது.

## திருகோணமலைக் கோயில்

பதின்மூன்றும் நூற்றாண்டில் பாண்டியர் பாணியிலே கட்டப் பட்ட கட்டிடங்களுட் சில திருகோணமலையில் இருந்தன. மாக மன்னனுடைய ஆட்சியோடு பொலன்னறுவை வீழ்ச்சியுற்றது. வட மத்திய மாகாணத்திலும் பல சிற்றரசுகள் தோன்றின. இவற் றைப் பொதுவாக வன்னிச் சிற்றரசுகள் என்று வரலாற்றாசிரியர் கள் அழைப்பார்கள். அத்தகைய வன்னிச் சிற்றரசுகளுடைய ஆட் சிக்குட்பட்ட பிரதேசமாகத் திருகோணமலையும் விளங்கிற்றென்று கொள்ள இடமுண்டு.

கிறிஸ்தாப்பத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளிலிருந்தே திருகோண மலையில் ஒரு பிரசித்தி பெற்ற சிவன் கோயில் அல்லது ஈஸ்வரன் கோயில் இருந்து வந்தது என்பது முன்னர் குறிப்பிடப்பட்டிருந்தது. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் அக்கோயிலின் புகழ் தென்னிந்தியாவை யும் அடைந்து திருஞானசம்பந்தர் அக்கோயிலைப்பற்றித் திருப்பதி கம் ஒன்று பாடிய பொழுது திருகோணமலையிலே குறிப்பிடத்தக்க தென்னிந்திய வர்த்தகக் குடிகள் வாழ்ந்திருக்க வேண்டும். அப்பொ ழுது திருகோணமலைக் கோயிலாகிய கோணேஸ்வரர் கோயில் நல்ல முறையிலே கட்டப்பட்டுமிருந்திருக்கவேண்டும்.

பொதுவாகப் பல துறைகளிலும் சிறப்பாகக் கலைத்துறையிலும் பல்லவர் செல்வாக்குப்பரவியிருந்த ஏழாம் எட்டாம் நூற்றாண்டு களில் இலங்கையில் பிரசித்தி பெற்றிருந்த சிவன் கோயில் ஒன்று அக்காலத்துத் திராவிடக்கட்டிடப் பாணியிலே அமைக்கப்பட்டிருக் கும் என்று ஊகிப்பது பிழையாகாது. முன்னர் குறிப்பிட்டது போல இங்கு கட்டப்பட்ட இந்துக் கோயில்கள் திராவிடப்பாணி யல்லாத பிற பாணியிலே கட்டப்பட்டிருக்கவில்லை. இதனாலும் கோணேசர் கோயில் ஏழாம் எட்டாம் நூற்றாண்டுகளிலே பல்ல வப்பாணியிலே கட்டப்பட்டிருந்திருக்க வேண்டும்என்று சொல்லலாம்.

பின்னர் சோழராட்சியின் போது திருகோணமலை மாவட்டத் தில் அமைக்கப்பட்ட பௌத்த பள்ளியே புதுப்பித்துக் கட்டப்பட் டபடியால் கோணேஸ்வரக் கோயிலும் புதிய சோழர் பாணியிலே புதுப்பிக்கப்பட்டிருக்கலாம். இவற்றைப் பற்றி நாம் எதுவும் திட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டமாகக் கூறமுடியாதிருப்பதற்குக் காரணம் பழைய கோயில் முற்றாகப் பிற்காலத்திலே அழிக்கப்பட்டமையாகும்.

எனினும் அழிக்கப்பட்ட கோயிலின் சில எஞ்சிய பாகங்களும் சில கல்வெட்டுக்களும் பதின்மூன்றாம் நூற்றாண்டிற்குப்பின் கோணேஸ்வரர் கோயில் திருத்தியமைக்கப்பட்டதைப் பற்றிச் சில தகவல்களைத் தருகின்றன. இவை போன்ற தகவல்களை இலக்கிய ஆதாரங்களிலிருந்தும் பெறலாம்.

இலங்கை வாழ் தமிழ் மக்களிடையே நிலவி வரும் செவிவழி மரபும் அம்மரபினை அடக்கியுள்ள சில நூல்களும் குளக்கோட்டன் என்பான் கோணேஸ்வரர் கோயிலைத் திருத்திக் கட்டியது பற்றிக் கூறுகின்றன. இந்தக் குளக்கோட்டன் யார் என்பதும் அவனைப்பற்றி நாம் அறியும் செய்திகள் எந்த அளவிற்கு உண்மையானவை என்பதும் பிரச்சினைக்குரிய விஷயங்களாக இருந்து வந்துள்ளன

எமது வரலாற்று ஆதாரங்களாகிய யாழ்ப்பாண வைபவமாலை, திருகோணாசல புராணம், தக்ஷிண கைலாச புராணம் போன்ற நூல்கள் குளக்கோட்டனைப்பற்றித் தரும் தகவல்கள் பல முரண்பாடுகளை உடையனவாக விளங்குகின்றன. அவற்றை இங்கு எடுத்து ஆராய வேண்டிய அவசியமில்லை. பல மன்னர்களுடைய வரலாற்றுத் தகவல்கள் ஒன்று கலந்து இந்தக் குழப்பமான நிலை ஏற்பட்டிருக்கின்றது என்பது எம்முடைய கருத்தாகும். அப்படியான மன்னர்களுள் ஒருவன் குளம் கட்டி வளம் பெருக்கிய மஹாசேன மன்னன். இன்னொருவன் கோணேஸ்வரர் ஆலயத்தைத் திருத்திக்கட்டிச் சிற்றரசனாக ஆட்சி புரிந்த கலிங்கத்துச் சோடகங்கன் என்ற இளவரசன். இதனைப் பலர் ஏற்கமாட்டார்கள்.

திருகோணமலையிலுள்ள சுவாமிமலையில் கிடைத்த தொல்பொருட்களுள் குறிப்பிடத்தக்க ஒரு தொல்பொருள் சமஸ்கிருதச் சாசனம் பொறிக்கப்பட்ட கல்லாகும். இக்கல் சில ஆண்டுகளுக்கு முன்னர்தான் கண்டுபிடிக்கப்பட்டது. அக்கல்லின் சாசனத்திலுள்ள செய்தி குளக்கோட்டன் என்ற பெயரால் கோணேஸ்வரர் கோயிலைத் திருத்தியமைத்தவனாகத் தமிழ் நூல்களிலே குறிப்பிட்டுள்ள இளவரசனை அடையாளங்கண்டுகொள்ள உதவுகின்றது. சோடகங்கன் என்ற இளவரசன் கோணேஸ்வரர் கோயிலிலே சில திருப்பணிகளை முற்றுவித்ததாகச் சாசனம் கூறுகின்றது. தக்ஷிண கைலாச மாலையிலே குளக்கோட்டனுடைய மறுபெயராகச் சோழகங்கன் என்ற பெயர் தரப்பட்டுள்ளது. இதனாலே திருப்பணியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட்டிருந்தவன் சோடகங்கன் என்ற இளவரசனே என்றும் அவனுக்குப் பின்னர் குளக்கோட்டன் என்ற பெயர் பிரபலமாயிற் றென்றும் அறியத்தக்கதாயுள்ளது. சாசனத்தின் காலம் பதின் மூன்ரும் நூற்ருண்டு. பாண்டியச் செல்வாக்கு நிலவிய காலம் அது. ஜடாவர்மன் வீரபாண்டியன் திருகோணமலைவரை சென்று அங்கு பாண்டியருடைய இலச்சினையைப் பொறித்துப் பாண்டியர் கொடியை யும் பறக்கவிட்டிருந்தான். அப்படியான காலத்திலே சோழகங்கன் கோணேஸ்வரர் கோயிலைத் திருத்திக்கட்டியிருந்ததால் புதிய கட் டிடங்கள் பாண்டியர் பாணியிலேதான் அமைந்திருக்கும் என்று நம்பலாம். அதைச் சரி என்று நிரூபிக்கப் பாண்டியர் பாணியில மைந்த கட்டிடப்பாகங்கள், சிறப்பாகத் தூண்கள், கோணேஸ்வரர் கோயிற் பிரதேசத்தில் கிடைத்துள்ளன.

இந்தக் கட்டிடப்பாகங்கள் பெரும்பாலும் கடலிலிருந்து பெறப் பட்டுள்ளன. பலருக்குத் தெரிந்ததுபோல் போர்த்துக்கீசர் ஆட்சிக் காலத்திலே கோணேஸ்வரர் ஆலயம் பீரங்கிக் குண்டுகளின் தாக் குதலுக்கு இலக்காகி இடிந்து வீழ்ந்தது. 1624இல் கொன்ஸ்தன்தீன் தஸா த நொரொஞ்ஹா என்ற போர்த்துக்கீசத் தளபதி கோயிலை இடித்து வீழ்த்திய போது கோயிலின் பெரும் பாகம் கடலினுள் மறைந்தது. எஞ்சிய பாகம் கோட்டை கட்டுவதற்குப் பயன்படுத் தப்பட்டது.

கடலுக்குள் மறைந்த கற்களின் பாகங்கள் மிக அண்மைக் காலம் வரை எவராலும் அறியப்படாத பாகங்களாக இருந்து வந்தன. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சுவாமி மலையை அடுத்துள்ள கடலிலே மூழ்கி ஆராய்ச்சிகளை நடத்திய சில மேல்நாட்டார் அங்கு மறைந்திருந்த கோயிலின் பாகங்களைக் கண்டுபிடித்தனர். கடலிலே புதைபொருள் ஆராய்ச்சியை நடத்துவது தற்காலத் தொல்பொருளி யலின் ஒரு முக்கியத் துறையாக இருந்தாலும் இவர்கள் புதை பொருள் ஆராய்ச்சிக்காக அங்கு சென்றிருக்கவில்லை. தற்செயலாகவே தொல் பொருட்களைக் கண்டுபிடித்தனர். பிரசித்தி பெற்ற விஞ்ஞானி ஆதர் கிளாக், படப்பிடிப்பாளர் மைக் வில்சன், ரொட்னி ஜொங்க்லஸ் ஆகியோர் இக் குழுவிலே இருந்தனர். அவர்கள் கோணேஸ்வரர் கோயிலின் இடிந்த பாகங்களைக் கண்டுபிடித்த மையே ஒரு சுவையான வரலாருகும்.

பல உபகரணங்களைத் தாங்கியவர்களாகக் கடலில் இறங்கித் தேடிய பொழுது கோயிலின் அழிபாடுகள் அங்குமிங்குமாகச் சித றுண்டு காணப்பட்டன. மைக் வில்ஸன் இவற்றைப் பல படங்களாகப் பிடித்திருக்கின்றூர். ஒரு சில தூண்களை மேலே கொண்டுவர முயற்சித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும் அச் செயல் வெற்றி பெருமையால் அழிபாடுகள் அனைத்தும் இன்னும் கடலினுள் மறைந்தே இருக்கின்றன. ஒரு காலத்திலே நமது நாட்டில் கடற் புதை பொருளாராய்ச்சி முன்னேறியதும் இவற்றை வெளியே கொண்டுவரமுடியும்.

மைக் வில்ஸன் எடுத்த படங்கள் தூண்கள், கதவு நிலைகள் போன்ற சில பாகங்களின் அமைப்பினை அறிந்து கொள்ள உதவுகின்றன. தாமரைச் சின்னங்கள் பொறிக்கப்பட்ட தூண்களின் படங்கள் பல இவற்றுள் இருக்கின்றன. இவற்றை ஆராய்ந்தால் இக்கட்டிடப்பாகங்கள் பாண்டியர் பாணியில் அமைந்துள்ளன என்பது இலகுவிலே புலப்படும். சோடகங்கள் கட்டியிருந்த கட்டிடங்களே பதின் மூன்றும் நூற்றாண்டுவரை நிலைத்திருந்து போர்த்துக்கீசரால் இடிக்கப்பட்டன என்று கொள்ளவும் முடியும்.

கடலிலே காணப்படும் தூண்களையும் பிற பாகங்களையும் விடத் தரையிலும் சில தூண்கள் அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் அமைப்பு முறையும் பாண்டியர் பாணியிலேயே இருக்கின்றது. இவற்றையெல்லாம் ஒருங்கே நோக்கினுல் பதின்மூன்றும் நூற்றாண்டிலே பாண்டியர் பாணியிலே கட்டப்பட்ட கோயில்களுள் ஒன்றாகத் திருக்கோணேஸ்வரர் கோயில் விளங்கியது என்று கூறலாம்.

## திருக்கோவில்

கி. பி. பதின்மூன்றும் நூற்றாண்டுவரை தென்னிந்தியப் பண்பாட்டின் செல்வாக்குப் பொதுவாக வட இலங்கையிலேதான் பரவியிருந்தது. தெற்கே ஈழத்தின் தென்முனையாக அமையும் தெவிநுவரவில் மட்டும் பத்தாம் நூற்றாண்டுக்கு முன்னும் தென்னிந்தியச் செல்வாக்குப் பரவியிருந்ததற்கு ஆதாரம் கிடைத்துள்ளது. இதனை முன்னர் குறிப்பிட்டிருந்தோம். கிழக்கிலங்கையிலே திருகோணமலை மாவட்டம் இப்படியான செல்வாக்கிற்குப் பல நூற்றாண்டுகளாக உட்பட்டிருந்தது. எனினும் மட்டக்களப்பு மாவட்டம் தென்னிந்தியப் பண்பாடு பரவாத பகுதியாகப் பதின்மூன்றும் நூற்றாண்டுவரை காணப்பட்டதாகத் தோன்றுகின்றது. ஆதிகாலத்திலே தீகவாபி இராச்சியத்தின் ஒரு பகுதியாக விளங்கிப் பின்னர் ரோஹண இராச்சியத்துடன் இணைக்கப்பட்டிருந்த இந்த மாவட்டத்திலே கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து தொடர்ச்சியாகப் பௌத்தப் பண்பாடு வளர்ந்திருந்தது. இதற்குப் போதிய சாசனத்தொல்பொருள் ஆதாரங்கள் கிடைத்துள்ளன. ஆனுல் இந்த ஆதாரங்கள் அங்கு தென்னிந்தியச் செல்வாக்குப் பரவியிருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ததற்குச் சான்றுபகரவில்லை. பதின்மூன்ரும் நூற்ருண்டிலிருந்து அப்படியான வேறுபட்ட ஆதாரங்கள் கிடைக்கத் தொடங்கு கின்றன.

பதின்மூன்ரும் நூற்ருண்டில் பொலன்னறுவை இராச்சியம் நிலைகுலைந்ததும் மாக மன்னனும் அவனது சகாக்களும் கிழக்கிலங் கையின் பல பாகங்களிலே சிற்றரசுகளைத் தாபித்திருந்தனர். மட் டக்களப்பிலே தோன்றிய வன்னிச் சிற்றரசுகள் தென்னிந்தியப் பண்பாடு அப்பிரதேசத்திலே நன்கு பரவுவதற்கு உதவின. இத ஞல் முதலில் பாண்டியர் செல்வாக்கும் பின்னர் பிற தென்னிந் திய இராச்சியங்களின் செல்வாக்கும் துரிதமாக அங்கு பரவின.

பாண்டியர் செல்வாக்குப் பரவிய காலத்தில் அதாவது பதின் மூன்ரும் நூற்ருண்டில் கிழக்கிலங்கையில் கட்டப்பட்ட கோயில்க ளில் ஒன்றே திருக்கோவிலிலுள்ள ஆலயம். இது எப்பொழுது கட்டப்பட்டது என்பதைச் சரியாக அறிவதற்கு அங்கு பழைய சாசனங்கள் கிடைக்கவில்லை, கிடைத்துள்ள சாசனங்கள் பிற்பட் டவை. எனினும் கோயிலின் கட்டிட அமைப்பைக் கொண்டு அது பதின்மூன்ரும் நூற்ருண்டைச் சேர்ந்தது என்று கூறமுடியும்.

திருக்கோவிலிலுள்ள ஆலயம் பெருமளவிற்குப் பழுதடையாது பேணப்பட்ட கட்டிடமாக விளங்குகின்றது. கர்ப்பக் கிருகத்துக்கு மேல் அமைந்துள்ள விமானம், தூண்கள், அரைத்தூண்கள் ஆகிய வற்றிலே காணப்படும் போதிகைகளும் திட்டவட்டமாகப் பாண் டியர் கட்டிடப் பாணியிலே அமைந்திருக்கின்றன.

திருக்கோவில் ஆலயத்தின் பழைய பெயர் அங்குள்ள கல் வெட்டொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆரும் அல்லது ஏழாம் விஜயபாகுவின் பத்தாவது ஆட்சியாண்டிலே பொறிக்கப்பட்ட கல்வெட்டில் பின்வருமாறு குறிக்கப்பட்டுள்ளது. 'ஸ்ரீ சங்கபோதி பருமரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ விசயபாகு தேவர்க்கு ஆண்டு பத்தாவதில் தைமாதம் 20ம் திகதி சிவஞானசங்கரர் கோயிலுக்கு....' இதிலிருத்து இக் கோயில் சிவஞானசங்கரர் கோயில் என்ற பெயரைப் பெற்றிருந்தது என்று அறிகிரேம்.

**யாப்பஹுவ**

பொலன்னறுவைக் காலத்திலிருந்தே பாண்டியர் செல்வாக்குச் சிங்கள இராச்சியத்திலே வலுப்பெற்றிருந்தது. பொலன்னறுவை வீழ்ச்சியுற்ற பின்னரும் தம்பதெணிக் காலத்தில் இப்பாண்டியர் செல்வாக்குத் தொடர்ந்து சிங்கள இராச்சியத்தில் நிலவியது. தம்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெனியின் முதலாவது மன்னனுகிய இரண்டாம் பராக்கிரமபாகு தன்னை ஒரு பாண்டிய வம்சத்தவன் என வர்ணித்துப் பெருமை கொண்டான். பாண்டியப் பேரரசர்களுக்கும் தம்பதெனிய மன்னர்களுக்குமிடையில் நெருங்கிய அரசியல் தொடர்புகளும் ஏற்பட்டிருந்தன. இத்தகைய சூழ்நிலையிலே பாண்டியப் பேரரசிலிருந்து சிங்கள இராச்சியத்தில் பண்பாட்டுச் செல்வாக்கும் பரவியிருந்தமை வியப்பிற்குரிய விஷயமன்று. இரண்டாம் பராக்கிரமபாகுவின் மகனுகிய முதலாவது புவனேகபாகு யாப்பஹுவவில் அரண் அமைத்து ஆட்சிபுரிந்தபோது அங்கு திராவிடக் கட்டிடப் பாணியிலே சில கட்டிடங்களை அமைத்திருந்தான். அவற்றை அமைப்பதற்குப் பாண்டிநாட்டுச் சிற்பிகள் உதவியிருக்கலாம் என்று கொள்ள இடமுண்டு. இக்கட்டிடங்கள் பொலன்னறுவையிலும் தம்பதெனியிலும் கட்டப்பட்ட சிங்களக் கட்டிடங்களிலிருந்து திட்டவட்டமான முறையிலே வேறுபடுகின்றன. அதுமட்டுமல்ல இவற்றின் காலத்திலிருந்து சிங்கள இராச்சியங்களின் தலைநகர்களிலே கட்டப்பட்ட பெரும்பாலான கட்டிடங்கள் திராவிடப்பாணியிலே கட்டப்பட்டன.

யாப்பஹுவ அல்லது யாப்பஹுகந்த (ஸுந்தர-பப்பத) என்ற மலை வடமேற்கு மாகாணத்திலே வன்னி-ஹத்பத்து என்ற பிரிவில் இருக்கின்றது. இம்மலைப்பகுதி சில ஆண்டுகளுக்குச் சிங்கள இராச்சியத்தின் தலை நகராக விளங்கியது. இது பதின்மூன்ரும் நூற்ருண்டிலாகும். இம் மலையிலே பழைய கோட்டையின் அழிபாடுகள் காணப்படுகின்றன. அவற்றுள் அரண்மனையின் அழிபாடுகளும் தளதா -மாளிகாவ என்ற தந்த-தாதுக் கோயிலின் அழிபாடுகளும் முக்கியமானவை.

யாப்பஹு தந்ததாதுக் கோயில் திராவிடப் பாணியிலே அமைக்கப்பட்ட கட்டிடமாகும். இருந்தாலும் இக்கட்டிடத்திலே சிங்களக் கட்டிடக் கலையின் சாயலும் ஓரளவிற்குக் காணப்படுகின்றது. தென்னிந்தியக் கோயில்களைப் போலவே கருங்கற்களினுலே அமைக்கப்பட்ட இக்கட்டிடம் தள அமைப்பு முறையிலும் இந்துக் கோயிலை ஒத்திருக்கின்றது. கட்டிடத்திலே மூன்று முக்கிய பாகங்களாகக் கர்ப்பக்கிருகம், அந்தராளம், அர்த்த மண்டபம் ஆகியவை காணப்படுகின்றன. கட்டிடத்திலே இந்துக் கோயில்களிலே காணப்படும் நாகபந்தம் போன்ற சிற்ப வேலைப்பாடுகள் புடைப்புச் சிற்பவடிவில் காணப்படுகின்றன. கோயிலின் மேற்கு வாயிற் புறத்திலுள்ள மகரதோரணம் இந்துக் கோயில்களிலுள்ள தோரணத்தை ஒத்துள்ளது. மகரதோரணத்தின் நடுவிலே புத்தருடைய உருவம் இருப்பதுதான் வேறுபாட்டை ஏற்படுத்தும் அம்சமாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்ததாதுக் கோயிலைவிடக் கூடியளவிற்குத் திராவிடப் பாணியிலே அமைந்திருக்கும் கட்டிட அழிபாடுகளாக ஒரு பெருங் கட்டிடத்தின் படிக்கட்டுகளும் முன் மண்டபமும் காணப்படுகின்றன. முன்மண்டபத்திலே உள்ள புடைப்புச் சிற்பங்களும், தூண்களும், பிற கட்டிடக்கலை அம்சங்களும் தெளிவாகத் திராவிடக் கட்டிடப் பாணியின் தன்மையை விளக்குகின்றன. இவற்றைக் கொண்டு இக்கட்டிடம் பதின்மூன்றும் நூற்றுண்டிலே செழித்திருந்த பாண்டியர் பாணியிலே அமைக்கப்பட்டது என்று கண்டுகொள்ளலாம்.

முன் மண்டபத்தின் மேடையின் இரு மருங்கிலும் அழகிய வேலைப்பாடுடைய தூணுப்புகளிலே புடைப்புச் சிற்பங்களாகப் பெண்ணுருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவை பொலன்னறுவையிலுள்ள சில திராவிடக் கட்டிடங்களிலே செதுக்கப்பட்டிருக்கும் பெண்ணுருவங்களை நெருங்கிய முறையிலே ஒத்திருக்கின்றன.

முன் மண்டபத்தையும் அதோடு சேர்ந்துள்ள படிக்கட்டினையும் சுற்றிவர வெளிப்புறத்திலே நடன மாதர்களுடைய சிற்பங்கள் பல புடைப்புச் சிற்பங்களாக அழகிய முறையிலே செதுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நடன மாதும் பல்வேறு நடன நிலையிலே நிற்பதும் இடையிடையே மிருதங்கம் போன்ற வாத்தியக் கருவிகளைத் தாங்கியவர்கள் நிற்பதும் தென்னிந்தியக் கோயில்களிலே காணப்படும் நடனச் சிற்பங்களை நினைவூட்டுகின்றன. சிறப்பாகப் பாண்டிய ஹொய்ஸள காலத்திலே கன்னடப்பிரதேசத்தில் பேலூர், ஹலேபீடு, ஸோம் நாத்புர் போன்ற இடங்களிலே கோயிலைச் சுற்றி வரிசையாகச் செதுக்கப்பட்டுள்ள சிறந்த புடைப்புச் சிற்பங்களை ஒரு சிறிய அளவிலாவது ஒத்தவையாக இவை காணப்படுகின்றன. பரத நாட்டிய அறிவும் தென்னிந்தியர் சிற்ப மரபு பற்றிய அறிவும் நன்கு பெற்றிருந்த தென்னிந்தியச் சிற்பிகளே இவற்றைச் செய்திருக்க வேண்டும். முன்மண்டபத்திலுள்ள பலகணியிலும் நடன மாதர் சிற்பங்கள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

இப்படியாகப் பதின்மூன்றும் நூற்றுண்டிலே பொலன்னறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு, யாப்ப ஹுவ ஆகிய பல்வேறு பகுதிகளில் பாண்டியர் கட்டிடக் கலையின் செல்வாக்குப் பரவியிருந்தது. பதின்மூன்றும் நூற்றுண்டு அரசியற் குழப்ப காலமாக இருந்திருக்காவிட்டால் மேலும் கூடிய அளவிலே இப் பண்பாட்டுச் செல்வாக்கு இலங்கையிலே பரவியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IV. விஜயநகரப் பாணி

பதினான்காம் நூற்றாண்டின் இரண்டாம் கால் தென்னிந்திய வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும். தென்னிந்தியருடைய பண்பாட்டையும் அரசியலையும் பொறுத்த மட்டிலே மிக முக்கியமான சம்பவங்கள் அப்பொழுது நடைபெற்றன. பதினான்காம் நூற்றாண்டின் முதற்கால் முழுவதிலும் தில்லி சுல்தானரசின் ஆதிக்கம் தென்னிந்தியத் தீபகற்பம் அனைத்திலும் பரவிக் கொண்டு சென்றது. இந்த இஸ்லாமிய ஆதிக்கப் படர்ச்சி வெறும் அரசியல் இயக்கமாக இருக்கவில்லை; பண்பாட்டுத் துறையிலும் சமயத் துறையிலும் பாரதூரமான விளைவுகளை உண்டுபண்ணும் இயக்கமாகவும் விளங்கியது. இதனால் இந்து சமயத்தையும், தென்னிந்தியப் பண்பாட்டையும் பேணுவதற்கும் இஸ்லாமிய ஆதிக்கத்தை எதிர்ப்பதற்கும் பொதுவாகத் தென்னிந்தியா முழுவதிலும் சிறப்பாக ஆந்திரப் பிரதேசம் கர்நாடகம் ஆகிய இடங்களிலும் ஓர் இயக்கம் ஆரம்பித்தது. இந்த இயக்கத்தின் விளைவாக ஆந்திரம், கர்நாடகம், தமிழ்நாடு, கேரளம் ஆகிய பகுதிகள் முஸ்லிம் ஆட்சியிலிருந்து விடுவிக்கப்பட்டுப் பழைய பண்பாடும் மதமும் அங்கெல்லாம் வளர்வதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. பழைய பண்பாட்டைப் பேணுவதற்கு ஒரு பெரும் பேரரசாக விஜய நகரப் பேரரசு எழுச்சி பெற்றது. விடுவிக்கப்படாத தக்கிணப் பகுதிகளில் பழைய பண்பாடும் புதிதாகப் பரவிய சிறந்த பாரசீக மரபுகளைக் கொண்டு விளங்கிய இஸ்லாமியப் பண்பாடும் இணைந்து ஒரு புதுத்தக்கிணப் பண்பாடு தோன்றிய நேரத்திலே துங்கபத்திரா நதிக்குத் தெற்கே பழைய பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ஒருசில பாரசீக மரபுகளையும் கலந்து வேறொரு பண்பாடு வளர்ந்து சென்றது. இந்தப் பண்பாடு தான் பிரசித்தி பெற்ற விஜய நகரப் பண்பாடு.

திராவிடக் கட்டிடக் கலையின் வரலாற்றில் விஜய நகரப் பேரரசின் காலம் (1336 – 1565) நான்காவது கட்டமாக அமைகின்றது. பாண்டியர் காலத்து நிலையிலிருந்து திராவிடக் கட்டிடக் கலை இக்காலத்தில் வேறொரு நிலையை அடைகின்றது. விஜய நகரக் காலத்து இந்து மறுமலர்ச்சி அக்காலத்துக் கட்டிடக் கலை வளர்ச்சியையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதித்தது. முஸ்லிம் ஆட்சிக்குப் பின் சமயத்துக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தினுல் கோயிற் கட்டிடக்கலை ஒரு தனிச் சிறப்பைப்பெற்றது இக்காலத்தில் கோயில்களிலே நடத்தப்பட்ட விசேஷ கிரியைகள் விழாக்கள் ஆகியவற்றின் விளைவாகப் புது மண்டபங்களும், கட்டிடங்களும் கோயில்களோடு கட்டப்பட்டன. பிரதான தெய்வத்திற்குக் கட்டப்பட்ட மூலக் கோயிலை விடப் பிற தெய்வங்களுக்கும் சிறு கோயில்கள் மூலக்கோயிலோடு கட்டப்பட்டன. இது சம்பந்தமாகப் பெண் தெய்வங்களுக்காகக் கட்டப்பட்ட கோயில்கள் குறிப்பிடத்தக்கவை. இக்காலத்து விழாக்களிலே தெய்வங்களின் திருக்கல்யாண விழா சிறப்புப் பெற்ற ஒரு விழாவாக அமைந்ததினுல், இதற்கெனச் சிறப்பான கல்யாண மண்டபம் பெருங்கோயில்களிலே கட்டப்பட்டது. இவ்வாறு பொது அமைப்பைப் பொறுத்த மட்டிலே விஜய நகர காலத்துக் கோயில்கள் முற்பட்ட தென்னிந்தியக் கோயில்களிலிருந்து வேறுபட்டிருந்தன.

பொது அமைப்பை விடக் கட்டிடப் பாணியைப் பொறுத்தமட்டிலும் பெரும் வேறுபாட்டை விஜயநகர காலத்துக் கோயில்களிலே காணலாம். முந்திய கோயில்களை விடக் கூடிய நுட்பமான சிற்ப வேலைப்பாடுகளையுடைய கட்டிடங்களாக இவை விளங்குகின்றன. கோயிலின் பல்வேறு பாகங்களிலே எங்கெங்கு சிற்ப வேலைப்பாடுகளைச் செய்து கொள்ள இடமிருந்ததோ அங்கெல்லாம் நுண்ணிய வேலைப்பாடுகள் சேர்க்கப்பட்டன. இந்த வகையிலே சிற்பிகளின் வேலைப்பாடுகளுக்கு இலக்காகிய கட்டிடப்பாகம் கோயில்களின் தூண் என்று சொல்லலாம். பல்லவர் காலத்திலே அதிக சிற்ப வேலைப்பாடு இல்லாது பெரும் தூணுக அமைந்திருந்த இப்பாகம் படிப்படியாக மெல்லிய வடிவைப் பெற்று நுண்ணிய சிற்பங்களை உடையதாக மாறிச் சென்று விஜய நகர காலத்திலே ஒரு தனிச் சிறப்புப் பெற்ற கட்டிடப் பாகமாகக் காட்சியளித்தது. ஒவ்வொரு தூணும் ஒவ்வொரு கதையைக் கூறும் அளவிற்குப் பல சிற்பங்களைக் கொண்டு விளங்கியது. சில இடங்களிலே ஒவ்வொரு தூணின் காலும் (நடுப்பட்டை) ஒன்றின் மேல் ஒன்ருக அடுக்கப்பட்ட பல சிறுசிறு கோபுரங்களையுடைய காலாகச் செதுக்கப்பட்டிருக்கின்றது. வேறு இடங்களிலே ஒரே அடித்தளத்தை (அதிஷ்டானம்) உடைய பல மெல்லிய தூண்களாக ஒவ்வொரு தூணும் செதுக்கப்பட்டிருக்கின்றது. இத்தூண்களிலே மனித மிருகச் சிற்பங்கள் பெருந்தொகையாகக் காணப்படுகின்றன. தூண்களின் போதிகை, பலகை தாங்கி (ஏந்தி), பலகை ஆகியவை மேலும் நுட்பமான முறையிலே மாற்றமடைந்து காட்சியளிக்கின்றன. இவ்வாருகப் பாணியைப் பொறுத்தமட்டிலும் விஜய நகர காலத்துக் கோயில்கள்பாண்டிய ஹொய்ஸளர் காலத்துக்கோயில்களை விடப் பெரிதும் வேறுபட்டவையாகக் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் விஜய நகரச் செல்வாக்கு:

பதின் மூன்றும் நூற்றுண்டில் வட இலங்கையிலே முதன் முறை யாகச் சிங்கள மக்களல்லாதாருடைய இராச்சியம் ஒன்று தாபிக்கப் பட்டதும் சிங்கள இராச்சியம் தென் மேற்கு இலங்கையில் மட்டும் ஒடுங்கிக் காணப்பட்டது. வடக்கில் ஒரு புது இராச்சியம் எழுச்சி பெற்றமை சிங்கள இராச்சியத்திற்கு ஒரு வகையிலே நன்மை பயப் பதாக அமைந்தது. பதின்மூன்றும் நூற்றுண்டின் இறுதிவரை தென் னிந்திய வல்லரசுகளால் அடிக்கடி தாக்கப்பட்ட சிங்கள இராச்சி யம் பதின்மூன்றும் நூற்றுண்டின் பின்னர் தென்னிந்திய வல்லரசுக ளினுலே அதிகம் தாக்கப்படவில்லை. வடக்கே தோன்றியிருந்த யாழ்ப் பாண இராச்சியமே தென்னிந்தியத் தாக்குதல்களுக்கு இலக்காகியது. இதனுல் தென்னிந்திய வல்லரசுகளுக்கும் சிங்கள இராச்சியத்திற்கு மிடையிலே அதிக அரசியல் தொடர்புகள் ஏற்படவில்லை. ஆனுல் முன்னேவிடக் கூடிய அளவிலே பண்பாட்டுத் தொடர்புகளும், வர்த் தகத் தொடர்புகளும் ஏற்பட்டன. இதனுல் பதின்மூன்றும் நூற் றுண்டின் பின் தோன்றிய விஜயநகர இராச்சியத்தின் செல்வாக்குச் சிங்கள இராச்சியத்திலும் பரவியது.

பொலன்னறுவைக் காலத்திற்குப் பின்னர் சிங்கள இராச்சியத்தின் பண்பாட்டுநிலை மிகத்தளர்ந்ததாகக் காணப்பட்டது. பழைய சிங்களக் கலைகள் நன்கு பேணப்படாது வீழ்ச்சியடைந்தன. இந்த வகையிலே சிறப்பாகக் கட்டிடக் கலையே பாதிக்கப்பட்டிருந்தது. பழைய சிங் களக் கட்டிடக்கலை அதிகம் வளர்க்கப்படாதிருந்த நேரத்திலே தென் னிந்தியாவிலே வளர்ந்த திராவிடக் கட்டிடக்கலை இங்கு மேலோங் கியது. சிங்கள மன்னர்களும், பௌத்த பிரமுகர்களும் தென்னிந்தி யச் சிற்பிகளேயே வரவழைத்து இந்துக் கோயில்களின் அமைப்பில் பௌத்த கோயில்களை எழுப்பினர். இதனுல் பதினுன்காம் நூற் றுண்டிலிருந்து திராவிடக் கட்டிடக்கலை இங்கு வளர்ச்சிபெற்றுப் பிற் பட்ட சிங்கள இராச்சியத்துக் கட்டிடக் கலை தோன்றுவதற்கு உத வியது. இந்தப் புதிய கலையிலே சில சிங்களக் கட்டிடக்கலை அம் சங்கள் இருந்தாலும் பெருமளவிற்கு இது திராவிடக் கட்டிடக் கலையின் ஒரு பிரிவாகவே காணப்படுகிறது என்று கூறலாம்.

பதினுன்காம், பதினைந்தாம், பதினுறும் நூற்றுண்டுகளிலே இங்கு வளர்க்கப்பட்ட கட்டிடக் கலையின் பாணிகள் விஜய நகரப் பாணியும் நாயக்கர் பாணியுமாம். இப் பாணிகளில் கட்டப்பட்ட கட்டிடங்கள் இலங்கையின் தென் மேற்குப் பாகத்திலிருந்த சிங்கள இராச்சியத்திலே இன்றும் காணப்படுகின்றன. ஆனுல் அப்படியான கட்டிடங்களை யாழ்ப்பாண இராச்சியம் இருந்த பிரதேசத்திலே காண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியவில்லை. இதற்கு இப்பிரதேசத்திலே போதிய கருங்கற் பாறைகள் இல்லாமை ஒரு காரணமாகும். கருங்கற் பாறைகள் இல்லாது நல்ல முறையிலே திராவிடப் பாணியில் கட்டிடங்களை அமைப்பது கஷ்டமாகும். அப்படிச் சாந்தினாலும் சுண்ணத்தாலும் யாழ்ப்பாண இராச்சியத்திலே திராவிடக் கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருந்தால் அவை விரைவில் அழிந்து போயிருக்க முடியும்.

## அலவதுர ஆலயம்

கேகாலை (காகல்ல) மாவட்டத்திலே கேகாலைக்கும் புலத்கொஹொபிடியவுக்குமிடையில் கணேகொட என்ற ஒரு மலையுண்டு. அதன் பழைய பெயர் அலவதுர. இங்கு ஒரு பழைய விகாரையின் அழிபாடுகள் காணப்படுகின்றன. மலையின் அடிவாரத்திலிருந்து ஏறக்குறைய 250 படிகள் இவ்விகாரைக்கு வழியாக அமைக்கப்பட்டுள்ளன. இவ்விகாரையும் அதோடு சேர்ந்து காணப்படும் கோயிலும் பதினான்காம் நூற்றாண்டிலே முதலாவது தர்ம கீர்த்தி ஸங்கராஜர் என்ற பௌத்த சங்கத்துப் பிரமுகரால் கட்டுவிக்கப்பட்டன. இந்தத் தேரர் தென்னிந்தியாவுடன் தொடர்பு கொண்டிருந்த ஒருவர். தென்னிந்தியாவில் பௌத்த மறுமலர்ச்சியை ஏற்படுத்தப் பெரிதும் முயற்சித்தவர். இந்த நோக்கத்தோடு ஆந்திரத்திலே தான்ய கடக (அமராவதீ) என்ற பிரசித்திபெற்ற இடத்தில் ஒரு பௌத்த விகாரையைப் பெரும் செலவு செய்து திருத்திக் கட்டியிருந்தார் என்று கடலாதெனிக் கல்வெட்டால் அறிகிறோம்.

இவருக்கு உதவியாய் இருந்த ஸேனாலங்காதிகாரி என்ற தளபதி காஞ்சிக்குப் பலரை அனுப்பி அங்கு ஒரு பௌத்த ஆலயத்தை அமைப்பித்தான் என்று நிகாய ஸங்க்ரஹ என்னும் நூலால் அறிகின்றோம். இப்படியாகத் தர்மகீர்த்தி தேரரும் பிறரும் பதினான்காம் நூற்றாண்டில் தென்னிந்தியாவுடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தி அங்கிருந்து சிறந்த சிற்பிகளைக் கூட வரவழைத்து இங்கும் திராவிடப் பாணியிலேயே ஆலயங்களை அமைப்பித்தனர். அப்படியான கட்டிடங்களுள் ஒன்றாகவே அலவதுர விகாரை விளங்குகின்றது.

இவ்விகாரையின் உள்மண்டபமும் வெளி மண்டபமும் இந்துக் கோயில்களிலே காணப்படுவது போன்ற ஒரு கற்பீடத்திலே அமைந்துள்ளன. வெளி மண்டபத்தில் பந்தனம் (உபானம், பிரதி ஆகியவை) அழகிய பத்ம குமுத சிற்பங்களை வரிசையாகக் கொண்டு விளங்குகின்றது. விகாரையின் உட்புறத்தில் ஒரு புத்தர் சிலையும் விஷ்ணு, ஸமன், நாத தெய்வம் ஆகியோரின் களிமட்சிலைகளும் காணப்படுகின்றன. விகாரைக்கு வெளியே அங்கும் இங்குமாகப் பல தூண்கள், கபோதங்கள் ஆகியவை சிதறுண்டு காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்குள்ள தூண்களின் அமைப்பிலே தான் திராவிடப் பாணியைப் பெரிதும் காணலாம். ஒவ்வொன்றிலும் நுண்மையான சிற்ப வேலைப்பாடுகள் இடம் பெற்றுள்ளன. பல்வகை மலர்கள், மயில், தோரணம் அல்லது திருவாசி ஆகியவை புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. இத்தூண்களின் மேற்பாகத்திலே புஷ்ப பந்தப் போதிகைகள் சேர்க்கப்பட்டுள்ளன. சில தூண்கள் சிங்கச் சிற்பத்தையுடைய தூண்கள். இத் தூண்களின் மேற்பாகத்தில் முக்தா தாமம் (முத்துமாலை அணி), பத்ம பந்தம், பூர்ண கலசம் அல்லது கும்பம், தாமரையிலைப் பலகை, புஷ்ப பந்தப் போதிகை ஆகியவை செதுக்கப்பட்டுள்ளன. இதே போன்ற சிற்ப வேலைப்பாடுகளையுடைய தூண்களைக் காஞ்சிபுரத்திலே காணலாம். தர்மகீர்த்தி தேரர் காஞ்சிபுரத்திலிருந்து சிற்பிகளை வரவழைத்து இக் கட்டிடத்தை அமைப்பித்திருக்கலாம்.

விகாரையின் அதிஷ்டானத்திலே நடன மாதர், வாத்தியக்கலைஞர், குத்துச்சண்டை வீரர் ஆகியோருடைய சிற்பங்கள் இரு தாமரையிலைப் பந்தனங்களுக்கு இடைப்படச் செதுக்கப்பட்டுள்ளன. கட்டிடத்தைச் சுற்றிவர கஜஸிங்ஹ, வியாக்கிரக சிற்பங்களும் செதுக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு பல வேலைப்பாடுகளுடன் இடிந்த நிலையிலே காணப்படும் அலவதுர ஆலயம் பொதுப்படத் திராவிடப் பாணியிலே அமைந்திருக்கின்றது என்பதை எவரும் மறுக்க முடியாது. இங்கு காணப்படும் தூண்கள், பந்தனங்கள் ஆகியவை போன்ற கட்டிடப் பாகங்களைக் காஞ்சி, விஜயநகர், பேலூர் போன்ற தென்னிந்திய இடங்களிலே காண முடியும்.

## கடலாதெனி ஆலயம்

பல்லவ - பாண்டியர் காலத்தில் இருந்து இலங்கைக்குப் பல தென்னிந்தியச் சிற்பிகள் வந்திருந்தனர் என்பதை அவர்கள் எழுப்பிய கட்டிடங்களைக் கொண்டு அறியக் கூறியதாய் இருந்தாலும் பதினன்காம் நூற்றுண்டு வரை அச்சிற்பிகளைப் பற்றிய எதுவித தகவல்களையும் பெறமுடியாது இருக்கின்றோம். ஆனல் பதினன்காம் நூற்றுண்டில் இருந்து இந்நாட்டில் அரிய சில கட்டிடங்களை நிர்மாணித்த பெருஞ்சிற்பிகளுடைய பெயர்களையாவது அறியக் கூடியதாய் இருக்கின்றது. நான்காம் புவனேக பாஹுவின் காலத்தில் வாழ்ந்த (1341—51) கணேஸ்வராசாரியார், ஸ்தபதிராயர், ராஜாதி ராஜஸிங்க மன்னன் காலத்து (1780—1798) தேவேந்திர மூலாச்சாரியர் போன்றவர்கள் பிற்பட்ட ஈழத்துக் கட்டிடக் கலை வரலாற்றில் ஒரு சிறப்பிடத்தைப் பெற்றுள்ளனர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினுன்காம் நூற்றுண்டில் தென்னிந்தியாவிலே பௌத்த மறு மலர்ச்சிக்காகப் பாடுபட்ட தர்மகீர்த்தி ஸங்கராஜரைப் பற்றி முன்பு குறிப்பிட்டிருந்தோம். இந்த மஹாதேரர் 1344ஆம் ஆண்டளவில் கடலாதெனியில் (கம்பளைக்கு அருகாமையில்) ஒரு தலை சிறந்த பௌத்த ஆலயத்தைக் கட்டுவித்தார். இலங்கையில் அதுவரை கட்டப்பட்டிருந்த கற்கோயில்களுள் அதுவே மிகப் பெரியதாக விளங்கியது. கட்டிடச் சிறப்பிலும் பதினுன்காம் நூற்றுண்டிலே கட்டப்பட்ட மிகச் சிறந்த கட்டிடமாக அது விளங்கியது. இதனைக் கட்டுவிப்பதற்குத் தர்மகீர்த்தி ஸங்கராஜர் தென்னிந்தியாவிலிருந்தே சிற்பிகளை வரவழைத்திருந்தாரென்று தெரிகிறது. இந்தச் சிற்பிகளுள் தலைமைச் சிற்பியாக (ஸ்தபதி) விளங்கியவர் கணேஸ்வராசாரியார் என்பவர். அவர் வகுத்த திட்டத்தின்படியே கடலாதெனிக் கோயில் கட்டப்பட்டது.

தர்மகீர்த்தி மஹாதேரரும் அவர் காலத்துப் பிரமுகர்களும் தென்னிந்தியாவுடன் கொண்டிருந்த நெருங்கிய தொடர்புகளின் விளைவாகச் சிங்கள இராச்சியத்திலே (கம்பளை இராச்சியம்) பல சிற்பிகளைக் கொண்ட ஒரு குழுவே அமைக்கப்பட்டிருந்தது. இந்தக் குழு ஸ்தபதி கணம் என அழைக்கப்பட்டது. ஸ்தபதி என்ற சொல் தலைமைச் சிற்பியைக் குறிக்கும். இது பொதுவாகத் தென்னிந்தியாவிலே வழக்கிலுள்ள சொல். இப்பொழுதும் கோயில்களை அமைப்பதற்கு அமர்த்தப்படும் மரபுவழிச் சிற்பிகளுக்கு ஸ்தபதி என்ற பெயர் கொடுக்கப்படும். அப்படி ஸ்தபதிகள் பலர் அமைத்திருந்த "தொழிற் சங்கமே" ஸ்தபதி கணம். சிங்கள இராச்சியத்திலிருந்த ஸ்தபதி கணத்திற்குத் தலைவராக (அதிபதி) கணேஸ்வராசாரியார் விளங்கினர். பரணவிதான கூறுவதுபோல் அவர் ஒரு தென்னிந்தியர் என்பதில் ஐயமில்லை. ஆசாரி என்பது சாதாரண சிற்பியைக் குறிக்கும் சொல். இன்றும் இச்சொல் வழக்கிலிருக்கின்றது. கடலாதெனிய ஆலயத்தை அமைப்பதற்குப் பல ஆசாரிகள் அமர்த்தப்பட்டிருந்தனர். அவர்கள் அனைவரும் கணேஸ்வராசாரியருடைய தலைமையிலேயே தம் தொழிலை முற்றுவித்தனர். இந்தச் சுவையான செய்தி தர்மகீர்த்தி மஹாதேரரால் பொறிப்பிக்கப்பட்ட கடலாதெனிச் சிங்களக் கல்வெட்டிலே கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு லக்ஷம் பணமும் மூவாயிரம் யாளம் நெல்லும் செலவு செய்யப்பட்டுக் கோயில் கட்டப்பட்டபோது ஸ்தபதி கணுதிபதி கணேஸ்வராசாரியின் தலைமையில் ஆசாரிகள் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர் (ஸ்தபதி கணுதிபதி கணேஸ்வராசா ரீன் பிரதான கொட அதி ஆசாரிவருன் லவா) என்று கடலாதெனிக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலாதெனி ஆலயம் விஜயநகரக் கட்டிடப் பாணியில் அமைக்கப்பட்ட கட்டிடமாகும். அதன் அடித்தள அமைப்பினை நோக்கினுல் இந்துக் கோயில்களின் அமைப்பினை அது ஒத்திருப்பதை அறியலாம். இந்துக் கோயில்களில் இருப்பது போலக் கர்ப்பக் கிருகமும் அந்தராளம், மண்டபம் ஆகியவையும் முக்கிய அம்சங்களாக அமைகின்றன. பிரதான ஆலயம் புத்தர் சிலையை உடையதாக விளங்குகின்றது. ஆனுல் மண்டபத்தோடு சேர்ந்து அமைக்கப்பட்டுள்ள ஒரு சிறு ஆலயம் தெவிரஜ (உற்பலவண்ணன்) ஆலயமாகக் காட்சியளிக்கின்றது. கர்ப்பக் கிருகத்தின் சுவர்களிலே வெஸ்ஸந்தர ஜாதகக் கதையின் காட்சிகள் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளன.

கடலாதெனி ஆலயத்தின் கவர்ச்சிகரமான கட்டிடப் பாகம் அதன் தூண் என்று சொல்லலாம். சிறந்த விஜயநகரப் பாணியிலே செதுக்கப்பட்ட கற்றூண்கள் அர்த்த மண்டபத்திலும் உள்ளேயும் காட்சியளிக்கின்றன. மும் முகங்களையுடைய இரு தனிக் கற்றூண்கள் வாயிற் படிகளைக் கடந்து சென்றதும், அர்த்த மண்டபத்தின் இரு மருங்கிலும் காணப்படுகின்றன. இத்தூண்கள் விஜய நகரக் கட்டிடங்களிலே பொதுவாகக் காணப்படும் தூண்களை ஒத்தவை. தூணின் அடித்தளம் சிங்க உருவமொன்றைக் கொண்ட சிறு பீடமாக அமைந்துள்ளது. சிங்கத்தின் தலையில் தூணின் கால் (நடுப்பட்டை) எண் சதுர வடிவில் செதுக்கப்பட்டுள்ளது. அதன் மேல் கலசம், பதுமம் ஆகியவையும், அவற்றின் மேல் பலகையும் காணப்படுகின்றன. பலகைக்கு மேல் இன்னெரு சிங்க உருவம் போதிகையாகச் செதுக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலே தொங்கும் தாமரையை உடைய புஷ்ப போதிகை இடப்பெற்றுள்ளது. தூணின் மும் முகங்களுக்கிடையில் (மூன்று இணைக்கப்பட்ட நடுப்பட்டைகள்) நடனமாதர் சிற்பங்கள் வரிசையாக மேலிருந்து கீழ் நோக்கிச் செதுக்கப்பட்டுள்ளன.

முழு ஆலயத்தின் அதிஷ்டானத்தின் (அடித்தளம் அல்லது மேடை) அமைப்பு இந்துத் திராவிடக் கோயில்களின் அதிஷ்டான அமைப்பிலிருந்து எது விதத்திலும் வேறுபடவில்லை. ஆனுல் ஆலயத்தின் மேற்பாகத்திலே இடம்பெற்றுள்ள சிகரங்களின் அமைப்புச் சில பௌத்த கட்டிட அம்சங்களை, சிறப்பாக ஹர்மிகா போன்ற ஸ்தூபி அம்சங்களைக் கொண்டு இருப்பது கவனிக்கத்தக்கது. கடலாதெனி ஆலயம் ஒரு பௌத்த ஆலயமாகையால் இந்த அம்சங்கள் அதற்குச் சேர்க்கப்பட்டிருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**லங்காதிலக**

கடலாதெனிக்கு அண்மையிலுள்ள ஸிந்துருவான என்னுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ளது லங்காதிலக ஆலயம். இதே காலப்பகுதியில் கட்டப்பட்டிருந்தாலும் அமைப்பு முறையையும் கட்டிடப் பாணியையும் பொறுத்தமட்டிலே கடலாதெனி ஆலயத்திலிருந்து இது வேறுபட்டு விளங்குகின்றது. லங்கா திலகத்திலுள்ள கல்வெட்டினுல் ஸ்தபதிராயர் என்பவரும் பிற ஆசாரிகளும் இந்த ஆலயத்தை அமைத்தனர் என்பது அறியக்கிடக்கின்றது. பெரும்பாலும் ஆலயத்தின் அமைப்பு முறை பொலன்னறுவைக் காலத்துப் பௌத்த கட்டிடங்களின் அமைப்பு முறையை ஒத்திருக்கின்றது. அதிலே இடம்பெறும் திராவிடப் பாணியின் அம்சங்கள் கூட விஜயநகர காலத்திற்கு முற்பட்ட காலத்தவையாகக் காணப்படுகின்றன. இக் காரணங்களினுல் ஸ்தபதிராயரும் அவருக்கு உதவிய ஆசாரிகளும் இலங்கையில் முன்னர் குடியேறியிருந்த தென்னிந்தியச் சிற்பிகளின் வழித் தோன்றல்களாக இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. இதனுல் அவர்கள் விஜயநகரப் பாணியை நன்கு அறிந்திருக்காது அவர்களுடைய முன்னேர் அவர்களுக்குக் கற்பித்திருந்த பழைய திராவிடப் பாணியையும் முற்பட்ட காலத்துச் சிங்களக் கட்டிடப்பாணியையும் அறிந்திருந்தனர் என்று கூறலாம். இவர்களுக்குப் பழைய சிங்கள மரபினை அறிந்திருந்த சிங்களச் சிற்பிகளும் உதவியிருக்கலாம்.

லங்கா திலக ஆலயத்தின் புறச்சுவரின் அமைப்பில் சில திராவிட அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் தூணெப்புக்கள், பந்தனம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ள முறை திராவிட முறையாகும். தூணெப்புக்களின் போதிகையின் வடிவம் சோழ, பாண்டிய காலத்துப் போதிகையின் வடிவமாகக் காணப்படுகின்றது.

லங்கா திலக ஆலயத்தின் கூரை பிற்பட்ட காலத்தில் பிரசித்திபெறும் கண்டியக் கூரையாகும். செங்குத்தான மேற்பாகத்தையுடைய இக்கூரையின் அமைப்புத் தமிழ் நாட்டின் கட்டிடங்களில் இடம்பெருத ஓர் அம்சம். இருந்தும் அப்படியான கூரைகளைக் கொண்ட கட்டிடங்கள் தென்னிந்தியாவின் மேற்குக் கரையோரத்தில் கர்நாடக மாநிலத்தின் கானரா மாவட்டத்திலும் கேரள மாநிலத்திலும் காணப்படுகின்றன. இதனுல் இப்பகுதிகளின் பண்பாட்டுச் செல்வாக்கு விஜய நகரப் பேரரசின் காலத்திலே இலங்கையில் பரவியதனுல் இக்கூரையமைப்பு முறை இங்கும் இடம்பெற்றிருக்கலாம் என்று தோன்றுகிறது. லங்கா திலகத்தை அமைத்த தலைமைச் சிற்பியின் பெயராகிய ஸ்தபதிராயர் என்பது ஒரு கன்னடப் பெயராக இருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாம். ராயர் என்ற ஈற்றுப் பெயர் தமிழ் நாட்டிலும் வழங்கி வந்திருந்தாலும் கூடிய அளவிற்குக் கன்னடப் பெயர்களிலேயே காணப்படுகின்றது. ஸ்தபதிராயர் கன்னட இனத்தவராக இருந்திருக்கலாம். அவரைப் போலக் கன்னடச் சிற்பிகள் பலர் கம்பளை இராச்சியத்திலும் பிற்பட்ட கண்டி இராச்சியத்திலும் தொழில் பெற்றதன் விளைவாகக் கன்னடக் கட்டிடக் கலையின் செல்வாக்கும் இங்கு பரவியிருக்க முடியும். இங்கிருக்கும் கண்டியக் கட்டிடங்களையும் கானரா, கேரளம் ஆகிய இடங்களிலே உள்ள கட்டிடங்களையும் சரியாக ஆராயாமல் எதுவும் திட்டவட்டமாகக் கூற முடியாதிருக்கின்றது.

## பிற கட்டிடங்கள் :

விஜய நகரக் கட்டிடப் பாணியில் அமைக்கப்பட்ட பிற கட்டிடங்களுள் கண்டியில் உள்ள நாத தேவாலயம், ஆதாஹநமளுக் கெடிகே, ரிதி விஹாரை மண்டபம், அம்பெக்க தேவாலயம் ஆகியவையும் குறிப்பிடத்தக்கவை. முன் குறிப்பிட்டது போல் கண்டியக் கட்டிடப் பாணி திராவிடக் கட்டிடப் பாணியின் அடிப்படையிலே தோன்றியதனால் பதினான்காம் நூற்றாண்டின் பின் அமைக்கப்பட்ட கண்டியக் கட்டிடங்களிலே திராவிடப் பாணியின் சாயலைக் கண்டு கொள்ள முடியும்.

நாத தேவாலயம் கடலாதெனி ஆலயத்தைப் போன்றே அமைந்துள்ளது. ஆனால் அதன் அளவு சிறியது. ஒரு கர்ப்பக் கிருகமும் முக மண்டபமும் இதன் முக்கிய பாகங்களாகக் காணப்படுகின்றன. ஆதாஹநமளுக்கெடிகேயும் இதே அளவிலே இதே அமைப்பிலே கட்டப்பட்ட ஒரு கட்டிடமாகும். அம்பெக்க தேவாலயத்தின் மண்டபத்திலே வரிசையாக உள்ள தூண்களின் போதிகை திராவிடப் பாணியில் அமைந்துள்ளது.

## மேற்கிலங்கைக் கோயில்கள்

பதினைந்தாம் நூற்றாண்டில் இலங்கையின் பிறநாட்டு வர்த்தகம் துரிதமான வகையிலே வளர்ச்சியடைந்திருந்தது. இதன் விளைவாகச் சிங்கள இராச்சியத்தின் ஆதிக்க பீடம் மத்திய பகுதியிலிருந்து மேற்குக் கரையோரப் பகுதிக்கு மாற்றப்பட்டது. இப்பகுதியே கோட்டை இராச்சியம் என்ற பெயரைப் பெற்றது. மேற்காசிய நாடுகளுக்கும் இலங்கைக்குமிடையில் நெருங்கிய வர்த்தகத் தொடர்புகள் காணப்பட்டது போலத் தென்னிந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலும் பதினைந்தாம் நூற்றாண்டில் மீண்டும் அதிக வர்த்தகத் தொடர்புகள் காணப்பட்டன. இவற்றின் விளைவாக அராபிய,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரசீக, தென்னிந்திய வர்த்தகர்களுடைய குடியேற்றங்கள் இலங்கையின் துறைப் பட்டினங்களிலே தாபிக்கப்பட்டன. தென்னிந்திய வர்த்தகர்கள் மூலமாக மீண்டும் கரையோரப் பகுதிகளிலே இந்துக் கோயில்கள் இக்காலப் பகுதியில் கட்டப்படத் தொடங்கின.

பொலன்னறுவையின் வீழ்ச்சிக்குப் பின்னர் சிங்கள இராச்சியத்தில் திராவிடக் கட்டிடப் பாணியிலே பல கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருந்தாலும் அவை பௌத்த நிறுவனங்களாக இருந்தன என்பதை இதுவரை கண்டோம். சிங்கள இராச்சியத்தைப் பொறுத்தவரை முன்னர் போல இக்காலப் பகுதியிலும் பிரதான துறைப் பட்டினங்களிலும் வர்த்தக நகரங்களிலுமே இந்துக் கோயில்கள் கட்டப்பட்டிருந்தன. பதினுன்காம் பதினைந்தாம் நூற்ருண்டுகளில் சிங்கள இராச்சியத்தில் வர்த்தகம் நடத்திய இந்துக்களாகிய தென்னிந்தியர் தாம் வர்த்தகக் குடியேற்றங்களைத் தாபித்திருந்த இடங்களாகிய துறைமுகப் பட்டினங்களிலும் வர்த்தக நகரங்களிலும் தங்கள் தேவைகளுக்காக இந்துக் கோயில்களைக் கட்டியிருந்தனர்.

## முன்னேஸ்வரம்

இப்படியாகக் கட்டப்பட்டிருந்த கோயில்களுள் பிரசித்தி பெற்றவை முன்னேஸ்வரம், தெவிநுவரைக்கும் பெந்தொட்டைக்குமிடையிலிருந்த நகரீஸர் கோயில், கணேஸ கோயில், காளி கோயில், நாக கோயில், கொழும்புக்கு அருகாமையில் இருந்த கந்தசாமி கோயில் ஆகியவை. இவை சிங்கள ஸந்தேஸ நூல்களாகிய கோகில ஸந்தேஸ, பரவிஸந்தேஸ ஆகிய நூல்களிலே குறிப்பிடப்பட்டுள்ளன. ஜயவர்தனபுரக் கோட்டைக்கு வெளியேயும் ஒரு கோயிலில் தமிழ்த் தேவாரங்கள் பாடப்பட்டு வந்ததாக ஸலலிஹினிஸந்தேஸ குறிப்பிடுகின்றது. இக்காலத்துத் தமிழ்க் கல்வெட்டுக்கள் சிலவற்றிலும் கோட்டை இராச்சியத்திலிருந்த இந்துக் கோயில்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இக்கோயில்களுள் முன்னேஸ்வரத்துக் கோயில் மட்டுமே இன்றும் வழிபாட்டுத் தலமாக இருந்து வருகின்றது. ஏனையவை எங்கு இருந்தன என்பதைக் கூட அறிய முடியாத அளவிற்கு அவற்றின் எஞ்சிய பாகம் எதுவும் கிடைக்கவில்லை. இக்கோயில்கள் அக்காலத்துத் திராவிடக் கட்டிடப் பாணியில் அமைந்திருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொள்வதோடு நாம் திருப்தியடைய வேண்டியுள்ளது. முன்னேஸ்வரத்துக் கோயில் அழியாது பேணப்பட்டிருப்பதினுல் அதன் பழைய கட்டிடப் பாணியை ஆராய முடிந்தாலும் பிற்பட்ட காலத்தில் நடைபெற்ற திருப்பணியினுல் முற்ருக அதன் பழைய நிலையை அறிந்து கொள்வது கஷ்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரெண்டி கோயில்

மேலே குறிப்பிட்ட கோயில்களை விடப் பதினாறாம் நூற்றாண்டில் சீதாவக இராச்சியத்திலே கட்டப்பட்ட ஓர் இந்துக் கோயிலின் இடிந்த பாகங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. இவை கேகாலை மாவட்டத்திலுள்ள அவிசாவளை (அவிஸ்ஸாவேல்ல) என்னுமிடத்தில் சீதாவக என்னும் ஊரிலே காணப்படுகின்றன. இந்த ஊர்தான் பழைய சீதாவக இராச்சியத்தின் தலைநகராக விளங்கியது. இங்குதான் இராவணன் சீதையைச் சிறையில் வைத்திருந்தான் என்று கட்டுக்கதைகளிலே கூறப்பட்டு வருகின்றது. இங்கு சீதாவக நதிக்கு வடக்கே இடிந்த நிலையிலுள்ள கோயில் பரெண்டி கோயில் என்ற பெயரைப் பெற்றுள்ளது.

பரெண்டி கோயிலின் வரலாறு சீதாவக மன்னனாகிய முதலாம் ராஜஸிங்ஹ மன்னனின் வரலாற்றோடு நெருங்கிய தொடர்புடையது. பதினாறாம் நூற்றாண்டில் போர்த்துக்கீசருடைய ஆதிக்கப் படர்ச்சியைத் தடுப்பதற்குப் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறப்பெய்திய மன்னனாகிய ராஜஸிங்ஹ பௌத்தத்தைக் கைவிட்டுச் சைவத்தைத் தழுவியவனாவான். தன் தந்தையைக் கொன்ற பின் பல பௌத்த சங்கத்தாரை ஒறுத்ததினால் தனக்குக் கிடைக்கக் கூடிய பாவத்தை எண்ணி மனம் நொந்தபோது ராஜஸிங்ஹ மன்னனைப் பிராமணர்கள் ஆறுதற்படுத்தினர் என்றும் பாவத்திலிருந்து தப்பிக் கொள்ளக் கோயில் ஒன்றைக் கட்டும்படி அறிவுரை கூறினரென்றும் அந்த அறிவுரையின் பேரில் பரெண்டி கோயிலை ராஜஸிங்ஹ கட்டுவித்தான் என்றும் கர்ண பரம்பரைக் கதைகள் மூலம் அறிகின்றோம். பாவத்திலிருந்து தப்பிக் கொள்ள (சிங்களம்-பேரெண்ட) இக் கோயிலைக் கட்டுவித்ததினால் இது பேரெண்ட கோவில் என்ற பெயரைப் பெற்றதென்றும், பேரெண்ட என்பது பின்னர் பரெண்டி எனத் திரிந்து விட்டதென்றும் இதே கர்ணபரம்பரைக் கதைகள் கூறுகின்றன. மேலும் கோவில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கையில் ஆகாயத்திலிருந்து நெருப்பு விழுந்து ராஜஸிங்ஹ மன்னனையும் கோயிலையும் அழித்து விட்டதாகவும் இக் கதைகளால் அறியக் கிடக்கின்றது.

ஏதோ காரணத்திற்காக ராஜஸிங்ஹ மன்னன் பௌத்தத்தை விட்டுச் சைவனானன் என்பது உண்மை. பரெண்டி கோவில் பூரணமாகக் கட்டப்படுமுன்னர் சிற்பிகள் வேலையை நிறுத்தியிருந்தனர் என்பதையும் அங்குள்ள அரைகுறையாய்ச் செதுக்கி விடப்பட்டுள்ள நிலாமணிக்கல் போன்ற பாகங்களிலிருந்து கண்டு கொள்ளலாம். கட்டப்பட்டிருந்த கோயிலின் பாகங்கள் கூட இறுதியிலே அழிக்கப்பட்டன. இது போர்த்துக்கீசர் படையெடுப்பினால் ஏற்பட்டது. சீதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வக நகரைத் தாக்கிய போர்த்துக்கீசர் அந்நகரை அழித்தபோது கோயிலேயும் அழித்திருந்தனர். இப்படையெடுப்பின் காரணமாகக் கோயில் கட்டுவதைச் சிற்பிகள் நிறுத்த வேண்டிய நிலே ஏற்பட்டிருக்க வேண்டும். மேலும் பரெண்டி என்பது பேரெண்ட என்ற சிங்களச் சொல்லின் திரிபென்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஏதோ ஒரு சைவப் பெயர் பின்னர் பரெண்டி என்று திரிபடைந்ததும் அதற்கு மக்கள் விளக்கம் கொடுப்பதற்காகப் பேரெண்ட என்ற சொல்லின் திரிபென்று கூறிக் கொள்ளுகின்றனர்.

பரெண்டி கோவில் விஜயநகரக் கட்டிடப்பாணியில் அமைந்த கட்டிடமாகும். அதன் மேற்பாகம் பூரணமாக அழிந்துள்ள காரணத்திஞல் கட்டிடத்தின் முழு அமைப்பினேயும் ஆராய முடியாதுள்ளது. எனினும் தரையிலே அதிஷ்டானம் நல்ல முறையில் அமைக்கப்பட்டதாய் இன்றும் காணப்படுகின்றது. சமகாலத்துச் சிறு இந்துக் கோயில்களின் அமைப்பைப் பின்பற்றியே அதனேயும் கட்டியிருந்தனர். உடைந்த நிலேயில் அங்குமிங்கும் காணப்படும் பாகங்களுள் தூண்களின் பாகங்கள் குறிப்பிடத்தக்கவை. சிங்க பீடத்தையுடைய தூண்களே இக் கோயிலில் இடம் பெற்றிருந்தன என்பதை இவை காட்டுகின்றன.

பரெண்டி கோவிலின் இடிந்த பாகங்கள் பல வேறிடங்கட்குக் கட்டிடங்கள் கட்டவும் எடுத்துச் செல்லப்பட்டன. அப்படியான பாகங்களுள் ஒன்றே மதகொட விகாரையில் உள்ள சிறந்த வேலேப்பாடுடைய தூண். சிங்கபீடத்தைக் கொண்ட இத்தூண் பரெண்டி கோயிலிலுள்ள பிறதூண்களின் பாகங்களேப் போலச் சிறந்த விஜய நகரப் பாணியிலே அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# V. நாயக்கர் பாணி

பதினாறும் நூற்றாண்டின் பின் ஐரோப்பியர் ஆதிக்கம் கண்டி இராச்சியம் தவிர்ந்த ஏனைய பாகங்களிலே பரவியிருந்ததினால் இலங்கையின் பெரும் பாகத்திலே திராவிடக் கட்டிடக் கலையோ, சிங்களக் கட்டிடக்கலையோ வளர்ச்சிபெற முடியவில்லை. கண்டி இராச்சியம் வெளியுலகுடன் தொடர்புகொள்வதை ஐரோப்பியர் தடுத்திருந்ததினால் அங்கும் தென்னிந்தியக் கலைகளின் செல்வாக்குக் குன்றியது. கண்டியிலே சிங்கள அரசவம்சம் வாரிசு இல்லாது முடிவடையத் தென்னிந்திய நாயக்கர் வம்சம் அங்கு ஆதிக்கம் பெற்றதோடு மீண்டும் தென்னிந்தியப் பண்பாட்டுச் செல்வாக்குப் பரவுவதற்கு வசதி ஏற்பட்டது. அந்தச் செல்வாக்கின் விளைவாகப் பதினெட்டாம் நூற்றாண்டில் நாயக்கர் பாணியில் சில கட்டிடங்கள் கண்டியிலே கட்டப்பட்டன.

பதினாறும் நூற்றாண்டின் இறுதியிலே தக்கிணத்துச் சுல்தானரசுக்களால் விஜயநகரப் பேரரசு தோற்கடிக்கப்பட்டதோடு விஜய நகரத்துப் பண்பாடும் வீழ்ச்சியுற்றது. விஜயநகர மன்னர்களுடைய ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்களாய் ஆட்சி புரிந்த நாயக்கர் வம்சத்தவர்கள் தென்னிந்தியாவின் பல பாகங்களிலே தொடர்ந்து பழைய பண்பாட்டை வளர்ப்பதில் ஈடுபட்டனர். விஜய நகர மன்னர் வளர்த்த திராவிடக் கட்டிடக்கலையை வளர்க்கும் பொறுப்பினை மதுரையில் ஆட்சிபுரிந்த நாயக்க வம்சத்தினர் ஏற்றுக் கொண்டனர். அவர்களுடைய ஆதரவுடன் திராவிடக் கட்டிடக்கலை மேலும் ஒருபடி வளர்ந்துசென்று தன் வளர்ச்சியின் இறுதிக்கட்டத்தை அடைந்தது. இது நடைபெற்றது பதினேழாம் நூற்றாண்டிலாகும். இந்த நூற்றாண்டில் வளர்ந்த திராவிடக் கட்டிடக்கலையின் பாணியை நாயக்கர் பாணி அல்லது மதுரைப் பாணி என்று அழைப்பர்.

இரண்டாம் பாண்டியப் பேரரசின் காலத்தில் இந்துக் கோயில்கள் பெருங் கோபுரங்களையும் வாயில்களையும் உடையனவாய் அமைக்கப்பட்டது போலவே நாயக்கர் காலத்திலும் கோபுரங்கள், வாயில்கள் ஆகிய கட்டிடப்பாகங்கள் சிற்பிகளுடைய கவனத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்காகி ஒரு சிக்கலான முறையிலே அமைக்கப்பட்டன. உண்மையில் நாயக்கர் காலத்திலே பாண்டியர் காலத்துக் கட்டிடக்கலையின் மறுமலர்ச்சியையே காண்கின்றோம் என்றுகூடக் கூறலாம். பாண்டியர் காலத்திலே நடந்ததுபோல இப்பொழுதும் பழைய கோயில்கள் பெருப்பிக்கப்பட்டுப் புதுப்புது அம்சங்கள் சேர்த்துக் கொள்ளப் பட்டன. அப்படியான புதிய அம்சங்களுக்குள் மிக முக்கியமானது கோயிலைச் சுற்றிக் கட்டப்பட்ட பிராகாரம். ஒன்றுக்கு மேற்பட்ட வீதிகளையும் மதில்களையும் கொண்ட பிராகாரங்கள் கோயிலைச் சுற்றிக் கட்டப்பட்டன. பொதுவாக ஒவ்வொரு பிராகாரத்திலும் நான்கு பெரும் கோபுரங்கள் நான்கு திக்குகளிலும் அமைக்கப்பட்டன. ஒவ்வொரு பிராகாரத்திற்குள்ளும் கோயிலின் பல்வேறு கட்டிடங்கள் இடம்பெற்றன. அவற்றுள் ஆயிரங்கால் மண்டபம், தெப்பக்குளம் போன்றவை குறிப்பிடத்தக்கவை. இவற்றைவிடக் காலப்போக்கிலே ஒவ்வொரு பிராகாரத்திற்குள்ளும் அங்காடிகள், இல்லங்கள் ஆகியவையும் கட்டப்பட்டு முழுக் கோயிலுமே ஒரு தனி நகரமாக விளங்குவதற்கு வழிவகுக்கப்பட்டது.

நாயக்கர் பாணியிலே தென்னிந்தியாவில் கட்டப்பட்ட கோயில்களுள் மதுரை, ஸ்ரீரங்கம், திருவாரூர், இராமேஸ்வரம், சிதம்பரம், திருநெல்வேலி, திருவண்ணாமலை, ஸ்ரீ வில்லிபுத்தூர், திருவானூர், ஜம்புகேஸ்வரம் ஆகிய இடங்களிலே உள்ள கோயில்கள் குறிப்பிடத்தக்கவை. சில கோயில்கள் முற்பட்ட காலத்திலே ஆரம்பிக்கப்பட்டிருந்து நாயக்கர் காலத்திலே கட்டிமுடிக்கப்பட்டவை. உதாரணமாக, சிதம்பரத்துக் கோயில் பத்தாம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப் பட்டிருந்தது. அக்கோயிலின் பல்வேறு பாகங்கள் பல்வேறு காலப் பகுதிகளிலே கட்டப்பட்டவை. மதுரையில் உள்ள கோயில் பூரணமாக நாயக்கர் காலத்திலே கட்டப்பட்டதாகும். இதனால் நாயக்கர் பாணியிலே கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு உதாரணமாக இக் கோயிலை எடுத்துக் கொள்வது வழக்கம். மதுரைக் கோயில் உண்மையிலே ஓர் இரட்டைக் கோயிலாகும்.

சுந்தரேஸ்வரர் கோயிலும் மீனாக்ஷி கோயிலும் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரே கோயிலாகக் காட்சியளிக்கின்றன. இக்கோயில் மூன்று பிராகாரங்களுக்கு மத்தியிலே காணப்படுகின்றது. வெளிப் பிராகாரத்தின் ஒவ்வொரு மதிலின் நடுவிலும் ஒரு பெருங் கோபுரத்தைக் காணலாம். இதன்பின் நடுவில் இன்னொரு பிராகாரம் இடம்பெறுகின்றது. இதன் நான்கு மதில்களின் நடுவிலும் கோபுரங்கள் காணப் படுகின்றன. ஆனால் இவை முந்திய பிராகாரத்தின் கோபுரங்களை விடச் சிறியவை. இதன்பின் இறுதியாக ஒரு சிறு பிராகாரம் இடம்பெறுகின்றது. இப்பிராகாரத்தின் கிழக்குப்பாகத்தில் மட்டுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கோபுரம் உண்டு. இக் கோபுரம் வழியாக நடுவில் உள்ள் கோயிலை அடையலாம். இறுதிப் பிராகாரத்திற்கு வெளியே மிக அழகான தூண்களைக் கொண்ட மண்டபம் (சுவாமி சிங்கோதனம்) காணப்படுகின்றது. மதுரைக் கோயிலில் மூன்று பிராகாரங்கள் மட்டுமே காணப்படுகின்றன. ஆனல் ஸ்ரீரங்கத்திலுள்ள ரங்கநாத சுவாமி கோயிலிலே எல்லாமாக ஏழு பெரும் பிராகாரங்கள் காணப்படுகின்றன.

இக்கோயில்களின் பிராகாரங்களைப் போலவே அவற்றின் கோபுரங்களும் நாயக்கர் பாணிக் கட்டிடங்களுக்குத் தனிச் சிறப்பைக் கொடுக்கின்றன. இக்கோயில்கள் பல பிராகாரங்களைக் கொண்டிருப்பதினுல் பல கோபுரங்களும் அவற்றில் இடம் பெறுகின்றன. உதாரணமாக, மதுரைக் கோயிலிலே எல்லாமாகப் பதினெரு கோபுரங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் மிகப் பெரியதும் மிக அழகியதும் என்று கருதப்படுவது தெற்கு வாயிலிலே காணப்படும் கோபுரமாகும். திராவிடக் கட்டிடங்களின் கோபுரங்களுள் இதுவே மிகப் பெரியதாகவும் மிகக் கூடிய சிற்ப வேலைப்பாடுகளையுடையதாகவும் அமைகின்றது.

கோபுரங்களுக்கு அடுத்தபடியாக இக்கட்டிடங்களில் முக்கியத்துவம் பெறும் அம்சங்கள் தூண்களாகும். நாயக்கர்பாணித் தூண்கள் முன்னைவிடச் சிக்கலான சிற்ப வேலைப்பாடுகளையுடைய தூண்கள். அவற்றின் கபோதம் முந்திய நிலையிலிருந்து மேலும் வளர்ச்சியடைந்து காணப்படுகின்றது. தூண்களின் கால்களில் அல்லது நடுப்பட்டைகளிலே தெய்வங்களின் அல்லது கோயிலுக்கு உபயஞ் செய்தவர்களின் பெரும் சிலைகள் செதுக்கப்பட்டுக் காணப்படுகின்றன. இக்கோயில்களிலே ஆயிரங்கால் மண்டபங்கள் போன்ற பாகங்களும் கட்டப்பட்டதனுல் பெருந் தொகையான தூண்கள் அமைக்கப்பட்டன. மதுரைக் கோயிலிலே ஏறக்குறைய ஈராயிரம் தூண்கள் காணப்படுகின்றன. இராமேஸ்வரத்திலும் அவ்வாறு பெருந் தொகையான தூண்களைக் காணலாம்.

இப்படியாக நாயக்கர் காலத்திலே வளர்க்கப்பட்ட திராவிடக் கட்டிடக்கலையே அதிக மாற்றமின்றி இன்றும் தென்னிந்தியாவிலே பேணப்பட்டு வருகின்றது. இக்கட்டிடப்பாணியின் செல்வாக்கு முற்பட்ட பாணிகளின் செல்வாக்கைப்போல இலங்கைக்கும் பரவியது. இதனுல் பிரித்தானியராட்சிக் காலத்தின்போதும் அதற்குச் சிறிது முன்பாகவும் இப்பாணியிலே சில கட்டிடங்கள் அமைக்கப்பட்டன. இவற்றுள் கண்டியிலே கட்டப்பட்ட பிள்ளையார் கோயில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு கொச்சிக்கடையிலே கட்டப்பட்ட பொன்னம்பலவா ணேஸ்வரர் கோவில், யாழ்ப்பாணத்துப் பரமேஸ்வராக் கல்லூரி யிலே காணப்படும் ராமநாதேஸ்வரம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இருபதாம் நூற்றூண்டிலே ஐரோப்பியராதிக்கத்திற்கு எதிரான இயக்கம் ஆரம்பித்தபோது பழைய கலைகளிலும் பண்பாட்டிலும் திடீரெனப் பலர் ஆர்வங் காட்டினர். அப்படியானவர்களுள் ஒருவ ராகிய பொன்னம்பலம் இராமநாதனுடைய முயற்சியினுல் தென் னிந்தியாவிலிருந்து சிற்பிகள் வரவழைக்கப்பட்டுப் பொன்னம்பலவா ணேஸ்வரர் கோயிலும் இராமநாதேஸ்வரமும் கட்டப்பட்டன. இந்த ஆர்வம் பௌத்தர்களிடையேயும் காணப்பட்டதினுல் களனி விகாரை போன்ற விகாரைகள் புதுப்பிக்கப்பட்டன. அப்பொழுது தென்னிந்தியச் சிற்பிகள் வரவழைக்கப்பட்டு இவ் விகாரைகள் திராவிட மரபின் சாயலையுடைய கண்டியப் பாணியிலே கட்டப் பட்டன.

சுதந்திரத்திற்குப் பின்னர் பழைய கோயில்கள் சிலவற்றைப் புதுக்கிக் கட்டுவதிலும் மறைந்துபோன கோயில்கள் இருந்த இடங் களிலே புதுக்கோயில்களைக் கட்டுவதிலும் பலர் ஈடுபட்டனர். இம் முயற்சியினுல் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற கோயில்களைக் கட்டுவிக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டது. இவ்விடங் களிலும் தென்னிந்தியச் சிற்பிகளே வரவழைக்கப்பட்டுப் புதிய நாயக்கர் பாணியிலே இக்கோயில்கள் கட்டப்படுகின்றன.

இவ்வாறு இலங்கையில் நாயக்கர் கட்டிடப் பாணியிலே பல புதுக் கோயில்கள் கட்டப்பட்டாலும் அவற்றுள் ஒன்ருவது தென் னிந்தியக் கோயில்களிலே காணப்படும் பல பிராகாரங்களையோ பெரும் கோபுரங்களையோ உடையதாக அமையவில்லை. ஈழத்தி லுள்ள கோயில்கள் அனைத்தும் திராவிடப் பாணியிலே கட்டப்பட்ட சிறிய கோவில்களாகவே காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

# தகவல் தேட்டத்திற்கான நூல்களும் கட்டுரைகளும்


## பொது

1. Percy Brown, **Indian Architecture,** I & II, (Bombay 1959).
2. A. K. Coomaraswamy, **History of Indian and Indonesian Art.** (New York 1927).
3. J. Fergusson, **History of Indian and Eastern Architecture,** (London 1910).
4. F. H. Gravely, **An Outline of Indian Temple Architecture, Bulletin of the Madras Government Museum,** New Series, General Section, Vol. III, pt. 2 (Madras 1960).
5. G. Jouveau-Dubreuil, **Archeologie du Sud de l'Inde,** (Paris 1914)
6. G. Jouveau-Dubreuil, **Dravidian Architecture,** ed. with notes by S. Krishnaswamy Aiyangar, (Madras 1917).
7. T. V. Mahalingam, **Art and Architecture,** Paper read at the IInd International Conference - Seminar of Tamil Studies, Jan. 1968, Madras (Madras 1968).
8. K. A. Nilakanta Sastri, **History of South India,** (Madras 1955).
9. **Temples of South India,** The Publications Division, Govt of India, (New Delhi 1960).

## பல்லவர் பாணி

1. D. Barrett, 'Review of **The Shrine of Upulvan at Devundara (by S. Paranavitana)', Journal of the Royal Asiatic Society** (Great Britain), 1954, p. 96 (London).
2. H. C. P. Bell, **Archaeological Survey of Ceylon Annual Reports for 1892, 1893, 1902, 1910/11** (Colombo).
3. A.M.Hocart, 'Archaeological Summary' **Ceylon Journal of Science,** G, I, pp. 94, 148 (Colombo).
4. A. H. Longhurst, **Pallava Architecture,** Part I (Simla 1924), Part II (Calcutta 1928) & Part III (Calcutta 1930).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. I. Mahadevan, **Tamil Brahmi Inscriptions of the Sangam Age**, Paper Read at the IInd International Conference, - Seminar of Tamil Studies, Jan. 1968, Madras (Madras 1968).

6. S. Paranavitana, **The Shrine of Upulvan at Devundara**, Memoirs of the Archaeological Survey of Ceylon, VI, (Colombo 1953).

7. S. Paranavitana, 'Tamil Householders' Terrace Anuradhapura' **Annual Bibliography of Indian Archaeology**, XIII, p 13 (Leyden 1940).

8. S. Paranavitana, 'Tamil Householders' Terrace', **Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society**, XXXV, No. 93, 1940, p. 54 (Colombo).

9. S. Paranavitana, **Archaeological Survey of Ceylon Annual Reports for 1936, 1952**, (Colombo).

10. S. Paranavitana, 'Architecture (Ceylon)', **Encyclopaedia of Buddhism Volume of Specimen Articles,** ed. G. P. Malalasekara, p. 15 f. (Colombo 1957).

11. K. R. Srinivasan, **Cave Temples of the Pallavas**, (New Delhi 1964).

12. K. R. Srinivasan, 'The Pallava Architecture of South India', **Ancient India**, No 14 (New Delhi 1958).

## சோழர் பாணி

1. H. C. P. Bell, **Archaeological Survey ot Ceylon Annual Report for 1900, 1901, 1902, 1906, 1908, 1909, 1910/11** (Colombo).

2. S. Paranavitana, **Archaeological Survey of Ceylon Annual Report for 1933, 1934, 1940-45, 1963, 1954**.

3. S. Paranavitana, **Art and Architecture of Ceylon: Polonnaruva Period**, (Colombo 1964).

4. S. Paranavitana, 'Velgam Vehera', **Encyclopaedia of Buddhism-Volume f Specimen Articles,** ed. G. P. Malalasekara, p. 83 (Colombo 1957).

5. S. Paranavitana, 'Civilization of the Period: Religion, Literature and Art', **University of Ceylon History of Ceylon**, ed. H. C. Ray, II, Pt. 2, pp. 589 - 603 (Colombo 1960).

6. V. Smith, **A History of Fine Art in India and Ceylon**, Revised by K. de B. Codrington (Oxford 1930).

7. கா. இந்திரபாலா, 'மண்டலகிரியில் பண்டித சோழ ஈஸ்வரம்,' **வீரகேசரி**, 8.5.1969 (கொழும்பு).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாண்டியர் பாணி


1. H. C. P. Bell, **Archaeological Survey of Ceylon Annual Report for 1907.**
2. S. Paranavitana, **Art and Architecture of Ceylon: Polonnaruva Period.**
3. S. Paranavitana, 'Archaeological Summary', **Ceylon Journal of Science, G II,** pp. 160 - 161 (Colombo).


## விஜயநகர பாணி


1. H. C. P. Bell, **Archaeological Survey of Ceylon Annual Report for 1910 - 1911.**
2. H. C. P. Bell, **Report on the Kegalla District** (Colombo 1892).
3. J. Cartman, **Hinduism in Ceylon** (Colombo 1957).
4. H. W. Cave, **The Book of Ceylon,** (London 1908).
5. A. M. Hocart, 'Archaeological Summary', **Ceylon Journal of Science, G, I,** p. 148.
6. Nandasena Mudiyanse, **The Art and Architecture of the Gampola Period,** (Colombo 1965).
7. S. Paranavitana, **Archaeological Survey of Ceylon Annual Report for 1953.**
8. S. Paranavitana, 'Architecture (Ceylon), **Encyclopaedia of Buddhism - Volume of Specimen Articles,** p. 15.
9. S. Paranavitana, 'Civilisation of the Period: Literature and Art', University of Ceylon **History of Ceylon,** I, pt. 2, pp. 778-788.


## நாயக்கர் பாணி


1. H. W. Cave, **The Book of Ceylon.**
2. A. K. Coomaraswamy, 'Recent Kandyan Architecture', **Sandaresa** Oct. 18, 1905 (Colombo).
3. D. T. Devendra, **Ceylon Today,** Vol. II, No. 4 pp. 63-66 (Colombo).
4. J. P. Lewis, 'Sinhalese and Kandyan Architecture', **The Ceylon Antiquary and Literary Register,** VI, pt. 2, Oct. 1920, pp. 63-66 (Colombo).
5. S. Paranavitana, **Archaeological Survey of Ceylon Annual Report for 1940-45.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலில் வரும்
## சில கட்டிடக் கலைச் சொற்கள்

| | |
|---|---|
| அதிஷ்டானம் : | விமானம், மண்டபம் ஆகியவற்றின் அடித் தளம். |
| அந்தராளம் : | மண்டபத்துக்கும் கர்ப்பக் கிருகத்துக்கும் இடையில் உள்ள பாதை அல்லது அறை. |
| அறுகல் : | கல்லிலோ மண்ணிலோ அறுக்கப்பட்ட கல் - Brick. |
| அர்த்த மண்டபம் : | கர்ப்பக்கிருகத்துக்கு முன்பாக (முன் மண்ட பத்துக்கும் கர்ப்பக்கிருகத்துக்கும் இடை யில்) உள்ள இருதூண் மண்டபம். |
| கர்ப்பக்கிருகம் : | பிரதான தெய்வம் இடம்பெறும் மைய மான பாகம். |
| கோபுரம் : | பிரதான வாசல். |
| சிகரம் : | விமானத்தின் மேற்பாகம். |
| தூணொப்பு : | அரைத்தூண் எனவும் பெயர்பெறும். இதற்கு ஆணியொட்டிக்கால் என்ற பழைய பெயரும் உண்டு. தனித்தூணாக நில்லாது, தூண் வடிவிலே சுவரோடு ஒட்டிக்கொண்டு நிற்கும் பாகம் – Pilaster. |
| பத்மபந்தனம் : | தாமரை இதழ்களைத் தொடையாகக் கொண்டு வரிசையாக அமைந்துள்ள வேலைப்பாடு. |
| பலகை : | தூணின் மேற்பாகத்தில் ( தலைப்பில் ) அமைந்துள்ள தட்டையான பாகம். |
| புடைப்புச் சிற்பம் : | தனிநிற்கும் சிற்பமாக அல்லாது சுவரிலோ அல்லது வேறு தட்டையான இடத்திலோ செதுக்கப்பட்டுக் காணப் படும் சிற்பம் - Relief. |
| போதிகை : | தூணின் மேற்புறத்தில் பலகைக்கு மிண்டு போல அமைந்துள்ள வளைவான கொடுங்கை அல்லது வேலைப்பாடு. |
| நடுப்பட்டை : | தூணின் நடுப்பாகம். |
| மகர தோரணம் : | வாசலில் முதலைபோன்ற மகரத்தின் வாயி லிருந்து வெளிப்படும் சிற்பவேலைப்பாடு. |
| விமானம் : | விக்கிரகம் அமைந்துள்ள பிரதான ஆல யப் பகுதி. இது பொதுவாகத் தேர் போன்ற உருவத்தில் அமைந்துள்ளது. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடப்பெயர் வரிசை

(இந்நூலில் வரும் முக்கியமான ஈழத்து இடங்கள்)

| இடப்பெயர் | குறிப்பாக அமைந்துள்ள இடம் | | மாகாணம் |
|---|---|---|---|
| அத்தாகட | 08.37 வ | 80.34 கி | வ. ம. மா. |
| அநுராதபுரம் | 08.21 வ | 80.23 கி | வ. ம. மா. |
| அலவதுர | 07.08 வ | 80.20 கி | ச. மா. |
| அவிஸ்ஸாவேல்ல | 06.57 வ | 80.12 கி | மே. மா. |
| கடலாதெனி | 07,15 வ | 80.33 கி | ம. மா. |
| கண்டி | 07.18 வ | 80.38 கி | ம. மா. |
| குருந்தன்மலை | 08.43 வ | 80.29 கி | வ. மா. |
| கேகாலை (காகல்ல) | 07.07 வ | 80.20 கி | ச. மா. |
| கொக்கிளாய் | 09.00 வ | 80.57 கி | வ. மா. |
| கொச்சிக்கடை | 07.16 வ | 79.51 கி | மே. மா. |
| சீதாவக | 06.56 வ | 80.13 கி | ச. மா. |
| சுவாமிமலை (கோணேசர் மலை) | 08.35 வ | 81.15 கி | கீ. மா. |
| திருகோணமலை | 08.34 வ | 81.14 கி | கீ. மா. |
| திருக்கேதீஸ்வரம் | 08.54 வ | 79.56 கி | வ. மா. |
| திருக்கோயில் | 07.07 வ | 81.51 கி | கீ. மா. |
| தென்னமரவாடி | 08.58 வ | 80.56 கி | கீ. மா. |
| தெவிநுவர | 05.55 வ | 80.35 கீ | தெ. மா. |
| பதவியா | 08.48 வ | 80.35 கி | வ. ம. மா. |
| புதுமுத்தாவ | 07.45 வ | 80.06 கி | வ. மே. மா. |
| புலத்கொஹுபிடிய | 07.06 வ | 80.20 கி | ச. மா. |
| பெரிய குளம் | 07.41 வ | 81.42 கி | கீ. மா. |
| பொலன்னறுவை | 07.56 வ | 81.00 கி | வ. ம. மா. |
| நாலந்தை | 07.40 வ | 80.38 கி | ம. மா. |
| மாகல்ல | 07.43 வ | 80.07 கி | வ். மா. |
| மாதோட்டம் | 08.57 வ | 79.58 கி | வ. ம. மா. |
| முன்னேஸ்வரம் | 07.35 வ | 79.48 கி | வ. ம. மா. |
| யாப்பஹுவ | 07.49 வ | 80.19 கி | வ. ம. மா. |

வ = வடக்கு ; கி = கிழக்கு ; மா = மாகாணம் ;
வ. ம = வடமத்திய ; ச = சப்பிரகமுவ ; மே = மேல்
ம = மத்திய ; கீ = கீழ் ; தெ = தென் ; வ. மே = வடமேல்

12054.5.C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டவணை



அத்தாகட, 18
அநுராதபுரம், 2,3.8,9,22,28
அலவதுர, 44-45
அவிஸ்ஸாவேல்ல, 51
அம்பெக்க, 49
ஆதாஹநமளுக் கெடிகே, 49
ஆந்திரம், 3
ஆரியச்சக்கரவர்த்திகள், 33
இராமேஸ்வரம், 54, 55
இராஜசிம்மபாணி, 6
உத்தமசோழ ஈஸ்வரம், 18-19
உற்பலவண்ணன் (உபுல்வண்) ,7
கடலாதெனி, 44, 45-47, 48
கணேகொட, 44
கணேஸகோயில், 50
கணேஸ்வராசாரியார், 45, 46
கண்டி, 49, 53, 55
கந்தசாமிகோயில் 50
கந்தசாமிமலை, 29
கந்தளாய், 25-27
கம்பளை, 46
காளிகோயில், 13
காவிரிப்பூம்பட்டினம், 4
கிளாக், ஆதர், 36
குருங்கம, 29
குருநாகல், 27
குருந்தனூர்மலை, 28
குருந்தன்மலை, 28
குலோத்துங்கசோழன்(I), 11, 27
குளக்கோட்டன் 35-36
கேகாலை, 44, 51
கொக்கிளாய், 29
கொச்சிக்கடை, 56
கொடகும்புர, சாள்ஸ், 21
கொன்ஸ்தன்தீன் தஸாத
நொரொஞ்ஹா, 36
கோணேசர், 34
சாமுண்டி, 28
சிதம்பரம், 54
சிவதேவாலயம், (I) 23, 32-33
(II)14,20,23,24,
பிற, 13,14,15,16,22,23,29,
சிவன்கோயில், 13
சிவஞான சங்கரர் கோயில், 83
சீதாவக, 51, 2
சுத்தமல்லியாழ்வார், 27
சுந்தரபாண்டியன், 31
சுந்தரேஸ்வரர் கோயில், 54
சுவாமிமலை, 35
சூளவங்ஸ, 23
சோடகங்கன், 35-37
தந்ததாதுக்கோயில், 39
தமிள தூப, 23
தம்பதெனி, 38
தர்மகீர்த்திஸங்கராஜர்44,45,46
தளதாய்ப் பெரும்பள்ளி, 26
தக்ஷிண கைலாசம், 26
தக்ஷிண கைலாச புராணம், 35
தாழி குமரன், 17
திருகோணமலை, 12,19-20,26,33,
34-37, 40
திருகோணசல புராணம், 35
திருக்கேதீஸ்வரம், 9,18,56
திருக்கோணேஸ்வரம், 9,26,34,
35-37, 56
திருக்கோவில், 33, 37-38
திருஞானசம்பந்தர், 34
திருநெல்வேலி, 54
திருவண்ணமலை, 54
திருவாரூர், 54
திருவாலூர், 54
திருவிராமீஸ்வரம், 18
தீகவாபி, 37
தென்கிழக்காசியா, 1, 6-7
தென்னமரவாடி, 29
தென்கைலாசம், 26
தெவிநுவர, 7, 37, 50
தேவேந்திரமூலாச்சாரி, 45
பதவியா, 12, 15-16, 23
பண்டிதசோழ ஈஸ்வரம், 19
பரணவிதான, செனரத், 7,21,
22, 23
பரமேஸ்வராக் கல்லூரி, 56
பரெண்டி கோயில், 51-52


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராக்கிரமபாகு (I), 22-23, 30
பராக்கிரமபாண்டியன், 30
பிராமி, 2
பிள்ளையார் கோயில் (கண்டி), 55
புதுமுத்தாவ, 27
புலத்கொஹொபிடிய, 44
புவநேகபாஹு (I) 39
பெரியகுளம், 19-20
பெல், எச். ஸி. பி., 25
பேலூர், 40, 45
பொன்னம்பலவாணேஸ்வரர்
கோயில், 46
பொலன்னறுவை, 12,13,14,15,
20,22,23,24,25,27,28,29,30,31,
32,33,34,38,40,44,48,50
போர்த்துக்கீசர், 36,51,52
நகரீசர்கோயில், 50
நந்திவர்மன், 6
நாலந்தை, 8
மகேந்திரவர்மன், 5-6
மதகொட, 52
மண்டலகிரி (மதிரிகிரிய), 19
மதுரை, 53,54,55
மஹாகணதராவ, 28
மஹாவங்ஸ, 2
மஹாசேன, 35
மாகல்ல, 27
மாகமன்னன், 23, 34
மாதோட்டம், 12, 17-18
மாமல்லபாணி, 6
முன்னேஸ்வரம், 50
மொரகொட, 16
யாப்பஹுவ, 33,38-40
யாழ்ப்பாணம், 43
யாழ்ப்பாணவைபவமாலை, 35
ராமநாதேஸ்வரம், 56
ராஜராஜன் (I)10,11,12,14,17,19
ராஜராஜபுரம், 17
ராஜராஜப் பெருந்தெரு, 17
ராஜராஜப் பெரும்பள்ளி, 19-20
ராஜராஜேஸ்வரம், 16,17,18
ராஜஸிங்ஹ (I), 51
ராஜாதி ராஜஸிங்ஹ, 45
ராஜேந்திர சோழன்(I) 11,12,14
18,19
ரிதிவிஹார, 49
ரோஹண, 37
லங்காதிலக, 48-49
லூயிஸ் ஜே. பி., 28
வன்னி, 28,29,3
வவுனியா, 2
வானவன் மாதேவி ஈஸ்வரம்,
14-15, 32, 33
விக்கிரமசலாமேக, 27
விக்கிரம சலாமேக ஈஸ்வரம் 27
விக்கிரசலாமேகபுரம், 27
விக்கிரமபாகு (I), 27
வில்ஸன், மைக், 36
விஜயபாகு (I) 25-26
விஜயராஜ ஈஸ்வரம், 26, 27
விஜயராஜச் சதுர்வேதி
மங்களம் 26
விஷ்ணு கோயில், 13, 24, 25
வீரப் பெருமாள், 27
வெல்கம் வெஹெர, 19-20
வெஸ்ஸந்தர ஜாதக, 47
வேரகல, 28
ஜனநாத மங்கலம், 12
ஜம்புகேஸ்வரம், 12
ஜயவர்தனபுரக்கோட்டை, 50
ஜொங்க்லஸ், ரொட்னி, 36
ஸந்தேஸ, 50
ஸாதவாஹனர், 3
ஸோம் நாத்புர், 40
ஸ்தபதி கணம், 46
ஸ்தபதி ராயர், 45, 48
ஸ்டில், ஜே., 28, 29
ஹலேபீடு, 40
ஹிங்குரக்கம 28
ஸ்ரீரங்கம், 54, 55
ஸ்ரீவில்லிபுத்தூர், 54

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாலந்த கெடிகே

(இலங்கைத் தொல்பொருளாய்வுத் துறையினருடைய அனுமதியுடன் இது பிரசுரிக்கப்படுகின்றது.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**வானவன் மாதேவி ஈஸ்வரம்**

(இலங்கைத் தொல்பொருளாய்வுத்துறையினருடைய அனுமதியுடன் இது பிரசுரிக்கப்படுகின்றது.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடலாதெனிக் கோயில்

(இலங்கைத் தொல்பொருளாய்வுத் துறையினருடைய அனுமதியுடன் இது பிரசுரிக்கப்படுகின்றது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**முதலாம் சிவதேவாலயம், பொலன்னறுவை**

(இலங்கைத் தொல்பொருளாய்வுத் துறையினருடைய அனுமதியுடன் இது பிரசுரிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்தற்கரிய அரிய நூல்

கலாநிதி க. கைலாசபதி
கவிஞர் இ. முருகையன்

எழுதிய

**கவிதை நயம்**

விலை ரூ. 3.00

---

# Dravidian Architecture in Ceylon

By

Dr. K. Indrapala

Publishers :

**Vijayaluckshmi Book Depot,**
248, Galle Road,
Wellawatte — Colombo-6.

**Rs. 2.75**

Printed at Kumaran Press Colombo-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org